

# தமிழரசு

16-5-1984 75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — வைகாசி 3



மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்
5.5.'84ல் குடியரசுத் தலைவர்
திரு ஜெயில்சிங் அவர்களை
டெல்லியில் சந்தித்து,
பிறந்த நாள் வாழ்த்துக்
கூறினார்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்திந்திய தெலுங்கு மாநாட்டில் (6.5.'84) மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.





மதுரை வண்டியூரில் சினிமா தியேட்டர் விபத்தில் காயமுற்று மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30.4.'84ல், பார்த்து ஆறுதல் கூறினார்.

# சிறப்புக்குரிய தமிழகக் காவல் துறை

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

பல காரணங்களால் பல பிரிவுகளுக்குத் தங்களைச் சொந்தக்காரர்கள் ஆக்கிக்கொண்டு பணியாற்றி வருகிறார்கள், காவல்துறையினர். அவர்கள் அத்தனை பேருக்கும் நான் அறிவுரை கூறுவதைவிட, சில யோசனைகளை அவர்கள் முன் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நல்லவன் என்று பேர் எடுப்பது மிகவும் சிரமமான காரியம். இவரைவிட அவர் நல்லவர் என்று பேர் பெற்று விட்டால் மட்டும் போதாது. இவர்தான் நல்லவர் என்று சொல்லத்தக்க விதம் வேண்டும். அதுபோல் இவர்கள்தான் நல்லவர்கள் என்ற முறையில் தமிழகக் காவல்துறையினர் மென்மேலும் நாம் பெருமைப்படத்தக்க வகையில் பேர் எடுக்க வேண்டும் என்பதுதான் எனது பேராசை.

தமிழகக் காவல்துறை அனைத்திந்தியாவிற்கும் பெருமை சேர்ப்பது மட்டுமல்ல-உலகத்தில் உள்ள நாடுகளின் காவல் துறையினரும் மக்களும் தங்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால், அதைத் தீர்ப்பதற்கு தமிழ்நாட்டுக் காவல் துறையினரின் நடவடிக்கைகளைப் பார்த்து அறிந்து கொள்ளமுடியும் என்ற நிலை வரவேண்டும் - இதுதான் எனது பேராசை. இது பேராசை என்றாலும் இது நடக்கும் என்று நம்புகிறேன்.

'முகமூடித் திருடர்களை விரைவில் பிடித்து விடுவோம், அந்தச் சாதனைக்குரிய விருதை அடுத்த ஆண்டு இதே திடலில் நிச்சயமாகப் பெறுவோம்' என்று டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுதே இதற்காகக் காவல் துறையினருக்கு விருது கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

முகமூடித் திருடர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்று தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்துதான் வருகிறார்கள். பொது மக்களை நான் வேண்டிக் கொள்கிறேன்-சந்தேகத்துக்குரியவர்களைப் பார்த்தால் தயவுசெய்து காவல்துறையினருக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமூகவிரோதிகள் பெருகமாட்டார்கள்.

குற்றம் செய்பவர்கள் தப்பித்துச் செல்ல முடியாதபடி - கயவர்கள் தப்பித்துச் செல்ல முடியாதபடி-அவர்களை விமானத்தில்சென்று தாக்கிப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அதற்குரிய விமானங்களை வாங்க வேண்டும் என்பதற்குரிய அனுமதியை உள்துறை அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம்.

அட்டை சொல்லும் செய்தி:

காவல்துறையினரும் மனிதர்கள்தான். நாட்டுமக்களின் நல்வாழ்வுதான் முக்கியம் என்று கருதி அவர்கள் செயல்பட்டு வருவது நமது உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது. அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காவல்துறையினர் எப்போதும் துப்பாக்கியுடன் செல்ல வேண்டும். எங்கிருந்தாலும் தொடர்பு கொண்டு பேசும் வகையில் வயர்லஸ் அவர்களிடம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

இவற்றின் மூலம் நல்ல பயிற்சி பெற்று, உடல் நலத்தை தப்பேணிக் காவலர்கள் தயாராக இருப்பார்களானால், தீயவர்கள் தப்பித்துச்



செல்ல முடியாது. காவலர்களுக்கும் ஆபத்து வராது.

தூற்றுபவர்கள் தூற்றட்டும் என்ற முறையில், பாராட்டுக்களையும், இகழ்ச்சிகளையும் புகழ்ச்சிகளையும் எதிர்பார்க்காமல் காவல் துறையினர் பணியாற்றுகிறார்கள். தன்னலம் கருதாது சேவை செய்ய வேண்டும். அமைதிக்குப் பயன்படும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதும் காவலரின் பொறுப்புகள் ஆகும் என்பதை அழுத்தமாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1977ல் நான் பதவி ஏற்றபோது எத்தனை போராட்டங்கள் எத்தனைமுறை நடத்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — வைகாசி 3
மலர் : 14 இதழ் : 22
16-5-1984

தப்பட்டன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இனிமேல் அப்படியெல்லாம் செய்தால் காவலர்கள் தடுத்து நிறுத்துவர் என்பது மட்டுமல்ல, பொது மக்களும் கூர்ந்து கவனிக்கிறார்கள். போராட்டங்களை அவர் கள் பொருட்படுத்தமாட்டார்கள்.

மற்றப்பணியாளர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவது போல, காவல்துறையின ருக்கும் வீட்டுவசதி செய்து தர வேண்டும். அவர்கள் ஓய்வு பெறும்போது சொந்தமாக ஒரு வீடு கட்டி வைத்துக் கொள்ளவேண்டும்.

காவலர்களும் குடும்பத்திலிருந்துதான் வருகிறார்கள். ஆகவே காவல்துறையினர் மட் டும் விதிவிலக்கல்ல. காவல்துறையினர் நம் பிக்கையோடு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஆசை. காவல் துறையினரின் நாணயம், நேர்மை, தியாகம், ஆகியவற்றில்தான் தமிழக மக்களின் எதிர் காலம் உன்னதமாக இருக்கும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்படுமானால் தமிழகக் காவல் துறைப்படையை அனுப்பு என்றால், அப்படி அனுப்புகிற அளவுக்குப் பெருமையானவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்.

சென்னை காவல்துறையினர் பல்வேறு விழாக்காலங்களிலும் மிகுந்த பொறுப்புடன் நிர்வாகம் செய்தவர். சிறு அசம்பாவிதம் கூட நேராமல் பார்த்துக்கொண்டனர். மாவட் டங்களிலும் காவல்துறையினர் பொறுப்புடன் கடமையாற்றி வருகிறார்கள். அதன் காரண மாக அமைதி நிலவுகிறது.

காவலர்களே! நீங்கள் வாழுங்கள்! நாட்டை வாழ வையுங்கள்!

*(1.5.'84ல் நடைபெற்ற முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா -சேமப்படைக் காவலர் குடியிருப்பு திறப்பு விழா ஆகிய வற்றில் ஆற்றிய உரையிலிருந்து.)*

## காவல் துறையினர் அளித்த நிதி

ராஜரத்தினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற காவலர்க்கு முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா — சேமப்படைக் காவலர் குடியிருப்பு திறப்பு விழா ஆகியவற்றில், 5 இலட் சத்து 45 ஆயிரத்து 454 ரூபாய்க்குரிய காசோ லையை காவல் துறையின் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு ராதாகிருஷ்ணன் அளித்து, ''முதல்வர் அவர்கள் இந்தத் தொகையை எந்தத் திட்டத்திற்கு வேண்டுமென்றாலும் பயன் படுத்திக் கொள்ளலாம்'' என்று குறிப்பிட்டார்.

அதனைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், ''நீங்கள் இலட்சக் கணக் கில் பணம் அளித்ததற்கு நன்றி. இந்தத் தொகை இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்கு அடிப் படைக் கருவூலமாக அமைகிறது என்று சொல் லிக் கொள்கிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

## ஆயிரம் விளக்கில் ஆயிரம் வீடுகள்

குடிசைப் பகுதிமாற்று வாரி யத்தின் சார்பில் கட்டப்பட்ட ஆயிரம் வீடுகளை-அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருக்கும் கங்கைக் கரைபுரம், வன்னியபுரம், புஷ்ப வனம் பகுதி-3, ஜோகித் தோட் டம், டாக்டர் தாமஸ் சாலை ஆகிய இடங்களில் கட்டப்பட் டுள்ள இந்த வீடுகளின் திட்ட மதிப்பீடு ரூ.140.38 இலட்சமா கும்.

ஒவ்வோர் வீடும் 223 சதுர அடி பரப்பளவுள்ளதாகக் கட்டப் பட்டுள்ள இந்தக் குடியிருப்பு களின் திறப்புவிழா டாக்டர் தாமஸ் சாலையில் (6.5.84) சிறப் புற நடைபெற்றது.

குடிசைப் பகுதி மாற்று வாரி யத் தலைவர் திருமதி ஈ.வே.கி. சுலோசனா சமபத் வரவேற் புரையாற்றி, வாரியப் பணி களை விளக்கினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.க.இராசாராம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பங்கேற்ற மாண்பு மிகு பால்வளத்துறை அமைச் சர் அவர்கள், எந்தெந்த வீடு யார் யாருக்கு என்பதற்கான அடையாள அட்டைகளை வழங் கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக் டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைந்த ஆயிரம் குடியிருப்பு களைத் திறந்து வைத்துச் சிறப் புரையாற்றினார்.

இதற்குச் சற்று முன்பாக, அங்கே அமைக்கப்பட்டிருந்த இரட்டை இலைச் சின்னத்தை அகற்றச் சொன்ன அவர், தமது உரையில் ''இது அரசு விழாவா கும்; இங்கே அரசியல் சின்னங் களை அமைப்பது முறையல்ல; ஆகவே இங்கே வைக்கப்பட்டி ருந்த கட்சிச் சின்னத்தை எடுக் கச் சொல்லிவிட்டேன். ஆர்வத் தின் காரணமாக இதைச் செய்தி ருக்கிறார்கள். அரசு விழாக்களில் கட்சி விளம்பரங்கள் கூடாது'' என்று குறிப்பிட்டார்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் ''1978ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தில், பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி யைப் பார்க்க வந்தேன். அப் போது இங்கிருந்த துர்நாற்றம், நோய்கள் பற்றுவதற்கான வசதி எல்லாம் வெள்ளம் வடிந்த பிற கும் குடிசைகளிலே படிந்துபோய் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்களே என்று வருந்தினேன்; அதன் விளைவே இந்த வீடுகள்'' என்று குறிப்பிட் டார்.

விழா முடிவில், குடிசைப் பகுதி மாற்று வாரிய உறுப்பினர் திரு. சைதை என். கண்ணன் நன்றி கூறினார்.



# தமிழவேள் தமிழவேல்

தமிழவேள் உமாமகேசுவரப் பெருந்தகையார், நாவலர் ந.மு. வேங்கடசாமிப் பெருந்தகையார் இருவரின் நூற்றாண்டு விழா ஏப்ரல் திங்கள் 21,22 ஆகிய தேதிகளில் தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் வளர்ச்சித் துறையும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து இந்த விழாவைக் கொண்டாடின.

21-ந் தேதி மாலை திருவையாறு அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசையுடன் விழா துவக்கம் ஆகியது. முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு ச.இராமநாதன் அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தமிழ்த் தொண்டு செய்பவர் எவராக இருந்தாலும் அவரைக் கடவுள் என வழிபடுவது எங்கள் தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள் ஆகும்.''
தமிழவேள் நூற்றாண்டு நினைவுக் கட்டடத்தை முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் திறந்து வைத்தார். சட்ட மேலவைத் துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன் விழாவைத் தொடக்கி வைத்தார்.

அவர் தெரிவித்தார்:

''தமிழை வளர்ப்பதற்காகச் சங்கத்தை ஏற்படுத்தினார் தமிழவேள் உமாமகேசுவரனார். பின்னர் தமிழ்க் கல்லூரி தொடங்கினார். அக் கல்லூரி தமிழ்ப் பல்கலைக் கழகமாக ஆக வேண்டும் என முதன் முதலில் சொல்லிய பெருந்தகை தமிழவேள் அவர்கள் தான். அவரது ஆசை, மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சி செய்யும் இந்தக் காலத்தில்தான் நிறைவேறியுள்ளது.

''நாட்டார் வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சி இல்லை, சொந்த வீடு கூட அவருக்குக் கிடையாது. ஆனால் இன்று தமிழ் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியராகலாம் எனச் சட்டம் போடப்பட்டுள்ளது. நலிவுற்ற தமிழாசிரியர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''சான்றோர்கள் பாராட்டப்படுகின்றனர். அதற்குக் காரணம் என்ன? பி.ஏ., எம்.ஏ., பட்டமா? தமிழ்த் தொண்டா? பதவியில் இருப்பதனாலா? பொதுமக்களுக்குப் பணி செய்வதாலா? ஒரு மனிதன் படிப்பாலோ பட்டத்தாலோ, பதவியாலோ, எழுத்தாற்றலாலோ பேச்சாற்றலாலோ, செல்வத்தாலோ, தொண்டினாலோ மேன்மையடைந்துவிடமுடியாது. மேன்மையை அடைய ஒரே ஒரு வழி, ஒழுக்கமாக வாழ்வதுதான்! ஒப்பற்ற ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மேன்மையடைந்தனர் தமிழவேள் அவர்களும், நாட்டார் அவர்களும்.''

தமிழவேள் அவர்களின் சிறப்பு மலர் ஒன்றினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண் இயக்குநர் திரு டி.கே. சீனிவாசன் அவர்கள் வெளியிட, முதற்படியைப் பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணனார் பெற்றுக் கொண்டார்.

திரு டி.கே.சீனிவாசன் தமது உரையில் குறிப்பிட்டார்.

''புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்து பின்னர்தான் நாட்டுத் தலைவர்களின் பிறந்தநாளை அரசு கொண்டாடும் வழக்கம் உருவாகியிருக்கிறது.

''கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒரு தடாகம். அதனை நிறுவியவர் உமாமகேசுவரனார். அந்தத் தடாகத்தில் மலர்ந்த தாமரை வேங்கடசாமி நாட்டார். உமாமகேசுவரனார் ஒரு வீணையைச் செய்தார். அதனை மீட்டும் விரல் எது என ஆராய்ந்து பார்த்தார். அது வேங்கடசாமி நாட்டாரின் விரல் என்பதைக் கண்டார்.

''நாட்டார் அவர்களிடம் பாரதியார் சிலப்பதிகாரம் குறித்துத் தமது சந்தேகத்தைக் கேட்டுத் தீர்த்துக் கொண்டார் என அறிகிறோம். பாரதி 'கல்விசிறந்த தமிழ்நாடு உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று சொன்னான். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்



நாடு' என்று பாடினான். இந்த இரண்டு இலக்கிய வாணர்களின் பெயர்களைக் குறிப்பிட்ட அவன் அடுத்து, 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி யாரம் படைத்த தமிழ்நாடு' என்று சொன்னான். நாட்டார் விளக்கம் கேட்டு, சிலப்பதிகா ரத்தின் சிறப்பை பாரதி நன்கு அறிந்துகொண்டான். அதன் தாக்கமே அந்நூலுக்கு அவன் கூறிய புகழ்மாலை''.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளி யீடான கட்டுரைப் பூங்கா, என் னும் மலர் ஒன்றைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் சிலம் பொலி சு.செல்லப்பன் வெளி யிட்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் தெரிவித்தார்.

''நூலை வாங்குவது மட்டும் போதாது. அவசியம் படிக்கவேண் டும். எதைப் படிக்க வேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என் பதைத் தெரிவிக்க, பாவேந்தர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். நூலைப் படி எனத் தொடங்கும் அந்தக் கவிதையில் படி என்னும் சொல் 32 இடங்களில் வருகிறது.''

முதற் படியைப் பெற்றுக் கொண்ட பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் திரு மு. சு. கோவிந்த சாமி தமது உரையில் குறிப் பிட்டார்:

''தமிழ்த்தொண்டு செய் தோன் சாவதில்லை என்று பாவேந்தர் கூறியதற்கிணங்க, நாட்டுக்காக வாழ்ந்த நமது தமிழவேள்அவர்கள் சாகவில்லை; தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் கொலுவிருக்கின்றார்''.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்து டன் பல வகையிலும் தொடர்பு கொண்ட ஏழு பெருமக்கள் பாராட்டப் பெற்றனர். தலை வர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர் கள் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்.

திரு அ.கு.வேலன் சங்கப் புரவலர் என்னும் பட்டமும், திரு வெள்ளைவாரணனார் 'செந் தமிழ்ச் சான்றோர்' என்னும் பட் டமும், பாவலரேறு ச. பாலசுந் தரம், 'தொல்காப்பியப் பேரறி ஞர்' என்னும் பட்டமும், திரு. இரா.கோவிந்தராசர், உமாமகே சுவரனாரின் திருமகனார் உ. சிங்காரவேலு ஆகியோர் 'செந் தமிழ்த் தொண்டர்' என்னும் பட்டமும், உமாமகேசுவரனார் வரலாற்றை எழுதிய டாக்டர் சாம்பசிவம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்னும் நூலை எழுதிய பேராசிரியர் சின்னத் தம்பி ஆகியோர் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டமும் பெற்றனர்.

சங்கக் கணக்கர் திரு ஆறுமுகம் பிள்ளை, உடற்பயிற்சி ஆசிரியர் திரு செல்வராஜ் ஆகியோருக்கு ஒரு சவரன் எடையுள்ள கணை யாழிகள் வழங்கப்பட்டன. மற் றும் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த தொடக்கப்பள்ளி - மேநிலைப் பள்ளி - தமிழ்க் கல்லூரி ஆகிய வற்றில் பணிபுரியும் ஆசிரியர்- ஆசிரியரல்லாத பணியினர் அனை வருக்கும் பைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பாராட்டுப் பெற்றோர் சார் பில் அ.கு. வேலன், வெள்ளை வாரணனார் நன்றி கூறினர்.

வழக்குரைஞர் திரு சி. சந்திர மோகன் நன்றி நவின்றார். அதன் பின்னர், கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத் திய 'தமிழவேள் - ந.மு.வே' வர லாறு என்னும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

2ஆம் நாள் நிகழ்ச்சி காலை 10.30 மணி அளவில் தொடங்கி யது. தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு பன்னீர் செல்வம் வரவேற்க, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் கருத் தரங்கிற்குத் தலைமையேற்றார்.

தலைவர் தமது உரையில் தெரி வித்தார்:

''தமிழவேள் நீதிக்கட்சி உறுப் பினர்; வழக்குரைஞர். அதுமட்டு மல்ல, அவர் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தமிழ்ச் சங்கத் தைத் தோற்றுவித்து இறுதி வரை உழைத்து வாழ்க்கையை அதற்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். திராவிட வங்கி என்ற ஓர் அமைப்பையும் அவர் தோற்றுவித்திருக்கிறார்''.

தமிழவேள் அவர்களின் பொதுப்பணி குறித்துப் பேசிய டாக்டர் அ.ம.பரிமணம் குறிப் பிட்டார்:

''தொண்டு செய்து தொண்டு செய்து உயர்ந்து, பின், வானத்து நிலவாகத் திகழ்ந்தார் தமிழ வேள். அவரை நாம் ஒவ்வொரு வரும் நம்முடைய நிலாவாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

''அவரது தொண்டு எல்லாமே பொதுத் தொண்டுதான். அது தனி ஒருவருக்காக எழுந்தது அல்ல. கல்விக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவை யும் செய்தார். கூட்டுறவுப் பதிப் பகம் ஒன்றினையும் அவர் தொடங்கினார்.''

அடுத்து, 'நாவலர் ந.மு.வே. அவர்களின் தமிழ்ப்பணி' குறித்து உரையாற்றிய டாக்டர் சு. சிவ காமி சுந்தரி தெரிவித்தார்:

''ந.மு.வே. அவர்கள் நூலாசி ரியர், கட்டுரை ஆசிரியர், பதிப் பாசிரியர், பெரிய பேச்சாளர் என்பதைவிட, இன்று நமக்கு என்ன வேண்டும் என்பதை அன்றே தொட்டுக் காட்டிச் சென் றிருக்கிறார். படிப்பு முக்கியம் என்பதை அவர் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். எப்படிக் கற்க வேண்டும் என்பதில் அவர் மாறுபடுகிறார். ஆழமாக-அகல மாகக் கற்கவேண்டும் என்றெல் லாம் சொல்லாமல், தாய்மொழி மூலமாகப் படிக்க வேண்டும் என் கிறார்.''

'தமிழவேள் அவர்களின் தமிழ்த்தொண்டு' என்ற தலைப்

பில் — உரையாற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் அவ்வை து. நடராசன் தெரிவித்தார்:

''ஐங்குறுநாறு மருதப்பகுதிக்கு உரை எழுதப்பட்ட காலத்தில் உரை எழுதக்கூடாது என்று ஒருவர் வழக்குத் தொடுத்தார். இதை அறிந்த தமிழவேள் அவர்கள், வழக்கு மன்றத்திற்கு ஒரு விடை எழுதி அனுப்பினார். அதனை வழக்கு மன்றம் ஏற்றுக் கொண்டது. அதன்பிறகு பலர் பழைய இலக்கியங்களுக்கு உரை எழுத முடிந்தது. தமிழவேள் இயக்கமாகத் திகழ்ந்தார். ந.மு.வே. இலக்கியமாக விளங்கினார். பல்லாவற்றாலும் தமிழை வளர்ப்பதையும் காப்பதையும் பெரும் பணிகளாகக் கொண்டு வாழ்ந்தவர் தமிழவேள்''

அடுத்து, 'தமிழவேள் அவர்களின் பெருவாழ்வு' என்னும் தலைப்பில் உரையாற்றிய டாக்டர் மெ. சுந்தரம் குறிப்பிட்டார்:

''1938 ஆம் ஆண்டு தமிழ் இலக்கிய உலகில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு ஆகும். அந்த ஆண்டில்தான் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவானது. உமாமகேசுவரனாருக்குத் தமிழவேள் பட்டம் வழங்கப் பெற்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா கொண்டாடப் பெற்றது. உமாமகேசுவரனார் ஸ்ரீ என்பதை நீக்கி 'திரு' என்று குறிப்பிட்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் திருவாளர் சங்கம் என்று சிலர் கேலி பேசியதும் உண்டு. தமிழவேள் ஊட்டிய தமிழ் உணர்வு ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளர்க''

அடுத்து 'நாவலர் ந.மு.வே. அவர்களின் பெருவாழ்வு' என்னும் பொருளில் உரையாற்றிய பேராசிரியர் கோதண்டபாணி தெரிவித்ததாவது:




''ஒரு பல்கலைக் கழகம் ஆற்ற வேண்டிய பணியினைத் தாம் ஒருவராகவே நடத்தி வந்திருக்கிறார். நல்ல பண்புகள் கொண்டு விளங்கினார். 1933— ஆம் ஆண்டே சென்னைப் பல்கலைக் கழகத்தின் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றியிருக்கிறார். நக்கீரர், கபிலர் ஆகியோரின் வரலாற்றை நூலாக எழுதியுள்ளார். சைவமும் தமிழும் வாழத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டார்.''

அடுத்து 'நாவலர் ந.மு.வே. அவர்களின் உரைத்திறன்' என்ற பொருளில் உரையாற்றிய பேராசிரியர் அ. வெள்ளைவாரணனார் தெரிவித்தார்:

நீதி நூல்களுக்கும் திருவிளையாடற்புராணத்துக்கும், சிலப்பதிகாரத்துக்கும் அகநானூற்றுக்கும் மணிமேகலைக்கும் அவர் உரை எழுதியிருக்கிறார். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கலைகளைக் கற்கவேண்டும் என்று அவர் நினைத்ததன் பயன்தான் இன்று நாம் அனுபவிக்கும் உயர்வு.

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு த. பெரியாண்டவன் நன்றி நவில - கருத்தரங்க நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் 5 மணி அளவில் பாவலரேறு ச.பாலசுந்தரம் வரவேற்புக் கவிதை வாசிக்க, உவமைக் கவிஞர் சுரதா தலைமை ஏற்க, கவிஅரங்க நிகழ்ச்சி தொடங்கியது. புலவர் தொல்காப்பியன், புலவர் அரங்க அறமன்னர், புலவர் கங்கை மணிமாறன் ஆகியோர் தமிழவேளின் பெருமை குறித்தும் புலவர் புலமை வேங்கடாசலம், புலவர் வை. கண்ணபுரக் கண்ணன், புலவர் தே.சந்திரன் ஆகியோர் நாவலர் ந.மு.வே. அவர்களின் புகழ்ச்சரிதம் குறித்தும் தத்தம் கவிதைகளை அரங்கேற்றினர்.

பின்னர், உவமைக் கவிஞர் சுரதா - தமிழவேள் குறித்துச் சொற்பொழிவாற்றினார். அப்போது அவர் பல அரிய தகவல்களைத் தெரிவித்தார். அவை வருமாறு:

''1917 ஆம் ஆண்டிலேயே தன் வரலாறு எழுதினார் தமிழவேள் உமாமகேசுவரனார். 'நீராரும் கடலுடுத்த' என்னும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை அக்காலத்திலேயே சிறுநூலாக வெளியிட்டிருக்கிறார். தமிழவேள் -நாட்டார் இருவரின்




புகைப்படங்களையும், இந்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியில் பயின்றவர்கள் தம்மிடம் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.''

பின்னர் பேசிய, டாக்டர் வே. காத்தையன் குறிப்பிட்டதாவது: ''நாட்டார், உழைப்பால் உயர்ந்தவர். அவரது நல்ல தொண்டு நாட்டுக்குப் பயன்பட வழிவகுத்துக் கொடுத்தவர் தமிழவேள். இருவரும் முறையே கபிலரும் பாரியும் போல விளங்கினர். ஔவையாரையும் அஞ்சியையும் போல வாழ்ந்தனர்''.

மாலை 6 மணி அளவில் நிறைவு விழா தொடங்கியது. தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு சு. செல்லப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தத் தஞ்சையின் பெருமைக்குக் காரணம், வானம் பொய்ப்பினும் தான் பொய்யாக் கடற்பரப்பன்ன காவிரி மட்டுமன்று, தமிழவேள் உமாமகேசுவரனார்— நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய பெரும் சான்றோர்கள் தோன்றியதுதான்''

அடுத்துப் பேசிய கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல்வர் பி. விருத்தாசலம் குறிப்பிட்டார்:

''இரு பெரும் புலவர்களுக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழர் நன்றி மறவாதவர்கள் என்பது விளங்குகிறது. உலகம் வாழத் தன்னை அழித்துக் கொண்ட சான்றோர்கள் அவர்கள். அதனால் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் நிறைந்திருக்கின்றனர். பதவியைப் பெரிதாகக் கருதவில்லை தமிழவேள். அதேபோல் ந.மு.வேங்கடசாமி அவர்கள் 4 ஆண்டுகள் ஊதியம் பெறாமல் தமிழ்க் கல்லூரியில் ஆசிரியர்



பணி ஆற்றினார். தமிழவேள் அவர்கள் மனிதாபிமான உணர்ச்சிக்கு முதன்மை கொடுத்து, சட்டத்தை மீறிச் சில நற் செயல்கள் செய்திருக்கிறார்.''

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மு. சோனைமுத்துக்கோன் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழவேள்-தமிழ் ஆட்சி மொழியாகவேண்டும் என்று விரும்பினார். அது நிறைவேறியிருக்கிறது. தமிழில் கோப்புகள் வருகின்றன; சுற்றறிக்கைகள் வருகின்றன. இவை எல்லாம் தமிழவேள் கண்ட கனவின் அடிப்படையாகும்''.

அடுத்து, டாக்டர் வ.சுப. மாணிக்கம் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற பெரிய நூல்களுக்கு உரை எழுதிய அவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற சிறுவர்க்குரிய நீதி நூல்களுக்கும் உரை எழுதினார். 'தையல் சொல் கேளேல்' என்னும் ஔவையின் வாக்குக்கு உரை எழுதியபோது 'பெண்களின் சொல்லைக் கேட்கவேண்டாம்' என்று எழுதாமல், 'கல்வியறிவு அற்ற பெண்களின் பேச்சைக் கேட்க வேண்டாம்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து,விழாவுக்குத்தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி.சோமசுந்தரம் உரையாற்றினார். அவர் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழுடன் வடமொழியையும் கலந்து மணிப்பிரவாள நடையில் பேசுவதுதான் மதிப்பு என நினைக்கப்பட்ட காலத்தில் தனித் தமிழில் பேசிய உமாமகேசுவரனாரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

''தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் படித்தோர் என எவரையும் சொல்ல முடியாது. கடலில் குளித்தேன் என்று ஒருவர் சொன்னால், ஏதோ ஒரு பகுதியில் குளித்திருப்பார் என்றுதான் பொருள். அதனால் கடல் முழுதும் அவருக்குத் தெரியும் என்று பொருளல்ல. அதைப்போலத்தான் இலக்கியமும்.

''இதே நேரத்தில் ஆங்கிலம் ஏன் வளர்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தமிழில் பத்தாண்டுகளுக்கு முன்பு எத்தனை சொற்கள் இருந்தன? பத்தாண்டுகளுக்குப் பின்னர் எத்தனை சொற்கள் இருக்கின்றன? சொற்கள் ஏன் வழக்கொழிந்து போகின்றன? உலக வழக்குச் சொற்கள் என்னென்ன? புதிய சொற்கள் என்னென்ன? இவற்றையெல்லாம் விஞ்ஞான ஆய்வு கொண்டு பார்க்க வேண்டும். பெரும் புலவர்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும், அரசு இதற்குத் துணைபுரிய வேண்டும்.

அடுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது உரையில் தெரிவித்தார்:

''சேரநாட்டுக் கவிஞன் காவிரியைப் போற்றினான். அந்தக் காவிரி நதிப் பகுதியில் தோன்றிய ந.மு.வே. நாட்டாரும் தமிழவேளும் காலத்தின் வரலாறாக மாறிவிட்டார்கள்.

''நமக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தமிழ் உணர்வு என்று வரும்போது அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

''நாட்டார் அவர்கள் அகநானூறு என்னும் நூலுக்கு எழுதிய உரையில் நாட்டாரின் பண்பு நன்கு தெரிகிறது. சங்ககாலத் தலைமகன் - பிறர்க்குப் பொருள் வழங்குவதற்காகத்தான் பொருளீட்டச் செல்கிறான் என்று நாட்டார் குறிப்பிடும் பாங்கு நயமானதாக உள்ளது.

''தொய்வு விழுந்த தமிழுணர்வை மீண்டும் பெறுவோமாக! வீட்டிலும் வீதியிலும் தமிழ் வளரவேண்டும்.''

விழா நிறைவுரையை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றினார். அவர் தெரிவித்தார்:

''தமிழால் வளர்ந்த நாட்டாரும் தமிழவேளும் தமிழுக்கு ஊக்கம் தந்தார்கள். ஒரே மெழுகுவர்த்தி ஆயிரம் மெழுகுவர்த்தியை எரிய வைத்து, தானும் மறைகிறது. அதுபோல ஆயிரம் பேருக்கு அறிவை ஏற்படுத்தி விட்டு அவர்கள் மறைந்தார்கள்.



''மகாத்மா என்றால் காந்தி. பெரியார் என்றால் ஈ.வே.ரா, அறிஞர் என்றால் அண்ணா. அதுபோல் தண்டமிழ் தவமும் பதி என்றால் அது கரந்தை; தமிழவேள் என்றால் அது உமாமகேசுவரனார்.

தமிழவேளுக்கும் நாட்டாருக்கும் இயல்பாகவே பல பொருத்தங்கள் அமைந்திருக்கின்றன.

உமாமகேசுவரனார் தமிழவேள் என்றால் நாட்டார் அவர்கள் தமிழவேல்.

உமாமகேசுவரனார் தமிழ்க் காவலர் - நாட்டார் தமிழ் நாவலர்.

உமாமகேசுவரனார் புரவலர்; நாட்டார் புலவர் பெருமான். புலவர் பலருக்கு உறுதுணையாக விளங்கியவர் தமிழவேள்; புலவர் பலரை உருவாக்கியவர் நாட்டார்.


தமிழ்ச்சுவையை நாட்டுக்கு ஊட்டியவர் தமிழவேள். தமிழுக்கே சுவையை ஊட்டியவர் நாவலர்.

நல்ல தமிழ் வளர ஊக்கம் தந்தவர் தமிழவேள்; அதற்கு ஆக்கம் தந்தவர் நாவலர்.

தூய-நல்ல தமிழை தமிழ் நாட்டினர் பயன்படுத்த வேண்டும் என்பதில் இருவரும் முனைப்பாக இருந்தனர். தமிழைச் சிதைக்காமல் பேசிவந்தனர். இருவரும் நாணயமானவர்கள் -தன்னலம் கருதாதவர்கள் - பிறர் நலம் பேணியவர்கள். தூயவாழ்க்கைக்கு இலக்கணமாக விளங்கியவர்கள்.''

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு ஆ.மணி நன்றி நவில, இரண்டுநாள் நடைபெற்ற இரட்டையர்விழா இனிது நிறைவேறியதுடன், தமிழ் இதயங்களை எல்லாம் மகிழ்ச்சி மழையில் நனைத்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—தமிழ்ப்பித்தன்**



# காரிருளைப் போக்கும் கறுப்புத் தங்கம்



முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், முந்திரிக் காடாக இருந்த இடம் இன்று மின் உற்பத்திக் கேந்திரமாக விளங்குகிறது. இதற்குக் காரணம், நெய்வேலியில் பூமிக்கு அடியில் புதைந்து கிடக்கும் பழுப்பு நிலக்கரியாகும்.

காரிருளைப் போக்கும் கறுப்புத் தங்கம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வந்த வயிர மணிக் குன்று என்று எப்படி வருணித்தாலும் தகும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் திட்டமாகும். இதுவரை ஏற்பட்டுள்ள மூலதனச் செலவு ரூ. 360.21 கோடி. இப்பொழுது உருவாக்கப்பட்டுவரும் திட்டங்களின் மதிப்பீடு 754.21 கோடி. இரண்டாவது சுரங்கம், இரண்டாவது அனல் மின் நிலையம் ஆகியவற்றுக்காகும் செலவு மதிப்பீடு ரூ. 973.72 கோடி.




குடும்ப வாழ்க்கைக்கு சம்சாரம் எப்படியோ, அப்படி நாட்டின் அனைத்து வளர்ச்சிக்கும் அடிப்படையாக மின்சாரம் விளங்குகிறது. விலை மதிப்பற்ற செல்வம் அது. நெய்வேலி, மின் உற்பத்தியில் மகத்தான தொண்டாற்றுகிறது. 1979-80-இல் தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கொடுத்த மின்சக்தி 177 கோடி யூனிட். இது 1982-83-ல் 307 கோடி யூனிட்.

மின் விற்பனை வருமானம் 1979-80-ல் ரூ. 72 கோடி. 1982-83-இல் ரூ. 143 கோடி.

பழுப்பு நிலக்கரி உற்பத்தி மிக உச்ச அளவு 65 இலட்சம் டன்தான் செய்ய முடியும். இதில் 1982-83-ல் 64.01 இலட்சம் டன் உற்பத்தி செய்து சாதனை நிகழ்த்தியுள்ளது இந்த நிறுவனம்.


லிக்கோ கரிக்கட்டி, 1982-83-ல் சுமார் 2 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உருக்குலைகளில் பயன்படுத்தப்படும் வெளிநாட்டு எண்ணெய்க்குப் பதிலாகப் பல தொழிற்சாலைகளில் லிக்கோ வெற்றிகரமாக உபயோகிக்கப்படுவதால் அந்நியச் செலாவணி மிச்சமாகிறது.

நிலக்கரிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, எரி எண்ணெய்ச் செலவைக் குறைக்க, சிமிட்டி தொழிற்சாலைகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 1981 முதல் கச்சா பழுப்பு நிலக்கரியை இந்த நிறுவனம் விற்பனை செய்யத் தொடங்கியது. 1981-82-ல் 48,700 டன்னும், 1982-83-ல், 48,000 டன்னும், 1983-84-ல் இதுவரை 62,769 டன்னும் விற்பனையாகியுள்ளது.

பிரம்மாண்டமான பள்ளங்களில் மனிதர்கள் வேலை செய்வதை மேலே இருந்து பார்க்கும்பொழுது அவர்கள் எறும்புகளைப்போல் தோன்றுகிறார்கள். ஆண்டுக்கு 35 லட்சம் டன் வெட்டியெடுக்கத் திட்டமிட்டு, படிப்படியே வளர்ச்சிக்கு வித்திட்டு, இன்று ஆண்டுக்கு 65 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுக்கிறார்கள்.

முற்றிலும் இயந்திரமயமான திறந்த வெளிச் சுரங்கம். பக்கட் வீல் எக்ஸ்கலேட்டர் தொடர்ந்து இயங்கி, நவீன - வேகமான பெல்ட் கன்வேயர்கள் மூலம் பழுப்பு நிலக்கரி வெளிக்கொணரப்படுகிறது.

பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் 11 முதல் 25 மீட்டர் கனத்துக்கு இருக்கின்றன. இவற்றை 50 முதல் 95 மீட்டர் கனத்துக்கு மண் படிவங்கள் மூடியிருக்கின்றன. மண்ணையும் அதைத் தோண்டும்பொழுது கூடவரும் தண்ணீரையும் முற்றிலும் அகற்றிய பின்னரே, பழுப்பு நிலக்கரிப் படிவங்களை எட்டி, பகுதி பகுதியாக, படிப்படியாக வெட்டியெடுக்கிறார்கள்.



நெய்வேலியில் 400 சதுர மீட்டர் பரப்பில் 33,000 லட்சம் டன் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருக்கின்றன. இதில் 15 சதுர கிலோ மீட்டர் பரப்பில், 2,300 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுக்க முதலாவது சுரங்கம் தோண்டப்பட்டது.

இதுவரை 7,000 லட்சம் டன் மண் தோண்டி அகற்றப்பட்டு, 700 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. இப்படி நிலக்கரி வெட்டியெடுப்பதை அபாயமில்லாமல் செய்ய, நிலத்தடி நீர் 12,000 லட்சம் டன் வெளியேற்றப்பட்டிருக்கிறது.

இப்பொழுது வேலை நடந்து வரும் இரண்டாவது சுரங்கம் 26 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள 3,810 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்தச் சுரங்கப் பகுதியில் 8-20 மீட்டர் கனத்துக்கு, 50-102 மீட்டர் ஆழத்தில் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருக்கின்றன.

இரண்டாவது சுரங்கத்தின் முதல் கட்டத்தில் ஆண்டுக்கு 47 லட்சம் டன்னும், இரண்டாவது கட்டத்தில் 105 லட்சம் டன்னும் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும்.

மூன்றாவது சுரங்கம் தோண்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன் பேணுவதில் ஒரு தொழிலதிபர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நெய்வேலி நிறுவனம் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. ஒரு தொழிலாளிக்கு நகரியத்தின் பராமரிப்புக்கு ரூ. 1986, மருத்துவ மனைக்கு ரூ. 628, கல்விக்கு ரூ. 195, போக்குவரத்துக்கு ரூ. 186, கேன்டீனுக்கு ரூ. 237, நூலகத்துக்கு ரூ. 11, கலாசார நடவடிக்கைகளுக்கு ரூ. 10 ஆக மொத்தம் 3,253 ரூபாயை இந்நிறுவனம் 1982-83-ல் செலவிட்டிருக்கிறது.

நெய்வேலி நகரியத்தில் மொத்தம் 32,000 மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காக 30 பள்ளிகள் உள்ளன. இவற்றில் 17 நெய்வேலி நிறுவனத்தால் நடத்தப்படுகின்றன.

ஏழை மாணவர்களுக்கு இரண்டு செட் உடைகளை இலவசமாகவும், ஓரளவு வசதியானவர்களுக்குப் பாதி விலையிலும் நிறுவனம் வழங்குகிறது. ஏராளமான உபகாரச் சம்பள வசதிகளும் உள்ளன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன நகரியம் 34 சதுரகிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 13,400-க்கும் அதிகமான வீடுகள்; 292 கி.மீ. ரோடுகள்; 60 சதவீதம் பேர் வீட்டு வசதி பெற்றுள்ளனர். மேலும் அதிகமானவர்களுக்கு வீடு கட்டித்தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

—முத்துக்காளத்தி




# கான்ரான்ஸ்மித் சாலையில்...

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் கோபாலபுரம், கான்ரான்ஸ்மித் சாலையில் புதிதாக நிறுவியுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவு தானியங்கி பால் வழங்கு நிலையத் திறப்பு விழாவும், தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியினால் கடன் உதவிவழங்கு விழாவும் சென்னை கோபாலபுரம் மாநகராட்சி பள்ளி விளையாட்டு மைதானத்தில் 22.4.'84 அன்று நடைபெற்றன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

காவல்துறை இயக்குநர் திரு க.இராதாகிருஷ்ணன் இ.கா.ப. அவர்கள் கொச்சின் இல்லம் பால் வழங்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி உரையாற்றினார்.

இரண்டாம் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி இ.ஆ.ப., ஆணையர் மற்றும் செயலாளர் (நிதி நிறுவனங்கள் துறை) திரு வி.சுந்தரம் இ.ஆ.ப., இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உதவிப் பொது மேலாளர் திரு கே. எம். நாராயணன், செங்கற்பட்டு மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே.பாலாஜி, பெரியார் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு கே. ஏ. செங்கோட்டையன் எம்.எல்.ஏ., திரு.பா. அங்கமுத்து எம்.எல்.சி, திரு ஜேப்பியார் எம்.எல்.சி., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப., அவர்கள் தலைமை உரையாற்றுகையில், ''இந்த விழாவில் இருபெரும் காரியங்கள் நடைபெற்றுள்ளன. குஜராத்தில் பால் உற்பத்திபற்றி அறிந்துவந்தார்கள். அதன் அடிப்படையில் புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் பால் உற்பத்தி சிறந்து விளங்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவன இலாகா மூலம் உங்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருகிறது. கடந்த ஆறு மாதங்களில் ஏறத்தாழ 3.5 இலட்சம் பேர் பயன் பெற்றனர் பயன்பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இட்லிக்கடை, கட்பீஸ் கடை, மீன்வியாபாரம், பூ வியாபாரம் செய்வோர். மேலும் 5 லட்சம் பேருக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

விழாவினைத் தொடங்கி வைத்து, நலிந்தோருக்கு உதவிகள் வழங்கி மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உரையாற்றுகையில்,

''இன்று தொடங்கப்படும் தானியங்கி26வது நிலையமாகும். இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மேலும் 14 தானியங்கி நிலையங்கள் தொடங்கப்படும். அதன் பின்னர் மாதம் 10 வீதம் 100 தானியங்கி நிலையங்கள் மூலமாக 20,000 லிட்டர் பால் பெறமுடியும். இதனால் ரூ. 3 கோடி செலவாகிறது. சென்னை நகர நடுத்தர மக்கள் பலன் பெறுவார்கள்.

''சமுதாயத்தில் நலிந்தோருக்குக் கடன் உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இன்னும் 56 மாத காலத்தில் 5,000 பேருக்குக்கடன் உதவி வழங்கப்படும்'' என்றார்.

கோபாலபுரம் தானியங்கி பால் வழங்கு நிலையத்தைத் திறந்து வைத்தும், அண்ணா பவள விழா நினைவினையொட்டியும், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்: ''இந்த விழாவில் கலந்து கொள்வது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். ஏழை எளிய மக்களுக்கு இந்த நிறுவனம் இது போன்ற பணிகளை ஆற்றிவருவது பாராட்டத்தக்கது. சென்னைக்குத் தேவையான பால் 7.5 இலட்சம் லிட்டர். பால் நிறுவனம் சப்ளை செய்வது 4 இலட்சம் லிட்டர். சென்னை நகரத்திற்கு மட்டும் ரூ. 1 கோடி கொடுத்து கிராமங்களிலிருந்து பால் வாங்கப்படுகின்றது.

''பால்வளத்தை வெண்மைப் புரட்சியாக மாற்றியுள்ளது இந்தத் துறை. இந்த ஆண்டில்தான் இந்த நிறுவனம் லாபம் பெற்றுள்ளது. மக்கள் தெரிந்து கொள்ளத்தான் இதுபோன்ற விழாக்கள் நடத்தப்படுகின்றன.

''வங்கிகளின் அறைகளுக்குள் இருந்த அலுவலர்கள் இன்று அம்பலத்திற்கு வந்து மக்களுக்குக் கடன் உதவி செய்கின்றனர்.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தமிழகம் தான் வேலையற்றோருக்கு உதவி செய்வதில் முதன்மை வகித்துள்ளது.''

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பொது மேலாளர் திரு ஆர். கோபாலன் இ.ஆ.ப., நன்றி கூறினார்.

திரு ஜி.கே.எஸ்.எம்.எல்.ஏ. அவர்களின் 'ஆவின்கதை' இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. வெண்மைப்புரட்சியை விளக்கிக் காட்டிடும் 'மந்தன்' திரைப்படக் காட்சியும் காட்டப்பட்டது.

அ. மருது

## ஜவகர் சிறுவர் இல்லத்தில் குழந்தைகள் தின விழா

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள ஜவகர் சிறுவர் இல்லத்தின் சார்பில், குழந்தைகள் தின விழா 31.3.84 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்தது.

செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. ஏ.பி.முத்துசாமி, இ. ஆ. ப., விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''இந்த இல்லம் சிறந்த கலை நிறுவனமாக விளங்கிட வேண்டும் என்ற என் ஆசையைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இ.என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் கடந்த ஆண்டு நடந்த கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பல்வேறு மாநிலங்களிலும் இந்த ஜவகர் சிறுவர் இல்லம் இயங்கி வருகின்றது. டில்லி, பெங்களூர், ஐதராபாத் ஆகிய இடங்களில் இந்த இல்லம் சிறப்பாகப் பணியாற்றிவருகின்றது. ஓவியம், கைவேலைப்பாடு முதலானவை குழந்தைகளின் அறிவை, ஆற்றலை வெளிப்படுத்த உதவுகின்றன; இந்த இல்லம் அதற்கு உதவியாக இருக்கின்றது''.

விழாத் தொடக்கத்தில், ஜவகர் சிறுவர் இல்ல இயக்குநர் திரு தா.ராசம்மாள் அனைவரையும் வரவேற்றார். திரு. தி. ஓ. ரங்கநாதன் ஆண்டறிக்கை வாசித்தார். திரு. பா. விஜயகுமார் நன்றி நவின்றார்.

—பி.வி.ஜி.





மூன்றாவது பால்பண்ணை சென்னையின் தெற்குப் பகுதியில் அமையும்.

சென்ற ஆண்டு பால் பொருட்கள் விற்பனை ரூ. 50 கோடியாகும்.

சென்னையில் ஒருநாள் பால் விற்பனை மூலம் ரூ. 10 இலட்சம், கிராம மக்களுக்குக் கிடைக்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் பத்தாவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டுப் பால் உற்பத்தி இன்று நான்காவது இடத்திற்கு வந்துள்ளது.



# அந்நியச் செலாவணியை அள்ளித் தரும்
# இறால் வளர்ப்பு

மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர்

## திரு. க. கலைமணி

வளரும் தமிழகம்

நிலத்துக்கு நெல்லும் கரும்பும் அணிகலன் ஆவதைப் போல, கடலுக்கு அணிகலன் எதுவென்றால், இறால் மீன் என்று கூறலாம்.

—பொறையில்லாத அறிவும்

–கல்வி நலமில்லாப்புலமையும்

–தவழ்ந்து ஆடுகின்ற மழலைச் சேயில்லாத செல்வமும்

எவ்வாறு, இருந்தும் இல்லாதது போன்றதோ, அதே போலத்தான்,

''இறால் மீனில்லாத கடலும்''-என்று கூறத்தக்க அளவுக்கு இறால் மீன் இன்றைய உலகில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

எலும்பு ஏதுமில்லாமல், மெல்லிய ஓட்டை தன் உடல் மீது போர்த்திக் கொண்டிருக்கும் இந்த இறால் மீன்களை, எந்த நாடு என்ற வேறுபாடு இன்றி, மீன் உணவு உண்போர் அனைவருமே மிகமிக விரும்பி, சுவைத்து உண்கின்றனர்.

நம் நாட்டில் கிடைக்கக் கூடிய இறால் மீன்களின் சுவைத்தன்மை, மற்றும் பெரிய அளவு காரணமாய், ஜப்பான், அமெரிக்கா முதலான வெளிநாட்டினர் மிக்க நாட்டங் கொண்டு, நல்ல விலை தருவதால், இங்கே பிடிக்கப்படும் இறால் மீன்களில் பெரும்பான்மையான அளவு, வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் அன்னியச் செலாவணியை நாம் அள்ளிக் கொண்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

அதுவும், தமிழகத்து இறால் மீன்கள் தரத்தாலும், சுவையாலும் வெளிநாட்டவரை வெகுவாகக்கவர்ந்திருக்கின்றன. அதனால்தான் இறால் மீன்பிடிப்பில் தமிழகம் நான்காவது இடத்தில் இருந்தாலும், அவற்றை ஏற்றுமதி செய்வதில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

1982-83ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாடு 2 ஆயிரத்து 827 டன் இறால் மீன்களை ஏற்றுமதி செய்து 22 கோடியே 29 இலட்ச ரூபாய்களை அன்னியச் செலாவணியாகப் பெற்றிருக்கிறது.

இறால் மீன் உற்பத்தி நாட்டின் பொருளாதார உயர்வுக்கு எப்படி உதவி செய்யும், அதைப் பெற நாம் இன்னும் இறால் மீன் உற்பத்தியை எப்படியெலலாம் மேம்படுத்த வேண்டும் என்பதன் அவசியத்தை நமக்கு தெள்ளத்தெளிவாக இப்புள்ளிவிவரம் விளக்குகிறது.

தமிழகத்தின் கடற்கரை சுமார் ஓர் ஆயிரம் கிலோ மீட்டர் நீண்டு கிடக்கிறது. அதிலே 8 கடலோர மாவட்டங்கள் உள்ளடங்கி, அவற்றின் ஊடே ஓடுகின்ற பல ஆறுகள் கடலில் சங்கமம் ஆகின்றன.

இதனால் பற்பல முகத்துவாரங்களும், உப்புநீர் ஏரிகளும், உப்பங்கழி நீர்வழிகளும், உப்புநீர்ப்பரப்புகளுமாகக் கடலோரம் விரிந்து

கிடக்கிறது. இவையன்றி கடற்கரையை ஒட்டிய தாழ்வான நீர்ப்பரப்புகளும் உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 56 ஆயிரம் எக்டேர் கழிமுகப் பகுதியும் 15 ஆயிரம் எக்டேர் கடற்கரையை ஒட்டிய தாழ்வான பகுதியும் இருக்கின்றன. ஆனால் இறால் மீன் வளர்ப்புக்கு உகந்ததாய் இருக்கும் நீர்ப்பரப்பு 16 ஆயிரம் எக்டேர்தான்.

இயற்கையான உற்பத்தியிலிருந்து இறால் மீன் பிடிக்கப்பட்டால், ஆண்டுக்கு ஒரு எக்டேருக்கு 40 கிலோ முதல் 50 கிலோ வரை தேறுகிறது. ஆனால் புதிய முறையில், பண்ணைகளில் உரிய வழிவகைகளைக் கையாண்டு இறால் வளர்த்தால் ஒரு எக்டேருக்கு 600 முதல் 1,500 கிலோ வரை உற்பத்தி செய்யலாம் என நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதை நன்கறிந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள், தமிழகத்திலுள்ள இறால் மீன் உற்பத்தி ஆய்வுப் புண்ணைகளுக்கு நல்ல ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்றார்.

ஏழை எளிய மீனவர்களும் வர்த்தக ரீதியில் இறால் மீன் வளர்த்துப் பயன்பெற வேண்டும்; அதற்கு இந்த ஆய்வுப்பண்ணைகளில் நடக்கும் புதிய புதிய ஆராய்ச்சியும் அதன் பலன்களும் உதவிட வேண்டும் என்பதில் தமிழக அரசு பேரார்வம் காட்டிச்செயலாற்றி வருகிறது.

கடற்கரை ஓரங்களில் பண்ணைகள் அமைத்து, மீன் வளர்ப்பதில் இந்தியாவுக்கே தமிழகம்தான் முன்னோடியாய் இருந்திருக்கிறது என்று கூடக் கூறலாம். இப்படி மீன் வளர்க்கும் முறை தமிழகத்தில் 1940ஆம் ஆண்டு முதலே செயல்படத் தொடங்கி விட்டது.

தற்போது, சென்னை-சாந்தோம்

குமரி மாவட்டம்-மணக்குடி


தென்ஆர்க்காடு மாவட்டம்-மரக்காணம், பரங்கிப்பேட்டை

சென்னை அருகே-கோவளம், பழவேற்காடு,

ஆகிய உவர்நீர்ப்பகுதிகளில் இறால் மீன் உற்பத்தி ஆராய்ச்சிப் பண்ணைகள் இயங்கி வருகின்றன.

சென்னை சாந்தோமில் அமைந்துள்ள இறால் மீன் உற்பத்தி மாதிரி விளக்கப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, ஒரு எக்டேருக்கு 1,500 கிலோ வரை இறால் மற்றும் பால்கெண்டை உற்பத்தி செய்யலாம் என நிரூபித்து, இறால் மீன் வளர்ப்பை முறையோடு செய்தால், வர்த்தக ரீதியில் பெரும் இலாபம் ஈட்டலாம் என, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியது.

இதனைத்தொடர்ந்து, தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரம் அருகே, பிச்சாவரம் கழிமுகப்பகுதியான கிள்ளையில், தமிழக அரசு, முன்னோடித் திட்டமாக 16 லட்ச ரூபாய் செலவில் இறால் வளர்ப்புப் பண்ணையை ஆரம்பித்துள்ளது.



இத்திட்டத்தை விரிவாக்கவும், மீன், இறால் வளர்ப்பில் நாட்டமுள்ளோர் பயன் பெறவும், தமிழ்நாட்டில் கடலோரப்பகுதிகளில் 10 இடங்களில் செயல்முறை விளக்க இறால் வளர்ப்புப் பண்ணைகளைத் தமிழக அரசு அமைத்திருக்கிறது.

—தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பரங்கிப்பேட்டை,

—செங்கை மாவட்டத்தில் பழவேற்காடு, வாணியஞ்சாவடி,

—தஞ்சை மாவட்டத்தில் தொண்டிக்காடு, ஏரிப்புறக்கரை,

—இராமநாதபுரம் மாவட்டம் சூரங்காடு, கன்னாமுனை,

—திருநெல்வேலி மாவட்டம் கீழவைப்பார், புன்னக்காயல்,

—மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 இடங்களில் ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரம் செலவில் செயல்முறை விளக்க இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்துச்செயற்படுத்தப்படுகின்றன.

இதனால் அந்தந்த மாவட்டங்களின் சூழ்நிலைக்கு ஏற்ப உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இறால் மீன் வளர்ப்பின் முறையான தொழில் நுட்பத்தை, மீனவ மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்; அவர்கள் தாமாகவே முன்வந்து, இறால் மீன் பண்ணைகள் அமைத்து, முன்னேற வேண்டும். இதன் மூலம் அன்னியச்செலாவணி கிடைப்பதோடு, வேலை வாய்ப்பும் உருவாக்கப்பட வேண்டும் என்ற

நல்ல எண்ணத்தின் அடிப்படைதான், இந்த முன்னோடித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இறால் மீன் வளர்ப்பது என்பது, மற்ற மீன் வளர்ப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். ஏனெனில், இறால் மீன் வளர்ப்பு பண்ணையை அமைக்கும்போது, அறிவியலின் அடிப்படையில் செயல்பட வேண்டியதாக இருக்கிறது.

இப்பண்ணையைப் பராமரிக்கும் அலுவலர்கள், பண்ணை அமையும் இடம், அமைக்கும் முறை, பேணும் முறை, தேர்ந்த கருப்பு மற்றும் வெள்ளை இறால் நுண்குஞ்சுகளைச் சேகரம் செய்யும் முறை, வளர்க்கும் முறை, முதலான உரிய ஆலோசனைகளை வேண்டியவர்க்கு வழங்குவார்கள்.

நன்கு பராமரித்த குளங்களில், சாதாரணமாய் ஒரு எக்டேரில் ஒரு அறுவடையில் 300லிருந்து 500 கிலோ வரை அறுவடை செய்யலாம். இவ்வாறு ஒரு குளத்தில் ஆண்டுக்கு இரண்டு அறுவடை மேற்கொள்ளலாம். இந்த இரண்டு அறுவடைகளையும் சேர்த்து, முதலீடு மற்றும் நடைமுறைச் செலவுகளைக் கணக்கிடுகையில் ஆண்டுக்கு ஒரு எக்டேரில் நிகர லாபம் காண முடியும்.

கடல் இறால்களை மட்டுமின்றி, நன்னீர் இறால்களை எல்லாக் கண்மாய்களிலும், குளங்களிலும் வளர்த்து உற்பத்தியைப்பெருக்கவும் தமிழக அரசு தீவிரத் திட்டம் தயாரித்து செயல்படுத்தி வருகிறது.

இறால் மீன்கள் மிகுந்த இலாபத்தை ஈட்டித் தருவதை எண்ணி, நாட்டுப் படகுகளும், விசைப்படகுகளும் இறால் மீன்களைப் பிடிப்பதிலேயே மிக முனைப்பாகத் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் கடலில் இறால் வளம் குறையும் அபாயம் கூடவே வருகின்றது.

எனவே, மீன் வேட்டையாடும் நிலையிலிருந்து மீனவர்களை மாற்றி, இறால் மீன் வளர்ப்பை ஒரு தொழிலாக மேற்கொள்ளும் வகையில் அவர்களை உருவாக்க வேண்டும் என்று, டாக்டர் புரட்சித் தலைவரின் சீரிய தலைமையில் செயல்படும் இந்த அரசு ஆர்வம் காட்டி வருகின்றது. ஆய்வுப் பணிகளைத் தீவிரப் படுத்துகின்றது.

இறால் மீன் வளர்ப்புக்கு ஏற்ற வகையிலுள்ள 16 ஆயிரம் எக்டேர் நீர்ப்பரப்பையும் முழுமையாகப் பயன்படுத்தி, பண்ணைகள் உருவாக்குவோமேயானால் 16 ஆயிரம் டன் இறால் மீன் உற்பத்தி செய்யும் உன்னத நிலையை உருவாக்கலாம். நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அன்னியச் செலாவணியை அள்ளிக் கொள்ளலாம்.

இதற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் தீட்டும் தமிழக அரசுக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவருக்கு, மீனவப் பெருமக்கள் உறுதுணையாக இருப்போம்.

இறால் வளர்ப்போம்! இந்நாட்டின் வளங்குவிப்போம்!

(1.4.84 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை)



# பெரியார் மாவட்டத்தில் மின்சாரம்

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், மின் துறையின் முக்கியக் கேந்திரமாக விளங்குவது பெரியார் மாவட்டம்.


1980க்குப் பிறகு இன்று வரை மட்டும் இங்கே துணை மின் நிலையங்கள் 7 நிறுவப்பட்டுள்ளன. கடந்த நான்காண்டுகளில் கூடுதல் மின்சக்தி இணைப்புகள் 76.222 கிலோ மீட்டருக்குப் போடப்பட்டுள்ளன. உயர் மின் அழுத்த மின்சக்தி 523.302 கிலோ மீட்டருக்குப் போடப்பட்டிருக்கின்றன.

பெரியார் மாவட்டத்தில், குடிநீர் வசதிக்காக மட்டுமே 241 ஸ்பேஸ்களுக்கு மின் சக்தி தரப்பட்டுள்ளது.

1979ல் பெரியார் மாவட்டம் தனியே பிரிக்கப்பட்டது முதல் இன்றுவரை 11,303 குடிசைகளுக்கு 40 இலட்சம் ரூபாய் செலவில் மின்னொளி வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருமக்களின் நலன் கருதி 4509 பம்பு களுக்கு மின் இணைப்புத் தந்திருக்கிறார்கள் இங்கே!

தமிழ்நாட்டின் மின்சார விநியோகத்தை மாநிலம் முழுமைக்கும் அளிக்கும் தலைமை மின் கட்டுப்பாட்டு நிலையம் ஈரோட்டிலே தான் அமைந்திருக்கிறது. மின் கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் மின்சாரமே பெரியார் மாவட்டம் முழுமைக்கும் பரவலாக்கப்படுகிறது.

இங்கே செயல்படும் மின் கட்டுப்பாட்டு நிலையம்-கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பிறமாநில மின் விநியோக நிலையங்களுடன் இணைந்து செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.






# முதுமலையில் இளைஞர்விடுதி

மூன்று மாநிலங்கள் முத்தமிடும் பகுதியில் அமைந்துள்ள முதுமலை வன விலங்கு சரணாலயம் தமிழகத்திற்குச் சிறப்பான பெருமை சேர்க்கின்றது.

மலைகளின் ராணி எனப் புகழ் பெற்று விளங்கும் உதகமண்டலத்திலிருந்து முதுமலை 65 கி.மீ. தொலைவில் உள்ளது. மலைச் சரிவுப்பாதை வழியான கல்லட்டி வழியாகச் சென்றால் முதுமலைக்கு 36 கி. மீ. கடந்து சென்று அடையலாம்.

முதுமலை வனவிலங்கு சரணாலயத்தின் மையப்பகுதியான ''தெப்பக்காடு'' என்ற இடத்தில்தான் வனத்துறையினரின் யானைகள் முகாம் உள்ளது. இங்கு வளர்க்கப்படும் யானைகள் மூலம் உல்லாசப் பயணிகள் சவாரி செய்து, சுதந்திரமாகச் சுற்றித்திரியும் வனவிலங்குகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பு உள்ளது.

முதுமலையைக் காணவரும் உல்லாசப் பயணிகள் தங்கி மகிழ வனத்துறை சார்பில் தங்கும் விடுதிகள் கார்குடி, தெப்பக்காடு அபயாரண்யம், மசினகுடி ஆகிய இடங்களில் உள்ளன.

இவ்வளவு இடங்கள் இருந்தும் உல்லாசப்பயணிகளுக்குப் போதுமான தங்குமிட வசதி, பற்றாக் குறையாக இருந்தது. இந்தக் குறையைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், நடுத்தர மக்களும் மலிவு வாடகையில் தங்கி மகிழ, ரூபாய் 15 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் இளைஞர் விடுதி தெப்பக்காடு இயற்கையெழில் சூழ்ந்த காட்டுப்பகுதியினுள் கட்டப்பட்டுள்ளது.

இந்த இளைஞர் விடுதியில் 32 படுக்கை வசதிகள் கொண்ட மூன்று கட்டடங்கள் உள்ளன. இங்கு தங்கும் உல்லாசப் பயணிகளுக்காக நவீன உணவு விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இளைஞர் விடுதியில் படுக்கை ஒன்றுக்கு ஒருநாள் கட்டணம் ரூ. 7.50 மட்டுமே.

இந்த இளைஞர் விடுதியின் திறப்பு விழா தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தலைவர் திரு கே.பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி-சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார். மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சி தலைவர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஏராளமாகக் கலந்து கொண்டனர்

கடந்த ஆண்டு முதுமலையை 32 ஆயிரம் உல்லாசப் பயணிகள் கண்டு களித்தார்கள் இதில் ஆயிரத்து 496 உல்லாசப் பயணிகள் வெளி நாட்டவர்கள்

**— கிருபால்தாஸ் ஜான்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்.**

# ஈரோட்டுக் கைத்தறிச் சந்தை!

பார்புகழும் ஈரோட்டில் பார்க்கலாம் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும்கைத்தறித்துணிச் சந்தையை. இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அதிசயச் சந்தைகைத்தறித் துணிச்சந்தை. ஆம்; சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிக்குச் சிறப்பூட்டும் சந்தை இது.

ஈரோடு நகரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை இரவு 2 மணியிலிருந்து புதன் கிழமை மாலை வரை சில பகுதிகளில் மக்கள் எறும்பு போல் சுறுசுறுப்பாக இயக்குகிறார்களென்றால் அதற்குக் காரணம் இந்தக் கைத்தறிச் சந்தைதான்.

நகரின் மையப் பகுதியான பிரப் ரோடு, ஈஸ்வரன்கோயில் வீதி, திருவேங்கடம் தெரு, சொக்கநாதன் வீதி, ஆர். கே.வி. ரோடு ஆகிய பகுதிகளில் சாலையின் இருபுறமும் பல தரப்பட்ட கைத்தறி வேட்டி, சேலை, கைலிகள், துண்டு, போர்வை, ஜமுக்காளம் போன்ற துணிகளுடன் கூடிய சுமார் 2,000 கடைகள் சந்தையில் போடப் படுகின்றன. இச் சந்தைக்குத் தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களிலிருந்தும் துணிகள் வருகின்றன. குறிப்பாக சேலம், அம்மாபேட்டை, காஞ்சிபுரம், அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், ராஜபாளையம், பரமக்குடி, குறிஞ்சிப்பாடி, சூலூர், பல்லடம் பகுதிகளிலிருந்து வியாபாரிகள் ஆங்காங்கே தயாரிக்கப் படுகின்ற பலரகக் கைத்தறித் துணிகளைச் சந்தைக்குக் கொண்டு வருகின்றனர்.

இச்சந்தைக்கு வெளிமாநிலங்களிலிருந்து வரும் வியாரிகள் எண்ணிக்கை மட்டும் ஒவ்வொரு வாரத்திற்கும் சுமார் 2,500 இருக்கலாம். பம்பாய்,கல்கத்தா, அசாம், ஒரிசா, ராஜஸ்தான், கர்நாடகம், கேரளம், ஆந்திரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்தும் அவர்கள் வாரந்தோறும் இங்கு வருகின்றனர். இது தவிர தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதியிலிருந்தும் வருவோர் சுமார் 500 பேர்.

சுமார் 2 கோடி ரூபாய்வரை வாரந்தோறும் வியாபாரம் ஆகும். என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில், குறிப்பாக, மாதத்தில் இரண்டாம் புதனில் கூடும் சந்தையில் தான் அதிக வியாபாரம் ஆகிறது என அனைத்துக் கடைக்காரர்களும் கூறுகின்றனர்.


அச்சந்தையில் விற்கப்படும் துணிகளை 'பண்டல்' போட்டுத் தொழில் செய்வதற்கு மட்டும் இங்கே சுமார் 40 கடைகள் உள்ளன. ஒவ்வொரு கடையிலும் வியாபாரிகள் வரிசையில் நின்று தான் பண்டல் போட ஆர்டர் கொடுக்கின்றனர். பண்டல் போடும் தொழிலில் மட்டும் சுமார் 500 நபர், வருமானம் பெறுகின்றனர். ஒருவர் ஒரு நாளைக்குக் குறைந்தது ரூ. 50 வரை வருமானம் பெறுகின்றனர். கட்டை வண்டி இழுக்கும் தொழிலாளிகள் நிறைந்தது ஈரோடு நகர். அவர்களே இதனால் சராசரி ரூ. 25 வருமானம் பெறுகின்றனர் ஒரு நாளைக்கு!

இதைப் போல், சந்தையிலே துணிக்கடை வைத்திருப்பவர்கள் ஒரு கடைக்குக் குறைந்தது 4 நபர்கள் வீதம் உள்ளனர். காரணம் துணிகள் கூட்டத்தில் திருட்டுப் போகாமல் இருப்பதற்கும், மாறாமல் இருப்பதற்கும் என்று கூறப்படுகிறது.

இந்த ஈரோடு கைத்தறிச் சந்தை அதிவேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்கு முன்பு சுமார் 100 அல்லது 200கடைகள் மட்டும் கொண்டிருந்த இந்தச் சந்தை இன்று 2000 கடைகளுடன் சிறக்கின்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இக்கடைகளில் வியாபாரிகள் சில வியாபார யுத்திகளைக் கையாளுகின்றனர். சில மாட்டுச் சந்தைகளிலே மாட்டின் விலையை நேரிடையாகக் கூறமாட்டார்கள்; கைமேல் துண்டைப் போட்டு விரல்களினால் வெளியே தெரியாமல் விலையை நிர்ணயிப்பர்; அதுபோல இல்லாமல் 'சாமி, சாமி, சரிசாமி, ஆமாம் சாமி' என்று ஓர் நூதன யுத்தியைக் கையாளுகிறார்கள் இவர்கள். இது ஓர் புதுமை!


ஈரோட்டுக் கைலிகள் புகழ் பெற்றவை. இங்குதான் பூப் போட்ட கைலிகள் பாத்திக் பிரிண்டிங்கில் செய்யப்படுகின்றன. அதாவது 'பார்த்திக்' என்பது இந்தோனேசியன் சொல். 'பாத்திக்' என்பதற்குப் பொருள் சில துளிகள் (some drops) என்று பொருளாம். வெளி மாநிலத்தில் இதற்கு அதிக மார்க்கெட் உள்ளது. இதே போல் ஸ்கிரீன் பிரிண்டிங் பல வண்ணப் பூக்களால் அச்சிடப் பட்ட சேலைகள், கைலிகள் தயாரிக்கப்பட்டு இந்தச் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன.



**-நா. தில்லைகோவிந்தன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்.**
**பெரியார் மாவட்டம்.**







# நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை!

எஸ்.பாலகிருஷ்ணன்
**உதவி இயக்குநர்,**
**கைத்தறி மற்றும் துணி நூல் துறை**
**பெரியார் மாவட்டம்.**

**கை**த்தறித் தொழில் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியப் பங்கு வகிக்கின்றது.

தமிழகத்தில் சுமார் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கி 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் அவர்களைச் சார்ந்துள்ள 30 இலட்சம் நபர்களுக்கு வாழ்வையும் அளிக்கிறது. தந்தை பெரியாரின் பெயரைக் கொண்ட இம் மாவட்டத்தில் உள்ள கைத்தறிகள் எண்ணிக்கை மட்டும் சுமார் 60,000 ஆகும். இதில் 184 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 42,000 தறிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இத்தறிகளை இயக்குவதற்குத் தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மாதந்தோறும்1,500 நூல் பேல்களை விநியோகம் செய்து வருகின்றது. இந்த 184 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ. 840 இலட்சம் அளவிற்கு மூலதனக் கடனை வழங்கியுள்ளது. இச் சங்கங்கள் மாதம் ரூ 180 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து வருகின்றன.

பெரியார் மாவட்டத்திலுள்ள இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நேர்த்தியான பெட்ஷீட்டுகள், வண்ணத் துண்டு ரகங்கள், தலையணை உறைகள், அலங்கார விரிப்பு ரகங்கள், சேலை ரகங்கள், ஜமுக்காளங்கள், லுங்கிகள், பாலியஸ்டர் சர்டிங் மற்றும் சூட்டிங் ரகங்கள் போன்றவை சிறப்புறத் தயாரிக்கப்படுகின்றன.

நெசவாளர்களுக்கு நியாயமான ஊதியமும் தொடர்ச்சியான வேலைவாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும் என்ற முக்கிய நோக்குடன் அதிகப்படியான நெசவாளர்களைத் தமிழகஅரசு கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வந்து, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

செயல்படாமல் இருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் செயல்படச் செய்து, வேலை செய்யாத தறிகளை இயங்க வைப்பது ; தமிழகத்தில் நெசவாளர் நிறைந்த பகுதிகளில் புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துதல்; புதிதாகத் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவைகளில் தறி இல்லாத நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பளித்தல்; நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்தல் போன்றவை அத்திட்டங்களில் குறிப்பிடத்தக்கவைகளாகும். மற்றும் பல திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

பங்குத் தொகைக் கடன் திட்டத்தின்கீழ் நெசவாளர் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர அதிகபட்சம் ரூ. 180 கடனாக வழங்கி, 4 சமதவணைகளில் வசூல் செய்யப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இம் மாவட்டத்தில் ரூ. 20,25,000 அரசு கடனுதவியாக வழங்கியுள்ளது.

அரசு பங்கு மூலதனத் திட்டத்தின்படி தமிழக அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூலதனம் செய்து அதன் மூலம் சங்கத்தின் நிதிவளத்தை அதிகரிக்கச் செய்கின்றது. தமிழ்நாடு அரசு பெரியார் மாவட்டத்திலுள்ள சுமார் 145 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 33,02,000 முதலீடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்படி குழித்தறிகளைச்



சட்டத் தறிகளாக மாற்றவும் ஏற்கெனவே உள்ள சட்டத் தறிகளில் நவீன யுக்திகளை ஏற்படுத்தவும் கடன் மற்றும் மான்யம் வழங்கப்படுகின்றது. இத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ரூ. 10,39.000 கடன் மற்றும் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் பயிற்சித் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் திறமை மிக்க தொழில்நுட்ப உதவியாளர்கள் மூலம் புதிய வடிவமைப்புகளில் நெய்வதற்கு உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இம் மாவட்டத்தில் ரூ.1,49,000 மான்யமாக அரசு வழங்கியுள்ளது.

நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்படி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குச் சேமிப்பு வசதியுடன் கூடிய பாதுகாப்புத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. இதன்படி சங்க உறுப்பினர் ஒருவர் திட்டத்தில் சேர்ந்து, அவர், ரூபாய் ஒன்றுக்கு 6 காசு வீதமும் தமிழக அரசு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதமும் அதற்குரிய வட்டியும் கொடுக்கின்றது. சங்க உறுப்பினர் திட்ட விதிகளின்படி மரணமடைய நேரிட்டால் ரூ. 3,000 சட்டுறுதித் தொகையாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இம்மாவட்டத்திற்கு இதுநாள் வரை தமிழக அரசு சந்தாமற்றும் வட்டித் தொகையாக ரூபாய் 26,56,000 வழங்கியுள்ளது. மேலும் 107 இறந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 1,98,650 சட்டுறுதித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், 1962-ம் ஆண்டிலிருந்து கைவிடப்பட்ட நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் 1979-ஆம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்பட்டு, நெசவாளர்-உறுப்பினர்கள் வீடுகள் கட்ட ரூ. 12,000 வரை



கடன் மற்றும் மான்யமாக அனுமதிக்கப்படுகின்றது. இத்திட்டம் மீண்டும் அமல்படுத்தப்பட்ட பின்பு இம் மாவட்டத்தில் 399 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தை அமல் படுத்த நடவடிக்கைகள் உள்ளன.

தள்ளுபடி மான்ய திட்டத்தின் படி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு, அரசு தள்ளுபடிச் சலுகைகளை வழங்கி கைத்தறித் துணிகள் தேக்கம் இல்லாமல் விற்பனையாவதற்கு உதவி செய்கிறது. இத்திட்டத்தின்படி இம்மாவட்டத்திற்கு இதுவரை ரூ. 220.30 இலட்சம் மான்யமாக அரசு அனுமதித்து வழங்கியுள்ளது.

கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் தனியார் துறையில் இயங்கி வரும் கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வருவதற்கும், கைத்தறித் துணிகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. அதன்படி ஈரோட்டில் ஒரு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அது சுமார் 3,500க்கு மேம்பட்ட நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றது.

பெரியார் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளையும், விசைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளையும் சலவை மற்றும் சாயமிடுதல், மெருகேற்றுதல், அச்சிடுதல் போன்றவை செய்து அவைகளுக்கு விரைவான சந்தை ஏற்படுத்தி வருகின்றது; மேலும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூலைச் சாயமிட்டு வழங்க நவீனச் சாயச்சாலை, ஒன்றும் இங்கு செயல்பட்டு வருகின்றது.

இதன் கிளைகள் சேலம், வேலூர், திருவில்லிபுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றும் சுமார் ரூபாய் 15,00,000 முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

# மானாவாரி நிலக்கடலைக்கு உரமிடுவது லாபகரமானது

# விஜய் 17-17-17




மானாவாரி நிலக்கடலைக்கு சிபாரிசுப்படி உரமிட்டால், ஏக்கருக்கு 10 முதல் 12 மூட்டை கூடுதலாக விளைச்சல் கிடைக்கும். இது, பல விவசாயிகள் அனுபவத்தில் கண்ட உண்மை. விவசாய ஆராய்ச்சிகளும்கூட இதை நிரூபிக்கின்றன.

மேலும் வறட்சியான காலத்திலும்கூட உரமிட்ட பயிர்கள்தான் அதிக மகசூல் கொடுக்கும். ஏனெனில் உரமிட்ட பயிர்களின் வேர்கள் ஆழமாகவும் பரவலாகவும் வளர்ந்து அடித்தளத்தில் உள்ள நீரை நன்ருக உறிஞ்சி எடுத்துக்கொள்ளும்.

மானாவாரி நிலக்கடலைக்குத் தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களையும் விவசாய இலாகா சிபாரிசுப்படி அடியுரமாக இட, (ஒரு ஏக்கருக்கு) விஜய் 17-17-17 உரம் 25 கிலோவும், பொட்டாஷ் 25 கிலோவும் விதைக்கும்போது இடவும். உரத்தை விதைக்குக் கீழும் பக்கத்திலும் இட்டால் உரத்தின் முழுப் பலனையும் பெறலாம்.

நிலக்கடலை சாகுபடி பற்றிய புத்தகத்தைப் பெற எங்களுக்கு எழுதுங்கள்:

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

## சமச்சீர் உரமிட

## விஜய்



MFL-1411

# புத்தாண்டில் சில புதிய வேளாண்மைத் திட்டங்கள்

**அ. வேங்கடராமன், இ.ஆ.ப.,**
**வேளாண்மைத்துறைச் செயலர்.**

**தொ**டர்ந்து வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த தமிழகம் எதிர்பாராத விதத்தில் கடந்த டிசம்பர், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நல்ல மழையைப் பெற்றது.

காலந்தவறிப் பெய்த மழை பயிர்களுக்குச் சேதத்தை உண்டாக்கினாலும், குளங்களை, நீர் நிலைகளை, நிலத்தடி நீரைப் பெருக்கி விட்டுச் சென்றுள்ளது. இழந்ததைப் பற்றி வருந்தி வாளா இருந்திடாமல் இருப்பதைப் பேணிக் காத்து செயலாற்றி மீண்டும் வேளாண்மையில் வளர்ச்சியைக் கண்டிட துடித்து நிற்கிறது. இன்று தமிழகம், இந்நிலையை உணர்ந்து 1984-85ம் ஆண்டுக்கு, முன்பு எப்பொழுதும் கண்டிராத வளர்ச்சிக் குறியீட்டை வகுத்துள்ளது தமிழக அரசு. நெல் வேளாண்மையில் 65 இலட்சம் டன், சிறு தானியங்களில் 30 இலட்சம் டன், பயறு வகைகளில் 5 இலட்சம் டன், பருத்தியில் 5 இலட்சம் பேல், எண்ணெய் வித்துக்களில் 14.60 இலட்சம் டன் இவை இந்த ஆண்டின் வேளாண்மை உற்பத்திக் குறியீடுகள்.




மாநில அளவில் குறியீடுகள் அமைத்துவிடலாம். அவற்றைச் செயலாக்க வேண்டிய பணி காடு கழனிகளில் நடைபெற்றிடல் வேண்டும். அதை ஊக்குவிக்கும் பொறுப்பு அரசைச் சார்ந்தது. அதற்காகக் குறியீட்டை நடைமுறையில் கொண்டு வந்திட நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற உள்ளோம். அவற்றில் தலையாயது **"எக்டேருக்கு 5 டன் மகசூல்"** என்ற திட்டம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் நெல் விளைச்சலில் எக்டேருக்குச் சுமார் 3 டன் விளைவித்து இரண்டாவது இடத்தில் நிற்கிறது தமிழகம். இங்குள்ள நீரும், நிலமும் நெல் வேளாண்மையில் அதிக மகசூல் பெற்றிட உகந்தது. ஆய்வு நிலையங்களிலும், முற்போக்கு விவசாயிகளின் நிலங்களிலும் எக்டேருக்கு 5 டன்னுக்கு அதிகமாக மகசூல் எடுக்கிறோம். ஒரு சிலரால் இத்தகைய மகசூல் பெற முடிந்தால் எல்லோராலும் எல்லா



பட்டங்களிலும் ஏன் அதிகமகசூல் எடுத்திட முடியாது? இக்கேள்விக்கு விடை அளிப்பது எக்டேருக்கு 5 டன் மகசூல் திட்டம். தெரிந்தெடுத்த இரகம், வீரிய பொறுக்கு விதை, சரியான பட்டம், வீரிய இன நாற்றுக்கள் ஆழ உழவு, சமச் சீரான அடி உரம், சரியான நடவு, சீரான தண்ணீர், நோய் நொடிகள் இவற்றிலிருந்து பாதுகாப்பு இவை நல்ல மகசூலுக்கு அடித்தளம். இம்முறைகளை மக்கள் மத்தியில் செயல் விளக்கங்கள் மூலமாகப் பரப்ப வேண்டிய நடவடிக்கைகளை இத்திட்டத்தின் வாயிலாக எடுத்து வருகின்றோம். இன்று ஆரம்பிக்கும் இத்திட்டத்தின் மூலமாக இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் எக்டேருக்கு 5 டன் நெல் விளைவிக்காத விவசாயியே இல்லை என்ற நிலையை நிச்சயமாக உருவாக்கிடவேண்டும்.

பொருளாதார மேம்பாட்டுக்கு ஆதாரம் அதிக வருவாய். அதிக வருவாய் பெற்றிட, சமுதாயம் வேளாண்மையால் நன்மை பெற்றிட, செய்தொழிலிலிருந்து அதிக மகசூல் எடுத்திடல் வேண்டும். இந்த அடிப்படைக் கொள்கையை மனத்தில் கொண்டு 'அதிக மகசூல், அதிக வருவாய், மேம்பட்ட வாழ்க்கை' என்ற ஒரு புதிய செயல் விளக்கத் திட்டத்தையும் இந்த ஆண்டு பரந்த அளவில் செயலாக்க உள்ளோம்.

500 ஏக்கர் முதல் 1,000 ஏக்கர் வரை தொடர்ந்து அமைந்துள்ள நஞ்சையிலும், புஞ்சையிலும் செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்க உள்ளோம். இவ்வாறு தெரிந்தெடுத்தப் பகுதியில் இப்பொழுது வேளாண் மக்கள் என்னென்ன பயிர்கள் பயிர் செய்கின்றார்கள்? அதற்காகும் செலவு என்ன? வரவு எவ்வளவு? எவ்வாறு பயிர்த்திட்டத்தை மாற்றி அமைத்து வரவை அதிகரித்து நல்வாழ்வு வாழ்ந்திடலாம் என்று பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு இத்திட்டத்தைச் செயலாக்க உள்ளோம். இதன்வாயிலாகப் புதிய முறைகளை மக்களுக்கு அறிமுகப் படுத்துவதுடன் வேளாண்மையை ஒரு தொழிலாக எவ்வாறு கணக்கிட்டு செய்திட வேண்டும், என்று எடுத்துக் காட்டுவதும் எங்கள் குறிக்கோள்.

தமிழக வேளாண்மை வளர்ந்திட வேண்டுமானால் நீர் நிர்வாகத்தில் தனிக் கவனம் தேவை. ஒரு வயலிலிருந்து மற்ற வயலுக்கு தண்ணீர், வடிகால் வசதியில்லை என்னும் நிலைமைகளைப் போக்கிடவேண்டும். பல இடங்களில் நல்ல வடிகால் வசதியில்லாததால், சரியான நீர் பராமரிப்பு இல்லாததால் நாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்குத் தகுந்த பலன் பெற முடியாத நிலை உள்ளது. இதைப் போக்கிட வாய்க்கால் வடிசால் வசதிகளைச் சீரமைக்கும் பணிகளைக் காவேரி, வைகை, கீழ் பவானி, சாத்தனூர் திட்டப் பகுதிகளில் இப்பொழுது செயலாற்றிக் கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு இத்திட்டங்களை விரிவாக்க உள்ளோம். இதற்காகக் காவேரியிலும், சாத்தனூர் திட்டப் பகுதிகளிலும் **புதிதாக நான்கு பொறியாளர் குழுக்களை அமைக்க உள்ளோம்.**

புஞ்சையில் கிடைக்கும் நீரை சீராகப் பயன்படுத்தி நீருக்கும்





# மைலேடீஸ் தோட்டத்தில்

தாவர இனங்களை நேசித்து அவற்றினைச் சேதாரமின்றி அன்புடன் பாதுகாக்கும் உணர்வையும் மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியையும் உண்டாக்குவதே மலர்க்காட்சியினை நடத்துவதன் நோக்கமாகும்.

சென்னை மாநகராட்சி 59ஆம் ஆண்டு மலர்க்காட்சியின் துவக்க விழா மக்கள் பூங்காவிலுள்ள ''மைலேடிஸ் தோட்டத்தில்'' 17.4.84 அன்று நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதிசாந்தா சீலாநாயர், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இந்த மலர்க்கண்காட்சியில் அரசமரம், ஆலமரம் போன்ற பெரிய மரங்களின் அமைப்பு அப்படியே சிறியதாக தொட்டிகளில் 'பான்சாய்' முறையில் வைக்கப்பட்டுள்ளது இந்த ஆண்டின் சிறப்பு அம்சம்' என்றார்.

சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு கி.சந்திரசூடன், இ. ஆ. ப. அவர்கள் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

''சென்னையில் உள்ள அறுபது எழுபது வயது முதியவர்களும், குழந்தைகளும் இந்தப் பூங்காவினைப் பெரிதும் விரும்பி வருகின்றார்கள். அரசாங்கம் மட்டுமின்றி பொதுமக்களும் ஆதரவு கொடுத்தால்தான் பூங்காக்களை நல்ல முறையில் நிர்வகிக்க முடியும்'' என்றார்.

மலர்க் கண்காட்சியினைத் துவக்கி வைத்து மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் சிறப்புரையாற்றுகையில்:

''இப்படிப்பட்ட மலர்க்கண் காட்சிகள் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளச் செய்வது பாராட்டத்தக்கது.

''வெளிநாட்டினர் இப்படிப் பட்ட கண்காட்சிகளைப் பாராட்டுகின்றனர். பொது நிறுவனங்களும், சமூக சேவை நிறுவனங்களும் பூங்காக்களைப் பராமரிக்க அதிக அளவில் முன்வரவேண்டும்.

விழா இறுதியில், பூங்காக்களை நல்லமுறையில்பராமரித்த பொது நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், மாநகராட்சி ஊழியர்களுக்கு கேடயங்களையும், கோப்பைகளையும் மேதகு ஆளுநர் வழங்கினார்.

இந்த வருட மலர்க்கண் காட்சியில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் **காய்கறிகளினால் மலர்கள் செய்து வைக்கப்பட்டது.** 'பான் சாய்' முறையில் வைக்கப்பட்ட மரங்கள் பற்றியது.

—அ. மருது.

## அழகிய பூங்காக்கள்

சென்னை மாநகராட்சி, சிறிதும் பெரிதுமாக 88 பூங்காக்களை சுமார் 330 ஏக்கர் பரப்பளவில். சென்னை மாநகரத்தின் பல்வேறு பாகங்களிலும் அமைத்துள்ளது.

மேலும் நகரத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளிலும் புதிய பூங்காக்களை நிர்மாணிக்க இந்நடப்பு ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.


காலனிகள் ஏற்படும்போதெல்லாம் சென்னை மாநகராட்சி அக்காலனிகளில் பத்து சதவீதம் திறந்தவெளிகள் இருக்க வேண்டுமென வலியுறுத்தி, பூங்காக்கள், விளையாட்டு மைதானம் போன்றவற்றை அமைக்க வழிகோலியுள்ளது.

புத்தம் புதிய முயற்சியாக கே. ஜே. மருத்துவமனையின் ஆதரவில், பெட்ரோல் விற்பனை நிலையங்களில் சிறந்த முறையில் பசுமை நிறத்துடன் அழகு மிளிரும் வகையில் வைத்திருக்கும் பெட்ரோல் விற்பனை நிலையங்கட்குப் பரிசுகள் மலர்க்காட்சியின் போது வழங்கப்படும்.

சாலைகளை விரிவுபடுத்துவதில் சென்னையிலுள்ள சாலை ஓர மரங்கள்மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பாதிப்பினை நிவர்த்திக்க 15,000 மரக்கன்றுகள் நகரின் பல்வேறு சாலைகளில் நடப்பட்டுள்ளன.

மக்கள் பூங்கா 4 ஏக்கர் பரப்பளவு கொண்டு நகரத்தின் மையத்தில் அமைந்து ஆண்டுதோறும் மலர்க்காட்சி நடைபெறும் பூங்காவாக உள்ளது.





# வேலை வாய்ப்புக்கு ரூ 163 கோடி

வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கடந்த 8 மாதத்தில் மட்டும் 163 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

படித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்குத் தொழில் தொடங்க 25 ஆயிரம் ரூபாய் வரை, கடன்வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இதற்காக மத்திய அரசு நிர்ணயித்த குறியீடு 17 ஆயிரத்து 500 பேருக்கு, 30 கோடி ரூபாய் கடனுதவி அளிப்பது. ஆனால் தமிழ்நாட்டில் கொடுத்து இருப்பதோ, 20 ஆயிரத்து 189 பேருக்கு மொத்தம் 31 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஆகும்.

இதில் கால்பங்குப் பணம் அதாவது 8 கோடி ரூபாய் உதவித் தொகையாகும். மீதி வங்கிக் கடன். இந்தப் பணத்தை முதல் 1½ ஆண்டுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் 7 ஆண்டுக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

பிட்டர், டர்னர், தச்சு வேலை, கொல்லுப் பட்டறை வேலை போன்றவற்றில் பயிற்சியும் கொடுத்து, அதே தொழிலைத் தொடங்க வங்கி கடன் கொடுக்கும் திட்டப்(டிரைசெம்) படி இதுவரை 18 ஆயிரத்து 492 பேருக்குத் தொழிற் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

அவர்களில் தொழில் தொடங்க முன் வந்தவர்கள் 10 ஆயிரத்து 339 பேர். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 6 ஆயிரத்து 983 பேர்.

வங்கிளிடம் 4¼ கோடி ரூபாய் கடன் கொடுக்கச் சொன்னதில் இதுவரை 3 ஆயிரத்து 303 பேருக்கு ஒரு கோடியே 61 இலட்ச ரூபாயை வங்கிகள் கொடுத்து இருக்கின்றன. இதில் ¼ பங்கு உதவித் தொகையாகும்.

சமுதாயத்தில் நலிந்தவர்கள், விதவைகள் போன்றவர்களுக்கு இட்லிகடை, காய்கறிக் கடை, கட்பீஸ் கடை போன்றவை நடத்த 2 ஆயிரம் ரூபாய் வரை கடன் கொடுக்கும் திட்டப்படி, 1983ஆம் ஆண்டு அக்டோபரில் இருந்து டிசம்பர் வரை ஒரு லட்சத்து, 70 ஆயிரத்து 564 பேருக்கு, 30 கோடியே 10 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இதில் தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்கள் 56 ஆயிரத்து, 966 பேர். அவர்களுக்குக் கொடுத்த கடன் 7 கோடியே, 66 இலட்சம் ரூபாய் ஆகும்.

அதன்பின் இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து மார்ச் முடிய மேலும் ஒரு லட்சத்து, 76 ஆயிரம் பேருக்கு 41 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த வகையில் 3 லட்சத்து 56 ஆயிரம் பேர் பலன்அடைந்து இருக்கிறார்கள். ஆக கடந்த 8 மாதத்திற்குள் இந்த மூன்று வகையிலும் சேர்த்து 103 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதில் 26 கோடி ரூபாய் உதவித் தொகை ஆகும்.

இந்தத் திட்டம் சிறப்பாக நடந்து வருவதில் மகிழ்ச்சி அடைகிறோம். வங்கிகளுக்கு கடன் பணம் திருப்பி வருவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. இதில் 5 ஆயிரம் ரூபாய் வரைக்கும் ''சொந்த ஜாமீன்'' கேட்பதில்லை.



இது தவிர கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக மொத்தம் 50 கோடி ரூபாய் தமிழக அரசு அனுமதித்துள்ளது. அதில் கிராமப்புற ரோடுகள் போடுவதற்காக 24 கோடி ரூபாய், சிறிய நீர்ப்பாசனக் குட்டைகள், குளங்களை அபிவிருத்தி செய்யப் பொதுப்பணித் துறை மூலம் 16 கோடி ரூபாய், கசிவு நீர்க் குட்டைகளை ஏற்படுத்திப் பக்கத்திலுள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் மட்டத்தை உயர்த்த 14 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, 1,625 குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஆயிரம் குளங்கள் குளித்தலை, மணப்பாறை, திண்டுக்கல், தாராபுரம் போன்ற வறண்ட பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த வேலைகளுக்கு உள்ளூர் ஆட்களையே அமர்த்திக் கொண்டு தினம் 7 ரூபாய்க்குக் குறையாமல் கூலி கொடுக்கப்படுகிறது. அந்தக் கூலியில் ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் 85 காசு விலையில் கொடுக்கப்படுகிறது.

ஆக வேலை வாய்ப்புக்காக 163 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது.

**[தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் 6-4-1984 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தவை.]**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்-மாநில ஆய்வரங்கு, 5.4.'84 அன்று சென்னை இராசாசி மண்டபத்தில் நடந்தது. இந்த ஆய்வரங்கில் தமிழகம் முழுவதிலிருந்தும் 500 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

ஈரோடு, பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. ஆர். அரங்கசாமி, எம்.எல்.ஏ. கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்தார்.

கூட்டுறவுத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு வி.டி. துரைராஜ் தலைமை வகித்துப் பேசினார்.

கூட்டுறவுப் பதிவாளர் திரு. தா.ம. ஆறுமுகம் ஆய்வரங்கை அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு அரசு விவசாய உயர்மட்டக் குழுவின் தலைவர் திரு. முனு ஆதி தொடக்கவுரை ஆற்றினார். அவர் பேசுகையில் "கூட்டுறவுத்துறை மக்களுக்காகப் பல்வேறு நலப் பணிகளை ஆற்றி வருகின்றது. ஆனால் மக்கள் அவற்றையெல்லாம் அறிந்து கொள்ள - புரிந்துகொள்ளத் தக்க விளம்பரங்கள் போதாது. திரைப்படம், வானொலி, பத்திரிகை ஆகியவற்றில் போதிய விளம்பரங்கள் செய்யவேண்டும். இவை தவிர, துண்டு வெளியீடுகளும் வெளியிடப்பட வேண்டும்' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தக் கருத்தரங்கின் மூலம் உங்களுடைய ஆலோசனைகளை- கருத்துக்களை - தீர்மானங்களை அரசுக்கு அனுப்பி வையுங்கள்.




''தமிழ்நாட்டில், வட்ட அளவில் 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. 1983-84ல் இவற்றின் மூலம் ரூ.108 கோடி அளவுக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கூட்டுறவு மூலம் 1983-84ல் ரூ. 170 கோடி அளவுக்கு நகைக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

''ஊராட்சி ஒன்றியங்கள் சார்பில் 100 காய்கறி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடன்கள் திரும்பி வர வேண்டும்; அப்போதுதான் மேலும் பல பணிகளைத் தொடர்ந்து செய்யமுடியும்.''

தொடக்கத்தில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தனி அலுவலர் திரு.ம.கனக சபாபதி அனைவரையும் வரவேற்றார். புதுக்கோட்டை காடம்பட்டி விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.தி. வெங்கடாசலம் நன்றி நவின்றார்.

—பி. வி. ஜி.

## குடிசைவாசிகளுக்கு மனைப்பட்டா

சென்னை, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள 'டிரைவர்ஸ் காலனி' குடிசைவாசிகளுக்கு மனைப் பட்டா மற்றும் வீட்டு அபிவிருத்திக் கடன் தொகை வழங்கும்விழா 6.3'84 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், திரு பா. அங்கமுத்து, எம் எல் சி., முன்னிலையில், குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திருமதி ஜ. வெ. கி. சுலோசனா சம்பத் 47 நபர்களுக்கு மனைப் பட்டாவினையும், வீட்டு அபிவிருத்திக் கடன் தொகையாக ரூபாய் 39,550-ம் வழங்கினார்.

"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''
—என்றார் திருவள்ளுவர்.

அந்த வகையில் செயல்படும் திறமை மிக்க மருத்துவர்களைக் கொண்டு செயல்படுகிறது ஈரோட்டிலுள்ள தந்தை பெரியார் அரசினர் தலைமை மருத்துவ மனை.

45 மருத்துவர்கள் நல்லவிதமாகப் பணிபுரியும் இந்த மருத்துவ மனையில் நாள் ஒன்றுக்கு 3000 பேர் புறநோயாளிகள் வந்து போகின்றனர். உள்நோயாளிகளின் எண்ணிக்கை 710.





# பெரியார் மாவட்டத் தலைமை மருத்துவமனை

86 படுக்கைககள் கொண்ட மருத்துவப் பிரிவு, 211 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைப் பிரிவு, 60 படுக்கைகள் உள்ள சிறுவர்கள் பிரிவு, 33 படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவப் பிரிவு, 32 படுக்கைகள் கொண்ட ஆஸ்துமா சிகிச்சைப் பிரிவு, 20 படுக்கைகள் கொண்ட தொழுநோய்சிகிச்சைப் பிரிவு, 55 படுக்கைகள் கொண்ட குடும்பநல சிகிச்சைப்பிரிவு, 25 படுக்கைகள் உள்ள சித்த மருத்துவப் பிரிவு, 10 படுக்கைகள் உடைய தொற்றுநோய்மருத்துவ பிரிவு, 10 படுக்கைகள் கொண்ட விபத்துக் கால- மற்றும் அவசர காலச் சிகிச்சைப் பிரிவு எல்லாம் இங்குண்டு.



மாவட்ட மருத்துவ அதிகாரியாக டாக்டர் எம். சீனிவாசன் செயல்படும் இந்த மருத்துவ மனையில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு அமைத்திடவும், அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

4 சடலங்களை வைத்துப் பாதுகாக்கத் தக்க பிணவறை ஒன்றும் இரண்டு அறுவைச் சிகிச்சை நிலையங்களும் இங்குள்ளன. இந்த இரு அறுவைக் கூடங்களும் விரைவிலேயே குளிர்சாதன வசதியுடையதாக்கப்படவிருக்கின்றன.

கண்சிகிச்சை, முடநீக்கியல், தோல் மற்றும் பால்இன நோய், மார்புச்சிகிச்சை, பல் வைத்தியம், குழந்தைகள் வைத்தியம் என்பன போல, 21 வகைச் சிகிச்சைப் பிரிவுகள் உள்ள இந்தத் தலைமை மருத்துவ மனையின் மொத்தப் பரப்பளவு 7 ஏக்கர் ஆகும்.

1982-ல் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட குடும்ப நல அறுவைச் சிகிச்சைப் பிரிவின் மூலம் மட்டும் பெரியார் மாவட்டத்தில் இதுவரை 5000 பேருக்கு மேல் லெப்ராஸ்கோப்பி சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஈரோடு, கோபி, கொடுமுடி, தாராபுரம், காங்கேயம், சத்தியமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகள் 'தந்தை பெரியார் அரசு தலைமை மருத்துவ மனை' நிர்வாகத்தின் கீழ் இயங்குபவைகளாகும்.

3 ஆம்புலன்ஸ் வண்டிகள் கொண்ட இம் மருத்துவமனைக்கு நடமாடும் மருத்துவ ஊர்தி இல்லாத குறை ஒன்றிருக்கிறது.

நெசவுத் தொழிலில் ஈடுபடுவோர் அதிகமுள்ள மாவட்டம் அல்லவா? அவர்களுக்கெனவும், பீடி சுற்றும் தொழிலில் ஈடுபடுவோர்க்கெனவும் அவ்வப் பகுதிகளுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சை அளிக்கச் சிறிய அளவிலான ஒரு மருத்துவ யூனிட் செயல்படுவதை நமக்குத் தெரிவித்தார் மாவட்ட உதவி மருத்துவரான டாக்டர் டி.ஜி.இராமமூர்த்தி.

இதயத் தொடர்பான அறுவைச் சிகிச்சை, மூளை தொடர்பான அறுவைச் சிகிச்சை, இரண்டும் இங்கே செய்ய வசதியில்லை. மற்றெல்லாவித அறுவைச் சிகிச்சைகளும் இங்கே திறம்படச்செய்யப்படுகின்றன.

# பேசும் பொற்சித்திரங்கள் பெற்ற பரிசுகள்



இந்தியக் குழந்தைகள் நலக் கழகத்தின் தமிழ்நாட்டுக் கிளை, இந்த நாட்டுக் குழந்தைகளின் நல்வாழ்விலும், வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு, 'பால்வாடி' களை நடத்தியும், ஆண்டு தோறும் 50 பாலசேவிகாக் களுக்கு உதவித்தொகை வழங்கிப் பயிற்சிகொடுத்தும் வருகிறது.

இந்தக் குழு அவர்களுக்கு வேலைவாய்ப்பு மட்டுமல்லாமல் பணிப்பாதுகாப்பும் அளித்து வருகிறது. இந்தக் கழகத்தின் இயக்கத்திற்குத் தேவையான நிதியில் பெருமளவு மத்தியக் குழுவினரிடமிருந்து பெறப்படுகிறது.



இதுதவிர, ஆண்டுதோறும் பண்டிதநேருவின் பிறந்தநாளான குழந்தைகள் தினத்தில், இதற்கெனப் பிரத்தியேகமாக வெளியிடப்படும் 10 காசு விலையுள்ள அஞ்சல் தலைகளை விற்பனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்தக் குழந்தைகள் நலக் கழகமும், சென்னை மாநகராட்சியும் ஒருங்கிணைந்து, ஆண்டு தோறும் 'குழந்தைகள் காட்சிப்' போட்டியைச் சிறப்பாக நடத்தி அதில் ஓராண்டுக்குட்பட்ட குழந்தைகளைப் பங்கு கொள்ளச்செய்கின்றன. இதில், சென்னை மாநகராட்சியின் குழந்தைகள் நல விடுதிகளில் பிறந்த குழந்தைகளுக்கு முதலிடம் தரப்படுகிறது.

வருவாய் குறைந்த குடும்பங்களில், குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கு, அக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், அவர்களின் குழந்தைகளும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

குழந்தைகளின் முதல் தேர்வு மாநகராட்சி குழந்தைகள் நல விடுதிகளின் உதவியோடு நடத்தப்படுகிறது. குழந்தைகள் வயதுக்கேற்ப 4 மாதம் வரையுள்ள குழந்தைகள், 5 முதல் 8 மாதம் வரையுள்ள குழந்தைகள், 9 மாதம் முதல் ஒருவயது வரையுள்ள குழந்தைகள் என மூன்று பிரிவுகளாகப்பிரிக்கப்படுகின்றன.

இடைத் தேர்வையும், இறுதித் தேர்வையும் இந்தியக் குழந்தை நலக் கழகத்தால் நியமிக்கப்படும் நீதிபதிகள் நடத்துகின்றனர்.

இவ்வாண்டு நடைபெற்ற குழந்தைகள் காட்சிப் போட்டியில், மூன்று பிரிவுகளிலும் முறையே 197, 244, 166 (மொத்தம் 607) குழந்தைகள் பங்கு கொண்டனர். இவர்களில் வட சென்னையில் முப்பிரிவுகளிலுமாக 9 குழந்தைகளும், தென் சென்னையில் முப்பிரிவுகளிலுமாக 9 குழந்தைகளுமாக 19 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்குப் பரிசு வழங்கும் விழா, சென்னை மாநகராட்சியின் உள் விளையாட்டரங்கில், 28.3.84ல் மாநகராட்சியின் தனி அலுவலர் திரு.கே.சந்திரசூடன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களின் துணைவியார் திருமதி இந்திரா குரானா, பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

குழந்தைகள் நலக் கழகத் தமிழ்நாட்டுக்கிளையின் இணைச் செயலாளர் திருமதி பிரமீளா கணபதி அனைவரையும் வரவேற்றார். மாநகராட்சியின் கூடுதல் மருத்துவ அலுவலர் திருமதி மாத்யூ நன்றி கூறினார். தொடர்ந்து குழந்தைக் காட்சிப் போட்டி இடைத் தேர்தலில் கலந்து கொண்ட 96 குழந்தைகளின் தாய்மார்களுக்கும் ஊக்கமூட்டும் வகையில் மாநகராட்சி ஆறுதல் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தது.

இத்தகைய விழாக்கள், தாய்மார்களுக்கு நல்ல ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, அவர்களைக் குழந்தை வளர்ப்பில் நல்ல அக்கறை கொள்ளும்படிச் செய்ய உதவுகின்றன என்பதில் ஐயமில்லை.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**
**சாமிபழனியப்பன்**

## தொழுநோய் நிறுவனங்களுக்கு அரசு உதவிகள்

தொழுநோயினைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும், ஆக்கப் பூர்வமான சேவைகள் செய்வதில், அதுவும் குறிப்பாகச் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதில் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தனியார் சேவை நிறுவனங்கள் ஈடுபடுவதை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த நூற்றாண்டு முடிவதற்குள், தொழுநோயினை ஒழிப்பதற்குரிய நடைமுறையை வகுப்பதற்கு, இந்திய அரசு தொழுநோய் ஒழிப்பதற்கான கணக்கெடுத்தல், அது சம்பந்தப்பட்ட கல்வியினைப் போதித்தல், மருத்துவம் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கான உதவி முறைகளின் விதிகளைத் தளர்த்தியுள்ளது. இதன்படி இப்பணியில் பணிபுரிவோருக்கான ஊதிய உயர்வு அளித்தல், மருந்துகளின் விலை, தொழுநோய் சம்பந்தமான பணிகளுக்கான மற்றச் செலவுகள் ஆகியவைகளுக்காக அளிக்கப்படும் உதவித் தொகை அதிகரிக்கப்படும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கணக்கெடுத்தல், நோய் தொடர்பான கல்வி போதித்தல், மருத்துவ சேவை செய்தல் ஆகிய பணியினை ஏற்று நடத்தவும், தளர்த்தப்பட்ட விதிகளின்படி உதவி பெறவும் விரும்பும் சேவை நிறுவனங்கள் இது குறித்த முழு விவரங்களைப் பெற, சென்னை-600 006ல் உள்ள மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநருக்கு எழுதலாம்.

## சென்னை மாநகராட்சிப் பணிகள் – சில செய்திகள்

- இதுவரை மாநகராட்சிப் பகுதியில் 3500 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப் பெற்றுள்ளன.
- தினமும் 45 ஆயிரம் தெரு விளக்குகள் ஒளி தருகின்றன.
- 1200 கிலோ மீட்டர் சாலை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது.
- ஒரு நாளைக்கு 2000 டன் குப்பை, கூளம் சேர்கிறது.
- மாநகராட்சியின் வருமானம் ரூ. 28 கோடி. இதில் 19 கோடி ரூபாய் ஊழியர்களின் சம்பளத்திற்குப் போய்விடுகிறது.
- துப்புரவுப் பணியாளர் 5600 பேர் உள்ளனர்.

[முண்டகக்கண்ணிஅம்மன்கோவில் தெரு பாலம் அடிக்கல் நாட்டு விழா உரைகளிலிருந்து திரட்டியவை.]

# ஒரு சமதர்மவாதி நினைக்கப்படுகிறார்

திரைப்படத் துறையில் பல புதிய உத்திகளைப் புகுத்திய டைரக்டர் அமரர் கே.சுப்ரமணியம் அவர்களின் 80வது பிறந்த நாள் விழா 13.4.84 அன்று காலை சென்னை கெயிட்டி திரை அரங்கில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வருகைபுரிந்தோரை மாஸ் மீடியா பவுண்டேஷன் ஆப் இந்தியா நிறுவனத்தின் தலைவரும் கே.சுப்பிரமணியம் அவர்களின் மகனுமாகிய திரு எஸ்.கிருஷ்ணசாமி வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''கலை உலகில் மிக்க சிறப்போடும் பெருமையோடும் வாழ்ந்தவர் டைரக்டர் கே. சுப்ரமணியம். கலைஞர்கள் நல்லமுறையில் உழைப்பதற்கு வழிகாட்டிய மாமனிதர் அவர். பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே கலந்து கொள்கிறார்கள். அனைத்துக் கட்சியினரிடத்திலும் அவர் எத்தகைய அன்பு கொண்டிருந்தார் என்பதற்கு இதுவே சான்று''



விழாவைத் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலைஞர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றதன் மூலம் ரஷ்ய நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் நல்லுறவை உருவாக்கியவர் டைரக்டர் அமரர் கே.சுப்ரமணியம் அவர்கள்.

''கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தலைமறைவாக இருந்த காலத்தில் அவர்களுக்குத் தங்குவதற்கு தமது வீட்டில் இடம் அளித்தவர் கே. சுப்ரமணியம். பழுத்த காங்கிரஸ் காரரான அவர், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு உதவி செய்திருக்கிறார். தீவிர சுயமரியாதைக்காரரான கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றார். எல்லோருடைய உறவும் தமக்கு வேண்டும் என்பதுதான் அவரது இலட்சியமாக இருந்தது.

''படத்தயாரிப்பாளர் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டதை அறிந்த அவர், உடனே சில நடிகர்களை அழைத்து நடிகர் சங்கம் ஒன்றினைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ததுடன் - ஆரம்பச் செலவுக்குப் பணமும் கொடுத்தார்.

''உடல்நலிவுற்றநேரத்தில்கூட அவர் பெருந்தொண்டு செய்து வந்தார். திறமை படைத்த வக்கீல் அவர். அந்தத் தொழிலை விட்டுவிட்டு, திரையுலகுக்கு வந்து மாபெரும் சாதனைகளைச் செய்தார்.''

பின்னர், திரைப்பட ஆராய்ச்சியாளர் திரு தியோடர் பாஸ்கரன் உரையாற்றுகையில், ''மௌனப் படக் காலத்திலிருந்தே திரை உலகில் பணியாற்றி வந்த கே. சுப்ரமணியம் அவர்கள், சிறந்த தேசியவாதி. 1930ஆம் ஆண்டிலேயே சாதி ஒழிப்பின் அவசியம் குறித்துத் திரைப்படத்தின் மூலமாக வலியுறுத்தினார்'' என்றார்.

திரைப்பட இயக்குநர் திரு. பி. புல்லையா பேசுகையில், ''தமிழ்த் திரை உலகுக்கு அவர் மாபெரும் சாதனைகளையும் பல அரும்பெரும் கடமைகளையும் ஆற்றியிருக்கிறார். அவர்நாட்டுப் பற்று மிக்கவர்'' என்று தெரிவித்தார்.

இந்தியத் தொழிற் சங்க மையத்தின் தலைவர் திரு.வி.பி. சிந்தன், உரையாற்றுகையில், ''நானும் நண்பர் ராமமூர்த்தியும் தலைமறைவாக இருந்த காலத்தில் எங்களுக்குப் புகலிடம் தந்து தமது இல்லத்தில் தங்க வைத்துக் கொண்டவர் திரு கே. சுப்ரமணியம். 'தேச சேவை செய்ய வாரீர்' என அனைவரையும் தியாக பூமி படத்தின் மூலம் அழைத்த தேசியவாதி அவர்'' என்றார்.

அடுத்து, இந்திய திரைப்பட சம்மேளனத்தின் தலைவர் திரு. டி.இராமானுஜம் பேசுகையில்,

''இந்திய சரித்திரத்தில் -விடுதலைப் போராட்ட வரலாற்றில் யார் யார் கலந்து கொண்டு கஷ்டப்பட்டனர் என்பதை எல்லாம் நன்கு அறிந்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு மரியாதை காண்பித்தவர் கே. சுப்ரமணியம்'' எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு எம்.பழனியாண்டி பேசுகையில், ''நல்ல கருத்துக்களைத் திரையில் சொல்லும் திறமையாளர் கே. சுப்ரமணியம். தன் குடும்பத்தினர் மட்டுமல்ல, எல்லாக் குடும்பத்தினரும் நன்கு வாழ வேண்டும் என்றுகருதியபெருந்தகை அவர்'' என்றார்.

மாஸ் மீடியா பவுண்டேசன் ஆப் இந்தியா நிறுவனத்தின் பொது இயக்குநர் திரு ஏ. ஆர். பாஜி நன்றியுரை கூறினார்.

அதன் பின்னர் கே. சுப்ரமணியம் அவர்கள் 1938ஆம் ஆண்டில் தயாரித்து வெளியிட்ட 'தியாக பூமி' என்னும் திரைப்படம் காண்பிக்கப்பெற்றது.

நாட்டு விடுதலை உணர்வு, சுதர்ப்பற்று, சாதி ஒழிப்பு, பெண் கொடுமை தீர்க்கப்பட வேண்டிய அவசியம் ஆகிய குறிக்கோள்கள் இந்தப் படத்தில் தக்க விதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்தப் படத்திற்கு ஒரு தனி வரலாறு இருக்கிறது.


பேராசிரியர் கல்கி எழுதிய கதையைத் தழுவித் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் அந்நாளில் கெயிட்டி திரையரங்கில்தான் திரையிடப்பட்டது. இதில் தேசப் பற்று மிக்க காட்சிகள் வருவதால் அன்றைய அந்நிய வெள்ளை ஏகாதிபத்திய அரசு பொது மக்கள் முன் இப்படம் காண்பிக்கப்படக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்தது. அந்தத் தகவல் சுப்ரமணியம் அவர்களுக்கு எட்டியது. அதனால் உத்தரவு கைக்குக் கிடைப்பதற்குள் அந்தப் படத்தைப் பொது மக்களுக்கு இலவசமாகக் காண்பிக்க முன்வந்தார். தொடர்ந்து பலமணி நேரம் கெயிட்டி அரங்கில் 'தியாக பூமி'யின் இலவசக்காட்சி நடைபெற்றது. 24 மணி நேரம் இந்தப் படம் தொடர்ந்து ஓடியது. அரங்கம் நிரம்பி வழிந்தது. பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் வந்து பார்த்துச் சென்றனர்.

வரலாற்றுப் புகழ்மிக்க அந்த நிகழ்ச்சி நடைபெற்று 45 ஆண்டுகள் ஆகின்றன. அதை நினைவு கூரும் வகையிலும் சுப்ரமணியம் அவர்களின் நினைவாகவும் இந்தப் படம் 13.4.84ல் திரையிடப்பட்டது. இந்தப் படத்தின் பிரதியை புனாவில் உள்ள தேசிய திரைப்பட ஆவணக் காப்பகம் கொடுத்துதவியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவை ஒட்டி பிலிம் நியூஸ் ஆனந்தன் அமைத்த திரைப்பட இயக்குநர் கே.சுப்ரமணியம் அவர்கள் தயாரித்த பல திரைப்படங்களின் புகைப்படங்கள், பாட்டுப் புத்தகங்கள் ஆகியவை கொண்ட கண்காட்சி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

**நிகழ்ச்சித் தொகுப்பு : சுந்தர்**

# கூட்டுறவு வங்கிகள் ஒரு வரப்பிரசாதம்




சென்னையை ஒட்டி வளரும் வேளச்சேரியில் ஒரே ஒரு வங்கி தான் உள்ளது. பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனது 25வது கிளையை 12-3-84 அன்று இங்கே தொடங்கியது.

விழாவிற்கு கூடுதல் பதிவாளர் திரு பி. சுந்தரம், தலைமை தாங்கினார். வங்கியின் தனி அலுவலர் திரு பெ. கன்னியப்பன், வந்திருந்தோரை வரவேற்று உரையாற்றுகையில், 'மற்ற வங்கிகளைக் காட்டிலும் வட்டி அதிகம் தருகிறோம். குறைந்த வட்டி வசூலிக்கிறோம். இந்த வங்கியில் 400 பேர் கணக்கு ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மத்திய வங்கிகள் மூலம் 10 இலட்சம் பேர் பயனடைகிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு செங்கோட்டுவேலன் அவர்கள் உரையாற்றுகையில், ''கூட்டுறவுத் துறையில் கடன் வசதி செய்வது வெற்றி பெறுகிறது. கூட்டுறவு வங்கிகளுக்கு மக்களிடம் பழக நல்ல வாய்ப்பு உள்ளது. இந்த மத்திய வங்கி இலாப நோக்கத்தோடு பணியாற்றவில்லை'' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 25-வது கிளையினைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''ஏழை எளிய - நடுத்தர மக்கள் இந்த வங்கி மூலம் பயன் பெற விரும்புகிறேன். 1930இல் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஆல்போல் வளர்ந்து உள்ளது. ரூ. 500 கோடி மூலதனம் பெற்றுள்ளது. 1977இல் டெபாசிட் ரூ. 154 கோடி. ஆனால் இன்று 487 கோடியாக அது உயர்ந்துள்ளது.

''கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பொதுமக்களின் வளர்ச்சியாகும் குஜராத் மாநிலத்திற்கு அடுத்து கூட்டுறவு வங்கி வளர்ச்சி தமிழகத்தில் சிறந்து விளங்குகிறது.''

விழா முடிவில் வங்கியின் செயலாளர் திரு பெ. தங்கராசு நன்றி கூறினார்.

—அ. மருது

## 26 வது கிளை

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் 26வது கிளையின் திறப்பு விழா சூளைமேட்டில் 20.3.'84 அன்று சிறப்பாக நடந்தது.

வங்கியின் தனி அலுவலர் திரு. பெ. கன்னியப்பன் அனைவரையும் வரவேற்று, வங்கி ஆற்றி வரும் பணிகளை எடுத்துக் கூறினார்.

கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு ஆர். சந்தானம், இ.ஆ.ப., பேசுகையில், ''இந்த வங்கி நலிந்த பிரிவினர்களுக்குக் கடனுதவி வழங்கி அவர்கள் வாழ்வில் முன்னேற வழிகோலி வருகிறது. மீனவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும், காய்கறி விற்போருக்கும் இந்த வங்கி பல வகைகளில் கடனுதவி வழங்கி வருகிறது'' என்றார்.

சென்னை மண்டல இணைப் பதிவாளர் திரு எஸ்.டி. வைத்திலிங்கம் பேசுகையில், ''வைர விழா நோக்கி வங்கி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது'' என்றார்.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் திரு கு. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப. பேசுகையில், ''ஏழை எளிய மக்களுக்கு வங்கி வசதி கிடைக்க வேண்டும் என்ற கருத்தில், இந்தப் பகுதியில் இந்த வங்கியின் கிளை ஆரம்பிக்கப்படுகிறது'' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:


''இந்த வங்கி மிக வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அதற்கு அடையாளம்தான், இந்தக் கிளைத் திறப்பு விழா.

''குஜராத், மகாராஷ்டிரம் முதலான மாநிலங்களோடு போட்டி போடும் அளவுக்குக் கூட்டுறவுத் துறை வளர்ச்சி பெற்று வருகிறது. கூட்டுறவு வங்கிகள், நடுத்தர ஏழை எளிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகின்றன. நலிந்தவர்களுக்குக் கடனுதவி மற்றும் நகைக்கடன், நுகர்வோர் கடன்கள் தந்து அவர்கள் வாழ்வில் முன்னேற வழி செய்து வருகின்றன. கடன்கள் பெறுவதுபோல, கடன் பெற்றவர்கள் அதை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தவும் முன்வர வேண்டும்''.

விழாவில் ஏழை எளியவர்களுக்குக் கடனுதவிகள் வழங்கப் பட்டன. பலர் புதிதாகக் கணக்குகளை ஆரம்பித்தனர். கிளை மேலாளர் திரு டி.எஸ். சிவகுமார் நன்றி கூறினார்.

—பி. வி. ஜி.

# சட்டமன்றத்தில் திரட்டியவை



**கோ**ல்லிமலையில் 20 கே. வி. மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

**தொ**ழில் வளர்ச்சியில் பின்தங்கிவிட்ட செய்யார் வட்டத்தின் துரித வளர்ச்சிக்கு உதவுவதற்காக மாநில அரசு இப்பகுதியைப் பின்தங்கிய பகுதியாக 1979 டிசம்பரில் அறிவித்தது. இதனால் இங்கு தொடங்கப்படும் சிறுதொழில்களுக்கு மாநில அரசே தன் நிதியிலிருந்து மானியம் வழங்குகிறது.

**த**மிழ்நாடு மருத்துவத்துறையில் (மருத்துவ மனை மற்றும் மருத்துவக் கல்லூரிகள்) சிவில் சர்ஜன் தகுதியில் பணிபுரிபவர்கள் மொத்தம் 567 பேர்கள்.

**சொ**ந்த வீடு இல்லாத சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு முன்னுரிமை அளித்து மனைப்பட்டா வழங்குவதற்கு உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மொழிப் போராட்ட வீரர்களுக்கும் முன்னுரிமை அளிப்பது பற்றிய செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஆ**றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உள்ளாட்சிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசிடம் ரூ. 11.20 கோடிகள் நிதி உதவிகோரப்பட்டு மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.




**வெ**ள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கையின் இடர்களால் பயிர் பாதிக்கப்பட்டு, வருவாய்த்துறையால் விளைச்சலின் அளவு 50 சதவீதத்திற்கும் குறைவென மதிப்பீடு செய்யப்பட்டும், நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டால்,விவசாய சேவைக் கூட்டுறவுச்சங்கங்களில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குறுகிய கால கூட்டுறவுக் கடன்கள் 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் நடுத்தர காலக் கடன்களாக மாற்றப்படுகின்றன. அப்படிப் பட்ட கடன்தாரர்களுக்கு புதிய கடன்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.



**சே**லம் மாவட்டத்தில் மொத்த நெசவாளர்கள் 3.89 இலட்சம் பேர். இவர்களில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக 1,53,540 பேர் உள்ளனர்.

**தி**ருச்சி சட்டக் கல்லூரியில் தமிழ் வழிப் பிரிவு வகுப்பு தொடங்கப் பெற வேண்டும் என கோரிக்கைமனு மாணவர்களிடம் இருந்து வந்துள்ளதை அரசு பரிசீலித்து வருகிறது.

**வெ**ளி மாநிலங்களில் தொழில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்குத் தகுதியின் பேரில் கல்வி உதவிகள் அளிக்கப்படுகின்றன.

**ஊ**ராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு கொல்லுப் பட்டறைகள் 152 ஒன்றியங்களில் இயங்குகின்றன.




**ப**ட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் 1983-84ஆம் ஆண்டில் இதுவரை 60 புதிய பேருந்துகளைப் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக வழித்தடங்களில் விட்டுள்ளது. மேலும் 1984-85-ல் 100 புதிய பேருந்துகளை விட உள்ளது.




**பி**ரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் 'தாட்கோ' மூலம் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்படி ஒரு வீட்டுக்காகும் மொத்தச் செலவு ரூ. 4,300-ல் அரசு பங்கு ரூ. 3,225 ஆகும். பயன் பெறுபவர்களின் பங்கு ரூ.1,075 ஆகும். இந்தப் பங்குத் தொகையை அவர்கள் பணமாக, உழைப்பு அல்லது தளவாடங்கள் மூலம் செலுத்த வேண்டும்.

**ச**த்தியமங்கலம் தொகுதியில் ஆய்வில் ஆறு பாசனத் திட்டங்கள் உள்ளன.

**த**மிழ்நாட்டில் கயிறு தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காக, ஒரு மண்டலக் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினை நிறுவிட கயிறு வாரியம் முன்வந்துள்ளது. இந்நிலையத்தினை நிறுவுவதற்காக 1982-83-ஆம் நிதி ஆண்டில் ரூ. 50.90 இலட்சம், கயிறு வாரியம் ஒதுக்கி உள்ளது. இந்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்ப் பட்டி கிராமத்தில் விரைவில் அமையும். தமிழ்நாட்டில் நீலகிரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் தவிர, ஏனைய 14 மாவட்டங்களில் 57 கயிறு மற்றும் கயிறு பொருட்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச்சங்கங்களிடமிருந்து அரசின் தேவைகளுக்கு பொருட்களை வாங்குவதற்கு நான்காவது முன்னுரிமை இடம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முன்னுரிமை 31-3-87 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**நா**கப்பட்டினத்தில் சாலையோர விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பரிசீலனையில் உள்ளது. திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 12.50 இலட்சம். அதேபோல சாலையோர விடுதிகள் காரைக்குடி, மேல்மருவத்தூர் ஆகிய இடங்களிலும் கட்டப்படவுள்ளது.

**கோ**வை மாவட்டம், மேட்டுப்பாளையத்திற்கு விடுத்துள்ள சிறுமுகையில், உள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பவானி ஆற்றில் நீரைக் கெடுத்துவிடுவதால், கால்நடைகள் சாவதும், விவசாயம் பாதிப்பதும் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சே**லம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலம் 614 ஏக்கர். மேற்படி உபரி நிலத்தில் ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் 16 ஏக்கர்.

**1982**-83ஆம் ஆண்டில் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு சுமார் 6.28 இலட்சம் டன்கள் ஆகும்.

**ச**மீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மழை புயலினால் நிகழ்ந்த சேதங்களைப் பார்வையிட மாநில அரசின் வேளாண்மை உயர் மட்டக்குழு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. குழு அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது.




**சி**வகாசி நகர் மற்றும் திருத்தங்கல் பேரூராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் உதவி பெற அரசு இடைக்கால அனுமதி அளித்துள்ளது.

**நி**லவள வங்கிகள் நிலமற்ற விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யும் நிலத்தையோ, அல்லது புதிதாக நிலங்கள் வாங்கிப் பயிர் செய்ய விரும்பும் நிலத்தையோ விலைக்கு வாங்க உயர்ந்தபட்சக் கடனாக ரூ. 7,500-ம் அந்நில வளர்ச்சிக்காக தேவையானால் மேற்கொண்டு கடனும் அளிக்கின்றன. அரசு உத்திரவாதத்தின் பேரில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற இதர பல்வேறு காரியங்களுக்கு திட்ட அடிப்படையில் அரசின் உத்தரவாதத்தின் பேரில் மத்திய காலக்கடனும் வழங்குகின்றன.




சேலம் மாவட்டத்தில் 1,616 கிராமங்கள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,616 மையங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் மாவட்டத்தில் நகர்ப்புறங்களில் 247 சத்துணவு மையங்களும் இயங்கி வருகின்றன. இதற்கென ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,12,36,827 ஆகும்.


முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்கு தோராயமாக ஒரு நாளக்கு 607 டன் அரிசியும், 84 டன் பருப்பும் செலவாகிறது.




பெருந்துறையில் உள்ள ஆரம்பச்சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அவ்விடத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைத்தொடங்க ஒரு கருத்துரு அரசிடம் உள்ளது.

1981 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, நம் மாநிலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை, அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்வர்களின் விவரம் பின்வருமாறு:

| | மொத்த மக்கட் தொகை | எழுதப் படிக்கத் தெரிந்த தவர்கள். |
|---|---|---|
| **ஆதிதிராவிடர்** | | |
| ஆண் | 4,485,332 | 1,823,222 |
| பெண் | 4,395,963 | 811,927 |




| | | |
|---|---|---|
| **பழங்குடியினர்** | | |
| ஆண் | 264,288 | 70,592 |
| பெண் | 255,938 | 35,829 |

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2,462 துளைக் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியப் பொறுப்பில் உள்ளன. 2,210 ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அறநிலையங்களில் தணிக்கைப் பிரிவினரால் தணிக்கை மேற்கொள்ளாத நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 2,191 ஆகும். பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ளவை 928. நிர்வாக அறங்காவலர் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை 1,187. நிர்வாக அதிகாரிகளின்கீழ் உள்ளவை 76.

தஞ்சை மாவட்டத்தில் வெட்டாறு ஆற்றின் குறுக்கே பணவெளி கிராமம் அருகே ரூ. 11.50 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் வனத்துறையில் தனியார் ஆக்கிரமித்துள்ள வனத்துறைப் பகுதியின் பரப்பளவு சுமார் 20,900 எக்டேர்கள் ஆகும்.




தமிழகத்தில் தொழுநோயின் இருப்பு 1977 ஆம் ஆண்டு 1,000 மக்கட்தொகைக்கு 20.4-இல் இருந்து 1981ஆம் ஆண்டு 1,000 மக்கட் தொகைக்கு 14.3 ஆகக் குறைந்துள்ளது. தற்சமயம் 'டாப்சோன்' என்ற மருந்து தொழுநோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் கவனக் குறைவாலும், தொடர் சிகிச்சை எடுக்காததாலும் விட்டு விட்டு இந்த மருந்தினைத் தொழுநோயாளிகள் சாப்பிடுவதால் தொழுநோய்க் கிருமிகள் சாவதற்குப் பதிலாக, இம்மருந்தினை எதிர்க்கும் சக்தியினைப் பெறுகின்றன. எனவே, பல மருந்துக் கலவையின் மூலம் தொழுநோயினை குணப்படுத்த வட ஆர்க்காடு மாவட்டத்தில் புதிய மருந்து அளிக்கும் மாதிரித்திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

**தொகுப்பு : அ. மருதவிநாயகம்**



# புலி வ(ள)ருது!


**1984**, ஏப்ரல் மாதத்தில் 16 முதல் 23 ஆம் தேதி முடிய நாடு முழுவதும் வாழ்கின்ற புலிகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் புலிகளின் எண்ணிக்கை கணக்கெடுப்பு 1979இல் நடைபெற்றது. இந்தக் கணக்கெடுப்பின்படி நாட்டில் 3015 புலிகள் உள்ளன. முதற் கணக்கெடுப்பு 1972இல் நடைபெற்றபோது, இவற்றின் எண்ணிக்கை 1827 ஆக இருந்தது. ஏழாண்டுகளில் இவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அழியும் விலங்கினங்களைக் காக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இவை பாதுகாக்கப்பட்டுள்ளன.

புலிகளின் எண்ணிக்கை எப்படிக் கணக்கெடுக்கப்படுகிறது?

விலங்கின் காலடிச் சுவடி பதிந்துள்ள இடங்களைக் கொண்டு புலிகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கமுடியும். ஒரு புலியின் காலடிச் சுவடு மற்றொன்றிலிருந்து மாறுபட்டிருக்கும். இது மனித விரலின் சுவடு மற்றவர்களிடமிருந்து மாறுபட்டுள்ளது போன்றதேயாகும்.

காலடிச் சுவடுகளை அதற்கென அமைந்துள்ள கண்ணாடித் தகடுகளில் பதிந்தெடுத்துக் கொள்வர். இது பின்னர் வெள்ளைத் தாளுக்கு மாற்றப்படும். பிற மதிப்பீடுகளை ஒப்பிட்டு ஒவ்வொரு புலியினையும் பிரித்து மொத்தமான எண்ணிக்கையைக் கணக்கெடுப்பர். புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.



# பள்ளிக்கூடத் திரைப்பட அரங்குகள்

**ஆ**யிரம் பள்ளிக்கூடங்களில் திரைப்பட அரங்குகள் கட்ட, இதற்கென அண்மையில் அமைக்கப்பட்ட நிறுவனம் தீர்மானித்துள்ளது. எங்கு? மாஸ்கோவில்!

இப்பொழுது மாஸ்கோவில் 1000-க்கு அதிகமான செகண்டரி கல்விப் பள்ளிகளில் திரைப் படங்கள் திரையிடுவதற்கான வசதிகள் உள்ளன; இவற்றில் 100 பள்ளிகளில் திரைப்பட அரங்குகள் உள்ளன. சோவியத் பள்ளிச் சிறுவர்களுக்குத் திரைப் படங்கள் காட்டுவது பொழுது போக்குக்காக மட்டுமல்ல-கல்வி அறிவை வளர்ப்பதற்கும்-கலைச் சுவை உணர்வை வளர்ப்பதற்கும் திரைப்படங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

குழந்தைகளுக்கான திரைப் படங்கள் தயாரிப்பதில் சோவியத் யூனியன் தனிக் கவனம் செலுத்துகிறது. இங்கு ஆண்டு தோறும் குழந்தைகளுக்கான 30-க்கும் அதிகமான முழு நீளக் கதைப் படங்களும், மற்றும் பல கார்ட்டூன் படங்களும், கல்விப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன.

நாட்டில் உள்ள 39 திரைப் பட ஸ்டூடியோக்களிலும் குழந்தைகளுக்கான படங்கள் தயாரிக்கப்படுகின்றன. மாஸ்கோவில் குழந்தைகளுக்கான படங்கள் தயாரிக்கும் கோர்க்கி மத்திய திரைப்பட ஸ்டூடியோ இவற்றில் முதலிடம் வகிக்கிறது. உலகத்திலேயே இத்தகைய ஸ்டூடியோ இது ஒன்றுதான் உள்ளது.

குழந்தைகளுக்கான திரைப்பட அரங்குகளும், சோவியத் யூனியனில் ஏராளமாக உள்ளன. மாஸ்கோவில் உள்ள மத்திய குழந்தைகள் திரைப்பட அரங்கு அவற்றில் முக்கியமானது. இவை தவிர முதியோருக்கான திரைப்பட அரங்குகளிலும், குழந்தைகளுக்கான படங்கள் திரையிடப்படுகின்றன.



குழந்தைகளுக்கான திரைப் பட டிக்கெட்டின் விலை 10 கோபெக் (காசுகள்) தான். ஆண்டு தோறும் இங்கு தேசிய குழந்தைகள் திரைப்பட வாரம் கொண்டாடப்படுகிறது.

## மாணவர் பக்கம்

### எலுமிச்சை அளவுள்ள தேங்காய்

எலுமிச்சம் பழ அளவுள்ள தேங்காயைப் பார்த்திருக்கிறீர்களா? லட்சத்தீவுகளிலுள்ள அதிசயமான தேங்காய்கள், ஒரு கொத்தில் 200 வரை எலுமிச்சையைவிட சற்றே பெரிதாகக் காணப்படுகின்றன.

# கொறிப்பு

## —ஒரு குறிப்பு

வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் துறையிலும் தலை சிறந்து விளங்கிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் பெயரால் அமைந்துள்ள இலக்கிய மன்றத்தின் வெளியீடாகக் கரந்தைப் புலவர் கல்லூரியின் சார்பில், "கொறிப்பு" எனும் திங்கள் கையேடு ஒன்று புதிதாக வெளிவந்துள்ளது.

இந்த ஏட்டில் எழில்மிகு கட்டுரைகள், கவிதைகள், எண்ணங்கள் எல்லாம் மலர்ந்திருக்கின்றன. கல்லூரி மாணவர்களின் கை வண்ணம் காட்டும் கண்ணாடி.

பேராசிரியர் மா. ரா. அரசு நெறியாளராகவும், மாணவர்கள் ஆ. இளங்கோவன், மோ. தமிழ் மாறன், த. திலிப்குமார், இரா. குணசேகரன், சு. பாஸ்கரன், ந. பழனி ஆகியோர் ஆசிரியர் குழுவிலும் இடம் பெற்றுள்ளார்கள். இளைஞர்கள் முயற்சி வெல்க!

# அவனிடம் அதிக அன்பு ஏன்?





ஒரு பண்ணையாரிடத்தில் செங்கோடன், அம்மாசி என்ற இரண்டு பேர் வேலை பார்த்து வந்தார்கள்.

பண்ணையாருக்கு செங்கோடன் இடத்தில் பற்றும் பாசமும் அதிகமாக இருந்தன. அம்மாசிக்கு இது வெறுப்பைத் தந்தது. வேதனையாகவும் இருந்தது.

அம்மாசி ஒரு நாள் பண்ணையாரிடத்தில் வந்து, ''எங்களுக்குள் நீங்கள் வேற்றுமை காட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. செங்கோடனிடம் அதிக அன்பாக இருக்கிறீர்கள். அது ஏன் என்று விளங்கவில்லை'' என்றான்.

அதைக் கேட்டுப் பண்ணையார் சிரித்தார். அம்மாசியிடம் திரும்பி, ''ஏதோ சப்தம் கேட்கிறதே? அது என்னவென்று பார்த்து வா'' என்று சொன்னார்.

அம்மாசி வெளியே ஓடினான். சற்று நேரத்தில் திரும்பி வந்தான். ''வண்டி போகும் சப்தம்'' என்றான்.

''என்ன வண்டி?'' என்று கேட்டார் பண்ணையார்.

அம்மாசி மீண்டும் வெளியே ஓடிப்போய்விட்டு வந்து சொன்னான்; ''நெல்லு வண்டி...''

''எங்கே போகிறது?''

மறுபடியும் அம்மாசி வெளியே ஓடினான். விசாரித்து வந்து, ''முல்லையூருக்குப் போகிறது'' என்றான்.

''சந்தோஷம். எந்த ஊரிலிருந்து போகிறது?'' என்று கேட்டார் பண்ணையார். அம்மாசி அலுத்துக்கொண்டே வெளியே ஓடிப்போய் வந்தான். ''கிளியூரிலிருந்து போகிறது....!'' என்றான்.

''எத்தனை வண்டி போகிறது?'' என்று கேட்டார் பண்ணையார். அதற்கு மேல் அம்மாசியால் தாள முடியவில்லை.

''ஐயா தாங்கள் கேட்கவேண்டிய எல்லாக் கேள்விகளையும் ஒரே சமயம் கேட்டுவிடுங்கள்.

நினைத்து நினைத்துக் கேட்கிறீர்கள். ஓடிப்போய் விசாரித்து வருவது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது'' என்று முணுமுணுத்தபடி வெளியே சென்றான் அம்மாசி திரும்பி வந்து, ''நாற்பது வண்டி போகிறது'' என்றான்.

பண்ணையார் புன்னகைத்தார். செங்கோடன் அப்பொழுது உள்ளே வந்தான். அவனைப் பார்த்து, ''ஏதோ சப்தம் கேட்கிறதே, அது என்னவென்று பார்த்து வா'' என்று சொன்னார்.

செங்கோடன் வெளியே ஓடினான். சற்று நேரத்தில் திரும்பி வந்தான். பண்ணையாரைப் பணிந்து விட்டுச் சொன்னான்.

''ஐயா, அது வண்டி போகும் சப்தம். கிளியூரிலிருந்து முல்லையூருக்கு நாற்பது நெல்லு வண்டி போகிறது. நம்முடைய வீட்டைத் தாண்டி ஏற்கெனவே பத்து வண்டி போய்விட்டது. இன்னும் முப்பது வண்டி போகவேண்டும்''

பண்ணையார் அம்மாசியை அருகழைத்து, ''அம்மாசி இப்பொழுது தெரிந்து கொண்டாயா, உன்னைவிட செங்கோடனிடம் நான் அதிக அன்பு காட்டும் காரணத்தை.

''உன்னிடம் கேட்ட அதே கேள்வியைத்தான் நான் செங்கோடனிடமும் கேட்டேன். நீ ஒவ்வொரு தடவையும் வெளியே போய் விசாரித்துவிட்டுவந்தாய்.

''செங்கோடனோ ஒரே சமயத்தில் எல்லா விவரமும் சேகரித்து வந்தான். ஒருவரிடம் நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ அப்படித்தான் இருக்கும், அவர் நம்மீது கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும், அவர் காட்டுகின்ற அன்பும்!'' என்று இதமாக எடுத்துச் சொன்னார்.

அன்று முதல் அம்மாசி, செங்கோடனிடம் வெறுப்புக் காட்டுவதை விட்டுவிட்டு, தானும் அவனைப் போலவே கெட்டிக்காரனாக வேலை செய்ய முற்பட்டான்.

**மு. முத்துக்காளத்தி**

---

# பொறுமை

கடலினும் பெரியது பொறுமை—அதைக்
காத்திடல் மக்களின் கடமை!
திடமுடன் இருப்பது அருமை—அது
தினசரி கொடுப்பது பெருமை!

பணிவுடன் அன்பினைச் சேர்க்கும்—துன்பப்
படுத்திடும் நிலையினைத் தீர்க்கும்!
குணமெனும் குன்றினில் நிறுத்தும்—ஒளி
கொடுத்திடும் தீபத்தைப் பொருத்தும்!

மனமென்னும் குரங்கினை அடக்கும்—என்றும்
மாண்புறு வாழ்வினைக் கொடுக்கும்!
சினமென்னும் பேயினைத் தடுக்கும்—எழும்
சீற்றத்தில் பகையினை ஒடுக்கும்!

அமைதியை உள்ளத்தில் ஊட்டும்—என்றும்
அன்பில்லா நெஞ்சினைப் பூட்டும்!
நமக்குமே நல்வழி காட்டும்—பிற
நாட்டிலும் நற்புகழ் நாட்டும்!

—தஞ்சை மணவழகன்



சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற மற்ற மாவட்டங்களில் இருந்து மட்டுமேயல்லாமல் ஆந்திரம், கேரளம், மேற்கு வங்கம், மகாராட்டிரம் போன்ற பிற மாநிலங்களிலிருந்தும் இங்கே வியாபாரிகள் வந்து போகிறார்கள்.

சர்க்கரையில் ஈ மொய்க்கும்; நமக்குத் தெரியும்; ஆனால் இங்கோ ஏற்றவும், இறக்கவும் வரும் நூற்றுக்கணக்கான லாரிகள் மொய்க்கின்றன. மட்டச் சர்க்கரை, சுண்ணாம்புச் சர்க்கரை, பௌடர் சர்க்கரை என மூன்றாகத் தரம் பிரித்து ஏலம் விடப்படும் சர்க்கரை அந்த லாரிகள் மூலமும், ரயில்கள் மூலமும் வெளியிடங்களுக்குப் பயணம் போகின்றது.

# சர்க்கரைச் சந்தை



கறிகாய் மார்க்கெட் பார்த்திருக்கலாம். மீன் மார்க்கெட் பார்த்திருக்கலாம். நாட்டுச் சர்க்கரை மார்க்கெட் பார்த்ததுண்டோ? பார்க்காதவர்கள் பெரியார் மாவட்டம் சித்தோடு சென்றால் பார்க்கலாம்.



நெல்லை ஒருபோகம்தான் பயிர் செய்யலாம்; கரும்புக்கு இரண்டுபோகம். ஆகவே, இந்தப் பகுதியிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் கரும்பையே விரும்பிப் பயிரிடுகிறார்கள். அவர்களே சாறெடுத்துக் காய்ச்சி சர்க்கரையும் தயாரிக்கிறார்கள். கரும்பைச் சர்க்கரை ஆலைகளுக்கு விநியோகிக்கலாம் என்றாலும், அதைவிடத் தாமே காய்ச்சி விற்பதில் தான் லாபமிருக்கிறது என்கிறார்கள் அவர்கள்.

அப்படி அவர்கள் தயாரிக்கும் நாட்டுச் சர்க்கரைதான் ஞாயிறு தோறும் கூடும் சித்தோடு நாட்டுச் சர்க்கரைச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகிறது. அப்படி கொண்டுவரும் சர்க்கரையைக் கமிஷன் வியாபாரிகள் வாங்கி ஏலம் விடுவார்கள். வாங்கி வெளியில் விற்போர் ஏலமெடுப்பார்கள்.

தை, மாசி, பங்குனி, சித்திரை வைகாசியில் தான் சர்க்கரைத் தயாரிப்பு அதிகமிருக்குமாம்.

''கரும்பைச் சீனியாக்குவதில் லாபமா? சர்க்கரையாக்குவதில் லாபமா? '' என்ற நம் கேள்விக்குப் பதிலளித்த அந்தச் சந்தைத் தலைவர் திரு என்.சி.ரங்கசாமி ''ஒரு டன் கரும்பில் ஒரு மூட்டை சீனி தயாரிக்கலாம்; ஆனால் நாட்டுச் சர்க்கரையோ இரண்டு மூட்டை தயாரிக்கமுடியும்'' என்றார்.

திருகே.சரவணாபெரியசாமி செயலாளராகவும், திருகே. கிருஷ்ணன் உதவிச் செயலாளராகவும் இருந்து நிர்வகிக்கும் இந்த் நாட்டுச் சர்க்கரை மார்க்கெட் சுமார் 6 ஏக்கர் பரப்பளவில்அமைந்திருக்கிறது. இதற்கு அருகிலேயே இன்னொரு சிறு சர்க்கரைச் சந்தையும் இருக்கிறது.

கமிஷன் வியாபாரிகளுக்கு, வாங்குவோருக்கு, விற்போருக்கு, ஏற்றுமதி செய்வோருக்கென இங்கே தனித்தனிச் சங்கங்கள் இருக்கின்றன. —பி. எல். ஆர்.



# பவானி பாசனப் பகுதி மேம்பாடு

கீழ்பவானி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழக அரசால் இந்திய அரசின் உதவியுடன் செயல்படும் மூன்று பாசன திட்டங்களில் ஒன்றாகும். பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகளின் மூலம் அளவான நீரை உபயோகித்து முழுப்பரப்புக்கும் பாசனமளித்து அதிக உற்பத்தி காணுதல் இத்திட்டத்தின் நோக்கம்.

பெரியார் மாவட்டத்தில் சிறப்புறச் செயல்பட்டு வரும் இந்தப் பாசன மேம்பாட்டுப் பணிகள் தனிப்பட்ட பணிகளான நிலம் சமன் செய்தல், நிலம் சீர்படுத்துதல், களர் மற்றும் உவர்ப்பு நிலங்களைச் சீர்திருத்துதல், சமுதாய வேலைகளான பாசன வாய்க்கால் மற்றும் வடிகால்கள் அமைத்தல் என இரு வகையினதாகும்.

அதிகமாகக் கசியும் பாசன நீரைத் தடுப்பது; நிலத்திலிருந்து நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும் பழமையான முறைகளைத் தவிர்ப்பது; வாராபந்தி முறையைப் பயன்படுத்தி, போதிய அளவு பாசன நீரை, உரிய நேரத்தில் தவறாது விவசாயிகளுக்குக் கொடுப்பது ஆகியவைகளே கீழ்பவானி பாசன மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

நிலத்திலிருந்து நிலத்திற்குத் தண்ணீர் தேக்கிப் பாய்ச்சி அதிகமான நீர் செலவாகிறது. மேலும் கசிவினாலும் நீர் சேதமாகிறது. பாசன முறையில் கட்டுப்பாடு இல்லை. இதனால் மிகக் குறைவான பாசனத் திறமை ஏற்பட்டு அதன் விளைவாகப் பயன் குறைகிறது.

இந்தக் குறைபாடுகளைப் போக்க பாசன மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியே பாசன வாய்க்கால் அமைக்கப்படுகிறது. பாசன நீரைத்திறமையாகப் பயன்படுத்த நிலம் சமன் செய்வது அவசியம்தேவைப்படுவதால், அது இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. பாசன நீரைத் திறமையாகச் செயல்படுத்த ஆங்காங்கே கட்டுமானத் தொட்டிகள் கட்டப்படுகின்றன.

விவசாயிகளுக்கு இதற்கென நீர் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. பாசன நீரை முறையாகப் பயன்படுத்தும் வாராபந்தி முறை செயல்பட இப்போது ஒரு உட்கோட்டம் துவங்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் 1982-ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து செயல்படத் துவங்கியது. இத் திட்டத்தைச் செயல்படுத்த ஒரு மேற்பார்வைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) மற்றும் ஒரு செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தலைமையிலும் ஐந்து உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்கள்) மற்றும் அதற்குண்டான பணியாளர்களுக்கும் அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மொத்த பாசனப் பரப்பு 2,07,000 ஏக்கர்களாகும்.

1983-84-ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு 12,500 ஏக்கர் பரப்பில் ரூபாய் 62 இலட்சம் செலவில் பாசன மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செய்யப்பட்டன. இப்பரப்பளவு 52 கிராமங்களிலுள்ள 264 மதகுகளின்கீழ் பாசனம் பெறுவதாகும். இத் திட்டத்தில் மொத்தமாகச் சுமார் 120 கிலோமீட்டர் நீளமுள்ள காரைவாய்க்கால் (Lined Channel) அமைக்கப்பட்டுள்ளது. சீராக நீர் பங்கீடு செய்ய ஒழுங்குமுறைகட்டுமானத் தொட்டிகள் ஆயிரக்கணக்கில் கட்டப்பட்டுள்ளன. விரைவில் இங்கே வாராபந்தி முறை புகுத்தப்படவுள்ளது.

1983-84ஆம் ஆண்டில் சுமார் 400 மதகுகளின் கீழ் வரும் 19,000 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் ஒரு கோடிக்கும் மேலான செலவில் திட்டம் தொடர முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டச் செலவுக்கு மத்திய அரசு-பணிக் குழுவிற்குண்டான செலவின மான்யம் 50 சதவிகிதமும் நில அளவுகள் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு 50 சதவிகித மான்யமும், வாராபந்தி முறையை அமல்படுத்த 50 சதவிகித மான்யமும் பாசன காரைவாய்க்கால்கள் அமைக்கச் செலவினமாக மான்யம் 25 சதவிகிதமும், 25 சதவிகிதக் கடனும் உதவியுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விவசாயிகளிடமிருந்து கடன் தொகை ஐந்தாண்டுகளில் சம தவணையாக வசூலிக்கப்படும். அளவான நீர் உபயோகித்து முழுப் பரப்பும் பாய்ச்சுதல்; பாசன நீர்ச் சேதத்தைத் தடுத்தல்; விவசாயிகளுக்கு உயர்ந்த வருமானம்; உற்பத்தியை அதிகப்படுத்துதல் போன்ற நன்மைகள் பெரியார் மாவட்ட மக்களுக்கு இந்தக் கீழ்பவானி பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டத்தால் கிட்டவிருக்கிறது.





# ஆதிதிராவிடர் நலன்

**பெ**ரியார் மாவட்டத்திலிருக்கின்ற மொத்த மக்கட் தொகையில், ஆதிதிராவிடர் எண்ணிக்கை மட்டும் 3,49,498. மலைவாழ் மக்கள் எண்ணிக்கையோ 15,492.

இவ்வகை மாணவர்களுக்கென 11 விடுதிகளும், மாணவியர்க்கென 7 விடுதிகளும், மலைவாழ் மக்களுக்கான உறைவிடப் பள்ளிகள் 6ம், அரசு நலப்பள்ளிகள் 4ம், சமுதாயக் கூடம் ஒன்றும் இங்குள்ளன. இவற்றால் மொத்தம் 1704 மாணவ மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 171 பள்ளிகள் கல்வி உதவித்தொகை பெற்று வருகின்றன.

பெரியார் மாவட்டம்வாழ் ஆதிதிராவிடப் பெருமக்களின் குழந்தைகளும், மலைவாழ் மக்களின் குழந்தைகளும் கல்வி வளம் பெற்றிடவும்-பலவகைத்தொழில் பயிற்சி பெற்றிடவும் என மத்திய அரசும், மாநில அரசும் பெருந்தொகை செலவிட்டு வருகின்றன.

பள்ளி மற்றும் விடுதி மாணவ மாணவியர் 1905 பேர்களுக்கு சீருடை வழங்க மட்டுமே 1983-84ல் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் வாழ் பகுதிக்கெனக் குடிநீர்க் கிணறு, விடுதிப் பராமரிப்பு போன்ற 113 பணிகளுக்கென சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 56 பேர்களுக்கு இந்த ஆண்டில் சிறு தொழிற் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறுதொழிற்கடன் 28 பேர்களுக்கு ரூ. 23,500 வழங்கப்பட்டுள்ளது. உழவு மாடுகளுக்கென நான்கு பேர்களுக்கு மானியமாக ரூ. 2,400 வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், இம்மாவட்டத்தில் கலப்பு மணம் செய்து கொண்ட 7 தம்பதியருக்கு அஞ்சலகச் சேமிப்புப் பத்திரங்கள் மூலமும், ரொக்கமாகவும் ரூ. 30,100 அளித்திருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்பிற்கெனச் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெப்பலை கிராமம் முதல் பரிசாக ஆயிரம் ரூபாயும், துக்கநாயக்கன் பாளைய ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏரங்காட்டூர் கிராமம் இரண்டாவது பரிசாக ஐந்நூறு ரூபாயும் பெற்றுள்ளன.

தூய்மையாகப் பாதுகாக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளாக 7 தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

'அரிசனங்கள்' என்றாலே கடவுளின் குழந்தைகள் எனப் பொருள் என்றார் காந்தியடிகள்; அவர் சொல்லுக்கு மதிப்பளித்திடும் வகையில் பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் பணிகள் மேலோங்கி நிற்கின்றன.

## காய்கறிச் சங்கம்

**பெ**ரியார் மாவட்டத்தில், மற்றபல தொழில்களுக்கு உள்ளதுபோலக் காய்கறி உற்பத்தி மற்றும் விற்பனைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன.

இதோ உதாரணத்திற்கு ஒன்று—

தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில் காய்கறி மற்றும் பழ உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நடவடிக்கைகள் சிறப்பாக அமைந்துள்ளன; இதன் துணைத் தலைவர் திரு டி.ஏ. வீரராகவன், ''சங்கம் 2.12.83 ல் வியாபாரத்தைத் தொடங்கியது'' என்று ஆரம்பித்து இக் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் பற்றி நமக்கு விளக்கினார்.

செல்வி ஆர். சசிகலா என்ற எழுத்தரும், சையத் நூரு, பரமண்ணா என்ற இரு சிப்பந்திகளும் பணியாற்றும் இந்த விற்பனை நிலையத்தில் இருந்து ஈரோடு சிந்தாமணிக்கே கூட காய்கறி அனுப்பப்படுகிறது.

தங்களுக்காகவே காய்கறி உற்பத்தி செய்து வந்த இந்தப் பகுதி மக்கள் இப்போது கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் விற்றுப் பணம் பண்ணுவதற்காக என்று அதிக அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

190 பேர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தச் சங்கத்தில் எப்போதும் தாய்மார்கள், கையில் பையோடு காய்கறி வாங்க மொய்க்கிறார்கள்



# தோட்டக் கலை



**பெ**ரியார் மாவட்டத்தில், தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ஏற்றமுற்றிருக்கிறது. இதற்கென, இந்த மாவட்டத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது அரசால்.

தாளவாடி, கூடலூர், பர்கூர் போன்ற பகுதிகளில் தோட்டக் கலையின் வளந்தைக் காண முடிகிறது. எலுமிச்சை, பலா மரம், கோவா. காபிச் செடிகள் போன்றவைகளை இட்டரை, பெஜலட்டி, மாவநட்டம், செத்தேசால் போன்ற பகுதிகளில் உள்ள மலைவாசிகள் வாங்கி மிகுந்த ஆர்வத்தோடு பயிரிட்டிருக்கிறார்கள்; பயன்பெற்று வருகிறார்கள்.

ஈரோட்டிலுள்ள வ.உ.சிதம்பரனார் பூங்கா, இந்தத் திட்டத்தின் கீழ்தான் பத்தாயிரம் ரூபாய் செலவில், கடந்த ஆண்டில் வளப்படுத்தப்பட்டது. அதே பணிக்கென இந்த ஆண்டும் பத்தாயிரம் ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்திவருகிறார்கள். பெங்களூரிலுள்ள லால்பாக்கிலிருந்து அதற்சான அழகுத் தாவரங்கள் வரவழைக்கப்படுகின்றன.

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகக் கண்டுபிடிப்பான 'கோ-1' மஞ்சள், தோட்டக் கலைத் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பயிரிடப்பட்டு வருகிறது. சில இடங்களில் 'கோ-1' பிச்சிப் பூ பயிரிடப்பட்டுள்ளது.

மொடக்குறிச்சியில் இத் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்டுள்ள அனுசரணை ஆராய்ச்சித் திடல் விவசாயப் பெருமக்களுக்குப் பெரிதும் உதவிகரமாக உள்ளது.

தோட்டக்கலை அலுவலர் திரு.அப்பாசாமி, உதவி இயக்குநர் திரு வி.கே.ராஜகோபால் இருவராலும் பெரியார் மாவட்டத் தோட்டக்கலைப் பிரிவு சாதனை பல புரிந்துவருகிறது.

---

# பெரியார் மாவட்டப் பெரியோர்!



**ப**த்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில், வீராவேசத்தோடு— வெள்ளையர் மட்டுமல்ல, மைசூர்க்காரர்களும் அந்நியரே என்று போர்க் குரலெழுப்பி மீசை முறுக்கி, கி.பி. 1805ல் தூக்கிலிடப்பட்ட பழைய பட்டக்காரர் தீரன் சின்னமலை பிறந்த ஓடாநிலை என்ற ஊர் பெரியார் மாவட்டத்தில்தான் உள்ளது.

கொடிகாத்த குமரன் என்கிறோமே; அவன் பிறந்தது இம்மாவட்டத்தில் உள்ள சென்னிமலையிலேதான்.

தந்தை பெரியாரும் அவர் துணைவியார் நாகம்மையாரும், சகோதரி கண்ணம்மாளும் மட்டுமேயல்ல; எம்.ஏ., ஈசுவரன், டாக்டர் எல். கே. முத்துசுவாமி, கே. சுப்பண்ணக் கவுண்டர் போன்ற பல விடுதலைப் போராட்ட வீரர்களும் வாழ்ந்து ஈரோட்டிலேதான்.



# தேரழுந்தூரில் தமிழ்த் திருவிழா

கற்றோர் இதயம் களிக்கக் கம்பராமாயணத்தை வழங்கிய கவிநாயகர்-கவிமாமன்னர் கம்பர் பிறந்த தேரழுந்தூர்த் திருநிலத்தில், தமிழக அரசு சார்பில் அறநிலையத்துறை அமைக்கும்கம்பர் கோட்டக் கால்கோள் விழா 1984 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17,18 ஆகிய நாட்களில் சிறப்பாக நடந்தது.

முதல் நாள் நிகழ்ச்சி(17.3.84) சனி காலை 8 மணியளவில் கோகிலகான இசைச் செல்வர்கள் திரு எஸ்.ஆர். ஜி.எஸ். வசந்தகுமார் மோகன்தாஸ் சகோதரர்கள் குழுவினரின் நாயன இசையுடன் விழா ஆரம்பமாயிற்று. அறநிலையத்துறை ஆணையர் திரு கு.ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார்.

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு மு.மு. இஸ்மாயில் தலைமை வகித்தார்.

''கம்பர் கோட்டத்துக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னால் அப்போதைய ஆளுநர் ஸ்ரீபிரகாசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, நின்றுவிட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தூண்டுகோலாக இருக்கும் அமைச்சர் வீரப்பன் அவர்கள் இந்தக் கம்பர் கோட்டத்தைத் தொடங்கி முடிக்க முனைந்துள்ளார். ஆண்டுதோறும் இந்த விழா நடக்கும் என்றும் கூறியுள்ளார். இது தமிழர்கள் மறக்க முடியாத விழா'' என்று கூறினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.சத்பதி, இ.ஆ.ப. வாழ்த்துரை வழங்கினார்.

திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் திரு சுந்தரமூர்த்திதம்பிரான் ஆசியுரை வழங்கிப் பேசினார்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுக்கும், பெருமைமிகு எம்பார் விஜயராக வாச்சாரியருக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்த மாண்புமிகுசெய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்,

''கமபன பிறந்த நாட்டிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தமிழைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற பெரியோர்களை இலக்கியச் சான்றோர்களைத் தினமும் நினைவூட்டிக் கொண்டிருக்கிறவர்களை, தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சார்பில் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

ஏற்புரை சொன்னார் எம்பார்,

திருமுருக கிருபானந்தவாரியார் பேசுகையில், ''தமிழுக்குக் கதி இருவர் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். கம்பரும் திருவள்ளுவரும்! வள்ளுவருக்குக் கோட்டம் அமைந்துவிட்டது. கம்பருக்குச் செய்யவில்லை. யாரப்பா செய்வார்? வீரப்பன் செய்வார். ஆர். எம் வீரப்பன்! உள்ளத்தால் உயர்ந்தவர்'' என்றார்.

கம்பர் காட்சி-உரையரங்கம் பேராசிரியர் திரு அ.ச. ஞானசம்பந்தன் தலைமையில் ஆரம்பமாயிற்று. ''தமிழ்ச் சாதியில் புரையோடியிருக்கிற குறையை எடுத்துக் காட்டினார் வள்ளுவர். புலனடக்கம் இல்லாததனால் களப்பிரருக்கு அடிமைப்பட்டது தமிழ் இனம். புலனடக்கத்துக்கு அழுத்தந்தர நினைத்தவன் கம்பன் என்றார்.

திரு சிதம்பரம் சுவாமிநாதன், அழியா அழகனையும், திரு சுகி சிவன் அருங்குணச் சீதையையும், திரு அ.வெ. இராசகோபாலன் இளைய நம்பியையும், பேராசிரியர் சொ.சத்தியசீலன் இலங்கை வேந்தனையும் படம் பிடித்துக் காட்டினர்.

பிற்பகல் பேராளர் பேரவையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தலைவர் திரு.க.பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ,

தேரழுந்தூர்ப் புலவர் திரு. ஆ.இராமபத்திரன்,

திரு குத்தாலம் இரெ. இராசமாணிக்கம், எம்.எல்.ஏ,

தருமை ஆதீனம் திருக்கயிலாயப் பரம்பரை திருப்பெருந்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புலவர் கீரன் ஆகியோர் பேசினர்.

''இலங்கைத தம்பியருள் ஏற்றமுடையவன் வீடணன்'' என்ற பொருள்பற்றி வழக்காடுமன்றம் நடந்தது. பேராசிரியர் திரு பா. நமச்சிவாயம் நடுவர். பேராசிரியர் திரு இரா. செல்வ கணபதி வழக்காடினார். புலவர் திரு கோ. சாரங்கபாணி எதிர்வழக்காடினார். 'வீடணன் ஏற்றமுடையவன்' என்று நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

இரவு, திரு நரசிம்மாச்சாரியார் திருமதி வசந்தலட்சுமி குழுவினரின் கம்பராமாயண நாட்டிய நாடகமும், கலைமாமணி முத்துக் கூத்தன் குழுவினரின் பொம்மலாட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றன.

இனிமைத் தமிழுக்கு எழில் சேர்க்கின்ற வகையில் இரண்டாம் நாள் நிகழ்ச்சி (18.3.1984) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில், தமிழக அரசவை இளங்கலைஞர்கள், திருப்பாம்புரம் திரு.டி.கே.எஸ்.சாமிநாதன் திரு.டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம் சகோதரர்கள் குழுவினர் நாயன இசையுடன் ஆரம்பமாயிற்று.

''இவர்கள் பேசினால்'' கவியரங்கத்தை, திருமதி சௌந்தரா கைலாசம் தொடங்கி வைத்தார்.

கவிமாமணி திரு நா.சீ. வரதராசன், முன்னிலை வகித்த தார்.

தலைமை தாங்கிய கலைமாமணி திரு புத்தனேரி ரா.சுப்பிரமணியம், ''புரட்சித்தலைவர் அவர்கள் முன்னிற்கும் இக்காலம் முத்தமிழின் பொற்காலம். அன்று தசரத ராமச்சந்திரன், இன்று சத்துணவு ராமச்சந்திரன்'' என்றார்.

கவிஞர் மரியதாஸ் கும்பகர்ணனாகப் பாடினார்.

கவிஞர் புதுவயல் செல்லப்பன் அனுமனாக வந்தார்.

கவிஞர் பழநி - இளங்கம்பன் இலக்குவனாக அரங்கேறினார்.

கவிஞர் திருமதி அரசு-மணிமேகலை இராமராகப் பாடினார்.

கவிஞர் இ. முத்துராமலிங்கம் சீதையைப் பாடினார்.

கவிஞர் தமிழவேள் தசரதனாகவும், கவிஞர் சொ.சொ. மீ சுந்தரம் இராவணனாகவும், கவிஞர் ம. வே. பசுபதி பரதனாகவும் அரங்கேறி அருங்கவிதைகள் தந்தனர்.

மாலையில் பேராளர் பேரவையில் திரு இரா. கிருபாகரன், இ.ஆ.ப. பங்குபெற்றார்.

திரு ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. பேசுகையில், கம்பர் கவிநயத்தைக் கேட்பவர்கள் முன்கொண்டுவந்து நிறுத்தினார்.

திரு எஸ். டி. காசிராஜன் இ.ஆ.ப.பேசுகையில், ''கவிச்சக்கர

வர்த்தி கம்பனை, இன்னொரு கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் அன்றைக்கே புகழ்ந்து பாராட்டிவிட்டார்"என்றார்.

அடுத்து, கலை தெரி மன்றம். கம்பர் பெரும் புகழுக்குக் காரணம் கற்பனை வளமா? கதையின் நலமா? என்பது பொருள்.



திருக்கோயில் ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள் தொடங்கி வைத்தார். டாக்டர் ஔவை நடராசன் நடுவராக இருந்தார்.

'கற்பனை வளமே' என்ற அணியில் டாக்டர் சரசுவதி ராமநாதன், திரு த. இராமலிங்கம், டாக்டர் சு. பாலச்சந்திரன் ஆகியோரும்,

'கதையின் நலமே' என்றஅணியில் திருமதி இளம்பிறை மணிமாறன், புலவர் அறிவொளி, செல்வி சுதா சேஷய்யன் ஆகியோரும் வாதிட்டனர். 'கற்பனை வளமே' என்று தீர்ப்புச் சொன்னார் நடுவர்.

இரண்டுநாள் விழாவின் இறுதிக் கட்டமாகக் கம்பர் கோட்டக் கால்கோள் விழா நிகழ்ச்சி இடம் பெற்றது. வணிகவரி-அறநிலையத்துறைச் செயலர் திரு ஆர். சண்முகசிகாமணி, இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவைத்தொடங்கி வைத்து சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு மு.மு. இஸ்மாயில் அவர்கள் பேசினார்.

தஞ்சைக் கலைக்கூடம் வெளியிட்ட ''தெய்வத் திருமேனிகள்'' என்ற நூலை, தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப.அவர்கள் வெளியிட்டார்.

''எனக்கு, இந்த விழாவில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி. இது உதட்டிலிருந்து வருவதல்ல. உள்ளத்திலிருந்து வருவது. நான் இந்த வட்டாரத்தைச் சேர்ந்தவன். தேரழுந்தூரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவன்" என்றார்.

திரு குத்தாலம் இரா. இராசமாணிக்கம், எம்.எல்.ஏ. திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''உலகம் புகழும் இலக்கியத்தை வழங்கி, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் தலை நிமிர்ந்து நிற்கிற இனம் தமிழினம். அதனால்தான் இன்று இந்த விழா எடுக்கிறோம்.

''கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு பூபாகத்தில் வாழும் தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கம்பர் காப்பியத்தின் நாயகன் அன்றைக்கு அயோத்திராமன். இன்றைக்குக் கம்பர் கோட்ட நாயகன்–எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன்!

''புலவர் வரிசையிலே மூத்த புலவனாக விளங்கும் கம்பனுக்கு போட்ட அடிக்கல் அடிக்கல்லாகவே நிற்கிறது. யார் யார் காலத்தில் எது எது நடக்க வேண்டுமோ அதுஅது நடக்கிறது.

''கம்பரை மறந்துவிட்டுத் தமிழைக் காப்பாற்ற முடியாது. தாய்-தந்தையரை வணங்காமல் ஊரைக் காப்பாற்ற முடியாது.

''கம்பனைப் பாராட்ட அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறோம். இது பேரறிஞர் அண்ணா கற்றுத் தந்த வழி. அண்ணாவின் அறவழி சான்றோர்களைப் போற்றுவதாகும்.

''கம்பருக்குச் சென்னையில் கோட்டம் எழுப்பப்படும் என்று 1978 நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டார்கள் என்றார்கள். முதலில், பிறந்த மண்ணில்; பிறகு சென்னையில்!

''ஆலயங்களிலிருந்து இந்தக் கம்பர் கோட்டத்துக்கு 12 இலட்சம் ரூபாய் செலவிட இருக்கிறோம். தமிழ் இல்லாமல் ஆன்மீகம் இல்லை. ஆன்மீகம் இல்லாமல் தமிழ் இல்லை ''என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சுற்றுலாத் துறை சார்பில் தேரழுந்தூர் மக்களுக்கு நூலகத்துக்கான மேசை, நாற்காலி, நூல்கள் ஆகியவற்றை வழங்கியும், கல்வெட்டைத் திறந்து வைத்தும் பேருரையாற்றினார்.


''திடீர் மழைக்குப் பிறகு கவி மழை, தமிழ்மழை பெய்திருக்கிறது. இங்குள்ள மரம் மட்டைகளும்கூடக் கவிபாடும். கவின் கம்பர் கோட்டம் எனும் போதினிலே இன்பத் தேன் வந்துபாயுது காதினிலே. விழவு மலிமூதூர், கலைமலி மூதூர் என்று தமிழ் இலக்கியத்தில் சொல்வார்கள்.

''வாழ்க்கை, நெறிகாட்ட வந்த புலவர் வள்ளுவர். காப்பியத் தலைவர்களுக்கெல்லாம் வழிகாட்டிய பெருமை கம்பருக்கு உண்டு.


''வெள்ளத்தின் பெருக்கைப் போல் கவிப்பெருக்கும் கலைப் பெருக்கும்மேவுமாயின் வாழ்க்கை பெரும்பயன் பெற்றுத் திகழும். கம்பர் பெயரையும் புகழையும் அவர் ஏற்றம் பெற்ற வரலாற்றையும் ஆன்றோரும் சான்றோரும் அழகுபட எடுத்துக்கூறியிருக்கிறார்கள்." என்றார்.

அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப. நன்றி நவின்றார். குடந்தைச் சோழன் போக்குவரத்துக் குழுவினரின் மெல்லிசையுடன் விழா இனிது முடிந்தது.

—முத்துக்காளத்தி



கம்பன் கோட்டம் - மாதிரி வடிவம்



## இப்படி ஒரு கோயில்

பெரியார் மாவட்டம் தாளவாடியிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் மல்லிகார்ஜுனப்பா கோயிலுக்குப் பெரும்பாலும் கர்னாடக வாசிகளே சாமி கும்பிட வருகிறார்கள். ஆனால் இங்கே பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை; கோயிலுக்கு ஒரு பர்லாங்கிற்கு முன்பாகவே அவர்கள் நிறுத்தப்பட்டுவிடுகிறார்கள்!



# '1985-ல் இளம்பிள்ளை வாதமில்லாத சென்னை'

"அனைவரும் ஒன்றுபட்டால் முடியாதது எதுவுமில்லை. '1985ல் இளம்பிள்ளை வாதமில்லாதசென்னை'யை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இதை ஒரு புனிதமான அறப்போராக, நோயை எதிர்க்கும் பெரிய இயக்கமாக உருவாக்க நாம் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

30.4.84 அன்று சென்னை கே.கே.நகரில் உள்ள அரசினர் மறுவாழ்வுக்கான மருத்துவ நிலையத்தில் இம்பாக்ட் இந்தியா அமைப்பின் சார்பில் நடந்த '1985ல் இளம்பிள்ளைவாதமில்லாதசென்னை'தொடக்கவிழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

'இம்பாக்ட் இந்தியா' அமைப்பின் இயக்குநர் டாக்டர் ஐ.எஸ். சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''ஐ.நா.வளர்ச்சித் திட்டம் உலகச் சுகாதார நிறுவனம், மத்திய சுகாதாரம்மற்றும் நல்வாழ்வுத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்பால் இந்த அமைப்பு செயல்பட்டுவருகிறது. இந்தியாவில் ஒரு கோடியே 50 இலட்சம் குழந்தைகள், குணப்படுத்தக்கூடிய இளம் பிள்ளைவாத நோயினால் அவதிப்பட்டு வருகின்றனர்.

''சென்னையில் எம்.ஜி.ஆர். நகரில் 3 ஆயிரத்து 868 குடும்பங்கள் இருக்கின்றன. இங்குள்ள 1,499 குழந்தைகளுக்குப்போலியோ தடுப்பு மருந்து அளிக்கப்படவில்லை. 59 குழந்தைகள் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளை நோயிலிருந்து பாதுகாக்க இந்த அமைப்பு, மே மாதம் முதல் ஒவ்வொரு பகுதியாக நேரில் சென்று போலியோ மருந்துகளை அளிக்கும்''.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இது ஒரு நல்ல திட்டம். இதனை விரிவுபடுத்தி தமிழ்நாடு முழுக்க அறிமுகப்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் இந்தத் தொடக்க விழா நடைபெறுகின்றது.

''இளம்பிள்ளைவாதத் தடுப்பு போல, கண் பார்வை இழந்தவர்களுக்கும் நாம் உடனடியாகத் திட்டம் தீட்ட வேண்டும். ஆண்டுதோறும் ஒரு இலட்சம் பேர் கண்புரை நோயினாலும், சத்துக்குறைவினாலும் கண்பார்வை இழக்கிறார்கள். அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

''விபத்துக்கான அவசரக் கால உதவியும், காவல்துறைஒத்துழைப்புடன் செயல்படுகிறது. ஸ்கூட்டர் விபத்துக்களையும் நாம் தவிர்க்கவேண்டும். ஸ்கூட்டர் ஓட்டிகள் கண்டிப்பாகத் தலைக்கவசம் அணிவதை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு தீவிரமாக யோசித்து வருகிறது.''

விழாவில், மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு ஆர்.சண்முகம் இ.ஆ.ப., மருத்துவக்கல்வித்துறை இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன், வோல்டாஸ் நிறுவன இயக்குநர் திரு ஏ. எச். டுபாகோவாலா ஆகியோர் பேசினர். இம்பாக்ட் இந்தியாவின் மண்டல ஆலோசகர் திருமதி ஜெல்மா லாசரஸ், போலியோ தடுப்பு மருந்தை அன்பளிப்பாக வழங்கினார்.

விழாத் தொடக்கத்தில், ஊனமுற்ற குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடி அமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் மாலைகள் அணிவித்தனர். இறுதியில் திரு டி. ஏ. கந்தசாமிப்பிள்ளை நன்றி நவின்றார்.

—பி. வி. கிரி.

# நலிந்தோர்க்கு உதவி



சமுதாயத்தில் நலிந்தோர்கள் சிறு தொழில்கள் துவக்குவதற்கு சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா கடன் உதவி வழங்கும் விழா 2-4-84 அன்று பீட்டர்ஸ் சாலையில் உள்ள ஆதர்ஷ் வித்யாலயா மேனிலைப்பள்ளிக்கலையரங்கில் நடைபெற்றது.

நிதிநிறுவனங்கள் துறைச் செயலர் திரு வெ. சுந்தரம் இ.ஆ.ப. வரவேற்புரையாற்றுகையில், ''வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கட்குத் தக்க நேரத்தில் உதவி செய்து வருகிறோம்'' என்றார்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை உரையாற்றுகையில், ''கடந்த ஆறு மாதகாலமாக நடவடிக்கை எடுத்து இன்று முதல் கட்டமாக, 1,061 பேருக்கு உதவித்தொகை கடனாக வழங்கப்படுகின்றது. மற்ற வங்கிகளும்கடன் உதவிகள் வழங்க உள்ளன. ஏழைகளின் முகத்தில் சிரிப்பு வரவேண்டும் என்பதே எங்களது இலட்சியமாகும்'' என்றார்.

அரசு மேலவைக் கொறடா திரு ஜேப்பியார், எம்.எல்.சி., திரு ப. அங்கமுத்து எம். எல். சி. திரு என். வெங்கடேசுவரன் (தலைமை மேலாளர் சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா வட்டார அலுவலகம், சென்னை) திரு மல்லையா (தலைமை மேலாளர் சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா பிராந்திய அலுவலகம் சென்னை) ஆகியோர் உரையாற்றினர்.



ஏழை, எளிய மக்களுக்குக் கடன் உதவித் தொகைகளை வழங்கி, தொடக்கவுரையாற்றிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''வாங்கிய கடன்களை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும், வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன். 48 வங்கிகள் மூலம் தமிழக மக்களுக்குக் கடன் உதவி செய்யப்படுகின்றது. 234 தொகுதிகளிலும் இதுபோன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

"இட்லிக்கடை, பூ வியாபாரம், காய்கறிக்கடை, மீன் விற்பனை, தையற்கடைமுதலியதொழில்கள் செய்வதற்கு ரூ. 200 முதல் 1,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

''ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை வசதி உள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்று கருதி, அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்து செயலாற்றி வருகின்றது.

''மக்களை வாழ வைக்க அரசும் வங்கிகளும் உதவிபுரிவது பாராட்டத்தக்க செயல் ஆகும்''



**அ. ம. விநாயகம்**



''79க்கு முன் 79க்குப் பின் என்று வரலாற்றைப் பிரித்துக் காட்டினார் திரு காசிராஜன். பெண்கள் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடைபெறுகிறதே, ஆண்களை விடக் கடினமான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

''நெருக்கடி ஏற்படும்பொழுது பூனை கூட புலியாக மாறும். இங்கே வந்து பார்த்த பிறகு உங்கள் குறைகளை நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது. கட்டடம் வெடித்துக் கொண்டிருக்கிறது. மாணாக்கியர் படிக்கிற கல்லூரியாகத் தெரியவில்லை. இங்கே தியாக உணர்வோடு வேள்வி நடத்திக் கொண்டிருக்கிற ஆசிரியைகளையும் மாணாக்கியர்களையும் கண்ணிலே எடுத்து ஒற்றிக் கொள்ள வேண்டும்.

"இந்தக்கல்லூரி முதல்தரமான வசதிகளுடன் கூடிய கல்லூரியாக மாறியாக வேண்டும். இந்தக் கல்லூரிக்காக உழைத்துச் சம்பாதித்த பணத்தைக் கொடுத்துள்ள செல்லம்மாளை நீங்கள் தினமும் வணங்க வேண்டும். சட்ட விதிகள் ஏற்படுத்தி, ஆலயங்கள் சார்பில் சென்னையில் இந்தக் கல்லூரியைத் தத்து எடுத்துக் கொள்ளத் தந்தால் ஏற்றுக் கொள்வோம்.

''தமிழ்நாட்டுக் கல்வித்துறையில் தமிழ்ச் சகோதரிகள் சிறப்பிடம் பெற்றிருக்கிறார்கள். இதனை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களே பல தடவை குறிப்பிட்டு ஆண்களை எச்சரித்திருக்கிறார்கள். இந்தக் கல்லூரி மாணவிகள் இங்குள்ள சிரமங்களைத் தாங்கிக் கொண்டு படிப்பில் சிறந்து விளங்குவதைப் பாராட்டுகிறேன்''.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேச்சு மாணவிகள் - ஆசிரியைகள் இடையே மகத்தான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

# வசதிக் குறைவிலும் வளமான கல்வி

பச்சையப்பன் அறநிலையத்தைச் சேர்ந்த செல்லம்மாள் மகளிர் கல்லூரியின் பேரவைகளின் நிறைவு விழா, விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா மற்றும் மரம்நடு விழா 1984 மார்ச் 30ஆம் நாளன்று சென்னை கிண்டியில் சிறப்பாக நடைபெற்றன.

கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி இந்திரா சோமசுந்தரம் அனைவரையும் அழகு தமிழில் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கு, அவர் வாசித்தளித்த வரவேற்புக் கவிதை, இலக்கிய நயம் மிக்கதாகத் திகழ்ந்தது.

போக்குவரத்து ஆணையரும், பச்சையப்பன் அறங்காவலர் குழுத் தலைவருமான திரு எஸ். டி. காசிராசன், இ.ஆ.ப. தலைமை வகித்தார். அப்பொழுது அவர் பேசுகையில், ''1979க்குப் பிறகு இந்தக் கல்லூரியில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அப்பொழுது கேட்டால் கூட சலுகைகள் கிடைக்கவில்லை. இப்பொழுது கேட்பதற்கு முன்னாலேயே அரசு வசதிகள் செய்து கொடுக்கிறது'' என்று கூறினார்.

கல்லூரி வளாகத்தில் மரக் கன்றுகள் நட்டும், விளையாட்டுப் போட்டிகள், பாடங்கள் ஆகியவற்றில் முதன்மையாக வந்தவர்களுக்கும், மாறுவேடப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசளித்து மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றினார்.

''இந்தக் கல்லூரி மாணவிகள் வேலை நிறுத்தம் செய்த காட்சி நினைவில் இருக்கிறது.

—முத்துமீனா

## நொய்யல் ஆறு

பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்துறைக்கருகே ஓடும் நொய்யலாறும், அதன் கரையிலுள்ள கொடுமணல் என்கின்ற சிற்றூரும் பழம் பெருமை உடையவை.

பதிற்றுப்பத்தில், 'கொடுமணல்' என்ற ஊரிலே செய்யப்பட்ட வேலைப்பாடு மிக்க அணிகலன்களை அரசர்கள் புலவர்களுக்கு அன்பளிப்பாகத் தருவார்கள் என்று வருகிறது; அந்த ஊர் இந்த ஊரே!

பழங்கால இலக்கியங்களில் வரும் 'காஞ்சி ஆறு' இந்த நொய்யல் ஆறுதான்! கொங்கு நாட்டில் தோன்றி, கொங்குநாட்டுக்குள்ளேயே ஓடிக் காவிரியிலே கலக்கும் ஆறு இது!



# அண்ணல் அம்பேத்கார்

தமிழ்நாடு அரசின் சார்பில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 94வது பிறந்தநாள் விழா 22.4.84 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு, தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணபாரதி, இ. ஆ. ப. வரவேற்புரையாற்றிப் பேசுகையில்,

''நம்மிடையே ஏற்றத்தாழ்வுகள் இன்னும் இருக்கின்றன. ஏற்றத்தாழ்வுகள் நீங்கினால்தான் முன்னேற முடியும். இருபது அம்சத்திட்டத்தின் ஆதிதிராவிடர் நலம் பற்றிய திட்டத்தில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது'' என்றார்.

திருமதி நிர்மலா சுரேஷ் பேசுகையில், ''அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் இருக்கிற சாதிவேறுபாடுகள் எந்த நியாயத்திற்கும் உட்படாமல் இருக்கிறது'' என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் உரையாற்றுகையில், ''பேரறிஞர் அண்ணா அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை பிராமணர்கள் பாராட்ட வேண்டும். பிராமணர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பாராட்ட வேண்டும் என்றார். அதேபோல இந்த விழா அமைந்துள்ளது. டாக்டர் அம்பேத்கார் பிறந்த காலத்தில் சாதிக் கொடுமைகள் அதிகமாக இருந்து பள்ளிகளில் குழந்தைகள் சேரமுடியாமல் இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அம்பேத்கார் அவர்கள் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றார். அம்பேத்கார் அவர்கள் படித்துப் பட்டம் பெற்றதும் இல்லாமல் தான் படித்த கல்வியைத் தன்னுடைய சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்படுத்தினார்'' என்று கூறினார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதாவது:

''டாக்டர் அம்பேத்கார் இந்தியாவில் மட்டுமல்லாது, அகில உலகச் சரித்திர நாயகனாகத் திகழ்ந்தார். அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைப் பிரிவை உருவாக்கியவர் அவர். அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது அவரைப் பற்றி யாரும் குறை சொல்லவில்லை. அந்த அளவு அவருடைய கருத்துக்கள் இருந்தன. ஆதிதிராவிடர்களுக்குச் சலுகைகள் தேவை இல்லை. உரிமைகள் வேண்டும் .

''அகில உலக முதலாவது வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கார்தான் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் துணிவுடன் பேசினார்.

''பிறப்பினால் ஒருவனை எடை போடமுடியாது. அகில உலகம் போற்றும் வகையில், பல் வே[illegible]றிகள், உணர்வுகள் இரு[illegible]டிய நாட்டில் அரசியல் சட்ட[illegible] இயற்றியது பாராட்டத்த[illegible]து. ஆனால் இன்று இரண்டு பக்க அளவில் மசோதா கொண்டுவருவது கஷ்டமாக உள்ளது.

''உலகில் எந்தப் பகுதியாக இருந்தாலும், கஷ்டப்படும் பகுதி மக்களின் பிரதிநிதியாகக் கருதக்கூடியவராக அம்பேத்கார் திகழ்ந்தார்.''

திரு ஜி.மூர்த்தி எம்.எல்.ஏ., பேசுகையில், 'மற்ற தலைவர்கள் - சமூகத்தினர் இன்று அம்பேத்கார் அவர்களைப் பாராட்டிப் பேசுவதுதான் சிறந்த செயல் ஆகும்' என்றார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு க.பாலசுப்பிரமணியன் எம்.எல்.ஏ., பேசுகையில், ''இந்தியாவின் 4-வது மகான் அம்பேத்கார். அம்பேத்காரின் துணிவு, வீரம், கருத்துக்களை மக்கள் பின்பற்ற வேண்டும்'' என்றார்.

தொலைக்காட்சி இயக்குநர் திரு ஆர்.எஸ். சவுடேகர் பேசுகையில்,'' அம்பேத்கார் அவர்களின் தந்தை இராணுவத்தில் பணியாற்றியவர். பேராசிரியராக அம்பேத்கார் கல்லூரியில் பணியாற்றியவர். மராட்டிய அரசு வெளியிட்டுள்ள வெளியீடுகளைப் போன்று தமிழக அரசும் அம்பேத்கார் பற்றித் தமிழில் வெளியீடுகள் வெளியிட வேண்டும். அரசு விடுமுறையும் விடவேண்டும்'' என்றார்.

முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து சிறப்புரை ஆற்றுகையில், ''மனிதாபிமானத்தோடு வாழ்ந்தவர் அம்பேத்கார். அவர் பெயரில் புத்தகங்கள் அதிக அளவில் வெளிவர வேண்டும். அம்பேத்கார் பிறப்பால் இந்து, ஆனால் சாகும்போது இந்து அல்ல என்று கூறினார். அம்பேத்கார் ஓர் சீர்திருத்தவாதி. சமுதாயப் பிரச்சினைகளை அறிந்து அதைப் போக்க செயல்பட்டார்'' என்றார்.

விழா இறுதியில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் நன்றி கூறினார்.

**அ. மருது**



# கோவையில் பாவேந்தர் விழா

இதுவரை சென்னையிலே கொண்டாடப்பட்டு வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்தநாள் விழா, இந்த ஆண்டு முதன் முதலாகக் கோயம்புத்தூரிலுள்ள மாநகராட்சிக் கலையரங்கில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

29.4.84 அன்று காலை 9மணியளவில், பழனி இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது. மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் இவ்விழாவில் பார்வையாளர்களாக வருகை தந்திருந்தார்கள்.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையோடு துவக்கப்பட்ட பாவேந்தரின் 94வது பிறந்த நாள் விழாவிற்குத் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தலைமை தாங்கினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோருக்குத் தகும் மதிப்பளிக்கும் நாடு இது. அந்த வகையிலேயே பாவேந்தர் பாரதிதாசனாரின் பிறந்த நாள் விழா தமிழக அரசால் இன்று கொண்டாடப்படுகிறது.

''நாட்டு உணர்வுக்கு முதன் முதல் பாரதி பாடினான்; மொழி உணர்வுக்குப் பாடினார் பாரதிதாசன். அவருக்கிருந்த அந்தப் பற்று, தாய் மீதிருந்த பாசம் போன்றிருந்தது. ஆடவர் மகளிரிடையே மலர்வதுதான் காதல் என்போம் நாம். அவரோ, தமிழ் நாட்டவர்க்கெல்லாம் தமிழ் மொழி மீதுதான் காதல் என்றார். பெண்ணடிமை தீருமட்டும் இங்கே மண்ணடிமை தீருவது முயற்கொம்பே என்றவர் அவர். தமிழுணர்வும் தன்மான உணர்வும் இருந்ததாலேயே சமுதாயப் பிரச்னைகள் பற்றி யாருக்கும் அஞ்சாமல் அவர் பாடினார்.

### அமைச்சர் உரை

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது:

''மற்றவர்கள் தமிழ் எழுத்துக்களை எழுதினார்களென்றால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் தமிழைப் பற்றியே எழுதினார்; தமிழர்களைப் பற்றியே எழுதினார்.

''அமெரிக்க நாட்டிலே ஒரு பாரதிதாசன் இருந்தான், அவன் பெயர் வால்ட்விட்மன்'' என்று கூறி அவரைப் பெருமைப்படுத்தினார் பேரறிஞர் அண்ணா. பாரதியாரின் தாக்கம் - வேகம் எல்லாம் பாவேந்தரின் பாடல்களிலே அப்படியே இருப்பதை நாம் காணலாம். பாரதி, காலம் தந்த கவிஞர் என்றால், பாரதிதாசன் காலத்தை வென்ற கவிஞன்.

''தமிழினம் மேம்படவில்லையே என்ற ஏக்கத்தின் வெளிப்பாடே பாரதிதாசன் கவிதைகள். தமிழின் வளர்ச்சிக்காகவாழ்வதானால் இந்தியா வாழட்டும்; தமிழின் தளர்ச்சிக்காக வாழ்வதானால் அது வீழட்டும்' என்று பாடிய துணிவு அவருடைய தனிச் சொத்து.

### கருத்தரங்கம்

'பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில்...' எனுந்தலைப்பில் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில்-முதலாவதாக 'காப்பிய அமைதி' என்ற தலைப்பின் கீழ் பேசிய திரு இல.செ.கந்தசாமி- ''சாதி ஒழித்தல் ஒன்று; தமிழ் வளர்த்தல் மற்றொன்று என்பதே பாரதிதாசனாரின் ஒப்பற்ற கொள்கைகள். இப்படிப்பட்ட விழாக்களெல்லாம் அப்படிப்பட்ட எழுச்சியை உண்டாக்குவதாக அமைய வேண்டும்'' என்றார்.

'மகளிர் முன்னேற்றம்' என்ற தலைப்பில் உரையாற்றிய திருமதி உமையாள் முத்து, ''கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் என்று கூறி பெண்கல்வியை வலியுறுத்தி, கைம்பெண்களும் வாழ்வு பெறக் குரல்கொடுத்து, குழந்தை மணக்கொடுமை கண்டு குமுறி, கண்ணகி பற்றியும் மணிமேகலைபற்றியும் தனித்

தனிக் காப்பியம் பாடி, பெண்கள் முன்னேறப் பாடுபட்டவர்-பாட்டெழுதிக் குவித்தவர் பாரதிதாசனார்'' என்றார்.

'தமிழுணர்வு' எனும் பொருளில் பேசுகையில், பேராசிரியர் சோ.சத்தியசீலன் குறிப்பிட்டதாவது; ''இந்த நாட்டில் எல்லோருக்கும் தமிழ், ஒரு மொழி; பாவேந்தருக்குத் தமிழ் என்பது உணர்வு; மொழி என்பது உயிர், அவர் பிறந்த பின்னாலேதான் இந்த நாட்டில் தமிழுணர்வு பிறந்தது என்பதைப் புரட்சிக் கவிஞரின் பிறந்தநாள் செய்தியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

டாக்டர் சிவகாமிசுந்தரி 'தன்மானஉணர்வு' என்பதையொட்டி உரை நிகழ்த்துகையில் "பாரதிதாசனாரின் எழுத்துக்களில் தன்மான உணர்வு பெரிதும் காணப்படத் தந்தை பெரியாரே முழுமுதற் காரணம்'' என்றார். ''தமிழையே தன்மானத் தமிழ் எனக் குறிப்பிடுமளவுக்கு அவருடைய எழுத்து, அவருடைய பேச்சு, கவிதை எல்லாமே தன்மானத்தை அடிப்படையாகக் கொண்டே பிறந்தன'' என்றும் அவர் கூறினார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சிலம்பொலி திரு சு. செல்லப்பன் 'உலகக் கண்ணோட்டம்' என்ற பொருளில் பேசிய பேச்சு விவரம் வருமாறு:

''நான் என்ன சொல்லுகிறேன் என்று பாருங்கள்; நான் என்ன செய்கிறேன் என்பதைப் பார்க்காதீர்கள், என்றவர் புரட்சிக் கவிஞர். 'கடினமான பாட்டுக்குக் கனகசுப்புரத்தினம்' என்றிருந்த அவர் பாட்டில், பிற்காலத்திலே பாரதியாரோடு சேர்ந்த பிறகே புதுநடை - எளியநடை உண்டாயிற்று. தொடக்கத்திலே தேசிய இயக்கத்தில் பற்றுக் கொண்டிருந்த அவர், ராட்டைப் பாட்டு, வயலூர் சுப்பிரமணியக் கடவுள் மேல் பக்திப் பாடல்களெல்லாம் பாடியவர்தான். பிறகு தான் ''மடையர்களும் பாடிடுவார் கடவுட்பாடல்'' என்று பாடும் அளவுக்கு மாறினார். தமிழ் என் உயிர் என்று சொன்ன முதற் கவிஞன் பாரதிதாசன் தான். தமிழையே பாடிக் கொண்டிருந்த அவன் உலகப் பற்றோடு இருந்திருக்க முடியுமா என்பார்கள்; தன் குழந்தை மீது பற்று வைக்காத எவனும் உலகக் குழந்தைகள் மீது பற்று வைக்க முடியாது. அவரெழுதிய ஆத்திசூடியில் 'அனைவரும் உறவினர்' என்றெழுதி, அதற்கு 'உலகமக்கள் அனைவரும் நமக்குஉறவினர்கள்' என்று பொருளும் எழுதியிருக்கும் அவர், 'உலகம் பொது', 'வையம் வாழ வாழ்' என்றெல்லாம் உலக நோக்கோடுதான் அதில் எழுதியிருக்கிறார்.

**மாலை நிகழ்ச்சிகள்**

புலவர் சுந்தரராசனார், புலவர் சையத்தாசுதீன் ஆகியவர்கள் பாவேந்தரின் பாடல்களை இசையோடு பாட, மாலை நிகழ்ச்சி தொடங்கியது.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு வி .டி. வீரப்பன் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் - கவிஞர்கள் திரு.முத்துராமலிங்கம் (எதிர்பாராத முத்தம்), திருமதி குருவம்மாள் (இருண்ட வீடு), திரு.சிதம்பரநாதன் (குடும்ப விளக்கு), திரு.சக்திக் கனல் (தமிழியக்கம்), திருமதி நிர்மலா சுரேஷ் (இசையமுது), திருமதி அன்புவல்லி (பாண்டியன் பரிசு), திரு.சிற்பி பாலசுப்பிரமணியம் (அழகின் சிரிப்பு) ஆகியோர் பங்கேற்றனர்.

மாவட்ட செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் திரு பொன் சுப்பையன் நன்றியுரையாற்றினார்.

# கோவை பொருட்காட்சி நிறைவு விழா



கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைத் திடலில் அமைந்திருந்த அரசுப் பொருட்காட்சி நிறைவு விழாவும், பாரதிதாசனாரின் பிறந்தநாள் விழாவும் (29.4.84) சிறப்புற நடைபெற்றன.

மாலை 5 மணியளவில், பொருட்காட்சித் திடலில் அமைந்திருந்த அறிஞர் அண்ணா கலையரங்கில் - அரசவைக்கலைஞர் டாக்டர் சீர்காழி கோவிந்தராசன், டாக்டர் எஸ்.ஜி.சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி விழாத் தொடக்கமாக அமைந்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ந.ஆதிமூலம் இ.ஆ.ப., 52 நாட்கள் நடைபெற்ற இந்தப் பொருட்காட்சியின் நிறைவு விழாவில் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவுக்கு, மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

புரட்சிக் கவிஞர் . பாரதிதாசனாரின் பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் திறந்துவைத்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், சிறந்த கவிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவியரசு நா. காமராசனுக்கு 4 பவுனில் உருவாக்கப்பட்ட பாரதிதாசன் விருதுப்பதக்கமும், பத்தா




யிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கிச் சிறப்பித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே.வி.கந்தசாமி, கோவைத் தம்பி, உவமைக் கவிஞர் சுரதா ஆகியோர் உரையாற்றினர்.

கவியரசு நா.காமராசன் பேசுகையில்,''நான் பெற்ற விருதுக்கு என் திறமை மட்டுமே காரணமல்ல, நான் எங்கிருந்தபோதும் என்மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் காட்டி வந்த அன்பும் ஆதரவுமே காரணம்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்.

**கல்வியமைச்சர்**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு.அரங்கநாயகம் அவர்கள் பேசியதாவது.;

''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திராவிட இயக்கத்தின் ஆணிவேராக இருந்தவர். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் - தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவைப் போற்றுவது போலவே பாவேந்தர் பாரதிதாசனாரையும் போற்றுவார்கள். சமுதாய முன்னேற்றத்திற்கெனப் பாடிய அவரது பாடல்கள், தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களிலெல்லாம் இசை நிகழ்ச்சிகளாக நடத்தப்பட வேண்டும். அரசு அதற்கு என்றைக்கும் நல்லாதரவு தரும்.''

**செய்தித்துறை அமைச்சர்**

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம். வீரப்பன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தின் தளநாயகராம் புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ் வளர்ச்சிக்கென எடுத்துவரும் முயற்சிகளைத் தமிழகம் அறியும். தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்குகிற நம் முதல்வரின் தன்மைக்கு, கோவையில் அரசு சார்பில் ஒரு நாள் விழாவாகக் காலை முதல் நடத்தப்படும் இந்தப் பாவேந்தரின் பிறந்த நாள் விழா ஒரு உதாரணம்.

''எங்களுக்கு முன்னாலே ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள், நாங்கள்தான் தமிழைக் காக்க வந்தோம்' என்று சொல்லிக் கொண்டார்களே தவிர, அப்படி நடந்து கொண்டார்களில்லை. மனோன்மணீயம்சுந்தரம்பிள்ளை எழுதிய 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக்கி யிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான். ஆனால் அந்தப் பாட்டைச் சிதைத்து, கருத்தே மாறும்படி ''ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்...'' என்ற அடியையே நீக்கியிருக்கிறார்களே; செய்யலாமா? நியாயந்தானா?

''தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை எனத் தமிழின் வளர்ச்சிக்குத் தனியொரு துறையே அமைத்திருப்பது இந்த அரசு.

''இது பொருட்காட்சி நிறைவு விழாவும் ஆகும்; ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல டிக்கட் எடுத்துக்கொண்டு பொருட்காட்சி காண வந்தவர்களால் அரசுக்கு வருமானம்; கடைசி நாளான இன்றைய வசூல் மட்டுமே 20 ஆயிரம் ரூபாயைத் தாண்டியிருக்கிறது. இங்கே பாவேந்தரின் பிறந்த நாள் விழாவும் நடத்தப்படுகிறது. இந்தப் பொருட்காட்சி மூலம் ஏறத்தாழ ஏழே முக்கால் இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாய் வரை நிகர வருவாய் -இலாபம் வந்திருக்கிறது.

**நிதியமைச்சர்**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

''ஆட்சிப் பொறுப்பிலிருப்போர் கலையுள்ளம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னான் பேரறிஞன் பிளாட்டோ. அந்த வகையிலே திகழ்பவர்தான் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர்.

''நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்னாலே காந்திக்கும் நேருவுக்கும் மட்டுமே அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டது. பிறகுதான் பாவேந்தர் பாரதிதாசன் போன்ற அறிஞர் பெருமக்களுக்கு எல்லாம் நாங்கள் விழா எடுத்து வருகிறோம். விரைவில் ராஜ ராஜ சோழனின் ஆயிரமாவது முடிசூட்டு நாள் விழாவும் அரசு சார்பிலே நடத்தப்படவிருக்கிறது.

''எட்டு வயதிலே கவிதை எழுதிப் புகழ்பெற்றான் பாரதி; பிரஞ்சு நாட்டுக் கவிஞன் விக்டர் ஹ்யூகோ பதினைந்து வயதிலே கவிதை எழுதிப் பாராட்டப்பட்டான்; எமிலிஜோலா பதினைந்து வயதிலேயே எழுத்தால் பெருமை பெற்றான்; பேகன் பதினாறு வயதிலும், இர்வின் 20 வயதிலும், மாஜினி இருபத்திரண்டு வயதிலும் இணையற்ற எழுத்தாற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். பாரதிதாசனோ தமது பத்தாவது வயதிலேயே பாரதியின் முன்னால்கவிபாடிக்காட்டிப் புகழும் பாராட்டும் பெற்றவர். விசையொடிந்த தேகத்தில் வேகம் தோன்றப் பாடிய புரட்சிக் கவிஞருக்கு விழா எடுப்பதில் 'தமிழக அரசு பெருமை கொள்ளுகிறது.''

**அரங்கங்களுக்குப் பரிசு**

பொருட்காட்சியில் பங்கேற்ற அரங்குகளுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். அதன் விவரங்கள் வருமாறு:

அரசுத்துறை அரங்குகளில், ஊரக வளர்ச்சித்துறை, சிறு சேமிப்புத் துறை, இந்துசமய அறநிலையத்துறை ஆகியவற்றுக்கு முதல் பரிசு. இரண்டாம் பரிசு பெற்றது மருத்துவக் கல்வித் துறை அரங்கு. அரசு சார்புத் துறை அரங்குகளில் முதல் பரிசை சேரன் போக்குவரத்துக் கழகம், கோவை மாநகராட்சி இரண்டும் பெற்றன; குடிநீர் வடிகால் வாரியம் இரண்டாம் பரிசு பெற்றது.

மத்திய அரசுத் துறைகளின் அரங்குகளில் தென்னிந்திய ரயில்வேயுக்கு முதல் பரிசு; கைவினைப் பொருட்கள் அரங்குக்கு இரண்டாம் பரிசு. கார்போமா குழு அரங்குக்கு மூன்றாம் பரிசு. தனியார் அரங்குகளில் ராயல் ஏஜன்சீஸ், சந்திரிகா அரங்கு இரண்டும் முதல் பரிசைப் பெற்றன.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—இல. இராசேந்திரன்**



# நலிந்த மக்கள் நலம் பெற..

சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டுக்காக, பஞ்சாப் நேசனல் வங்கி 23.4.84 அன்று சென்னை தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் கடன் வழங்கும் விழாவை நடத்தியது.

விழாவிற்கு வந்திருந்தோரை மண்டலமேலாளர் திரு ஆர்.கே. குப்தா வரவேற்று உரையாற்றுகையில், 'கடன் பெறுகிறவர்கள் வாங்கிய கடனை முறையாகத் திருப்பிச் செலுத்தினால், இந்த வங்கி மேலும் கடன் உதவி செய்யும்' என்றார்.

நலிவுற்றவர்கட்குக் கடன் உதவித் தொகைகளை வழங்கி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாவது;

''இன்று 1,000 பேருக்கு மேல் பல்வேறு உதவிகள் இந்த வங்கி மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கொடுத்த முதலீட்டை நல்லமுறையில் செலவு செய்து பயன் பெற வேண்டுகிறேன். தேசிய மயமாக்கப்பட்டபின் வங்கியின் நோக்கம் இன்று நிறைவேற்றப்படுகின்றது.

'எல்லா வங்கிகளும் 30% லிருந்து 40% கடன் உதவி நலிவுற்ற மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாங்கிய கடனை வங்கிகளுக்குத் திருப்பிக் கொடுத்தால்தான் வங்கிநிர்வாகிகளுக்கு உற்சாகம் ஏற்படும்.

'' இங்கு கடன் உதவி நலிவுற்ற மக்களுக்கு முன்வந்து கொடுத்த பஞ்சாப் நேசனல் வங்கிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தலைவர் திருமதி ஈ. வெ. கி. சுலோசனா சம்பத் அவர்கள் தலைமை உரையாற்றுகையில்,

''நலிந்த மக்களை வளம்படுத்தப் பாடுபட்டார் பெரியார். நல்லபல ஆற்றலால் மக்களை மேம்படுத்தப் பாடுபட்டார் அண்ணா. முதல்வர் அவர்கள் மற்றவர்கள் சமமாக வாழவேண்டுமென்று கருதி இதுபோன்ற பணிகளைச் செய்து ஊக்கம் அளித்து வருகிறார். ரூ.6.5 இலட்சம் செலவில் கடன் உதவி வழங்கப்படுகிறது.

''இந்தத்திட்டத்தின் கீழ் நலிவுற்ற மக்கள் முன்னேற்றம் பெற ஒரு சிறந்த வாய்ப்பாகும். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நல்ல முறையில் வாழ்க்கையில் முன்னேற்றமடைய உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்''.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய். எஸ். எம். யூசுப் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ''நலிந்த மக்களுக்கு உதவிசெய்ய வந்த பஞ்சாப் நேசனல் வங்கியின் பணியைப் பாராட்டுகிறேன். அக்காலத்தில் அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கியில் கடன் உதவிகள் மிகப்பெரிய பணக்காரர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டது. அதனால் பணக்காரர்கள் பெரிய பெரிய செல்வந்தர்களாக வளர்ந்தார்கள். ஆனால் இப்பொழுது இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினர், ஆதிதிராவிடர், பெண்கள் பயன்பெறுகின்றனர்'' என்றார்.

விழா இறுதியில் வங்கி வட்டார மேலாளர் திரு கே.எஸ். சேகர் நன்றி கூறினார்.

**—அ. ம. விநாயகம்**

---

இந்த வங்கி....

பஞ்சாப் நேஷனல் வங்கி சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே 1895ல் இந்திய மக்களுக்காக இந்தியர்களாலேயே இந்தியர்களின் மூலதனத்துடன் லாகூரைத் தலைநகராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட முதல் இந்திய வங்கி என்ற தனிச்சிறப்புடையது. மாபெரும் தேசியப் போராட்ட வீரர்களும், தேசப் பற்றுமிக்க தலைவர்களுமான பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய், சர்தார் தயால் சிங், மஜீதியா, லாலா ஹரிகிருஷ்ணன் லால், மகாத்மா ஹன்ஸ்ராஜ், புருஷோத்தம் தாஸ் தாண்டன் போன்ற பெயர்களின் பெரு முயற்சியால் இது உருவானது.


சுயவேலை வாய்ப்புக்காகப் பலவகைத் திட்டங்களின் மூலம் இவ்வங்கி சமூகத்தில் நலிவுற்ற 12,240 பேருக்கு (மார்ச் 1984 கணக்குப்படி) உதவிசெய்துள்ளது.



# தமிழறிஞர்களை தமிழக அரசு மறக்காது!

தமிழ்நாட்டுக்குத் தொண்டு செய்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு அதங்கோட்டாசான் சிலை திறப்பு விழா, அமரர் ஜீவா சிலை திறப்பு விழா, சதாவதானி, செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழா 29.4.84 அன்று நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கில் சிறப்புடன் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ண பாரதி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இந்தியாவின் தென்கோடியில் உள்ள பகுதி; பல அறிஞர்களை உருவாக்கிய மாவட்டம் இது. அவர்கட்குச் சிறப்புச் செய்யும் வகையில் இந்த விழா கொண்டாடப்படுகிறது'' என்றார்.



விழாவிற்குத் தலைமை வகித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப. அவர்கள் உரையாற்றுகையில், 'தமிழறிஞர்களை இந்த அரசு மிகவும் பெருமைப்படுத்திப் பாராட்டுகிறது' என்றார்.

திரு. என்.டென்னிஸ், எம்.பி. பேசுகையில், 'இன்று வரலாற்றின் மிக முக்கிய நாள். தமிழ் மொழிக்கும், தேசத்திற்கும் இவர்களது தொண்டு பாராட்டத் தக்கது' என்றார்.

தமிழ்நாடு சட்டமன்ற ஜனதா கட்சித் தலைவர் திரு பி. முகமது இஸ்மாயில், எம்.எல்.ஏ. பேசுகையில், ''பல உண்மைகளை இது போன்ற விழாக்களின் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்துவது பற்றி மகிழ்ச்சி. உலகத் தமிழ் நிறுவனம், மறைந்த தமிழ் அறிஞர்கள் பற்றி ஆராய்ந்து வருவது பாராட்டத் தக்க செயலாகும்'' என்றார்.

சட்டமன்றஅகில இந்திய பார்வர்டு பிளாக்தலைவர், திரு எஸ். ஆண்டித்தேவர் எம்.எல்.ஏ. பேசுகையில், ''வருங்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கு இதுபோன்ற விழாக்கள் நடத்தப்படுகின்றன. எந்த அரசியல் கட்சித் தலைவர் என்று கருதாமல், யார் என்று பார்ாமல் பாராட்டுகின்றது இந்த அரசு'' என்றார்.

திராவிடக் கழகத் தலைவர் திருவாரூர் கே. தங்கராசு பேசுகையில், ''இந்தியாவின் ஸ்டாலின் ஜீவா என்று குறிப்பிட்டால் தவறு இல்லை. செய்குத்தம்பிப் பாவலர் இளம் வயதில் நன்னூலை மனப்பாடமாகப் பயின்ற இலக்கணப் பண்டிதர், அகத்தியம் பற்றி உலகத் தமிழ் நிறுவனம் ஆராய வேண்டும்'' என்றார்.

கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் திரு சு.முத்துக்கிருஷ்ணன் பேசுகையில்,

'குமரி மாவட்டத்தில் தமிழ்ப் புலவர்கள் தோன்றித் தமிழை வளர்த்தது பெருமைக்குரியது' என்றார்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ., பேசுகையில், 'உலகத்தின் தொட்டில் ஏதென்ஸ் என்றால், தமிழின் தொட்டில் குமரியாகும். அருந்தமிழில் பழம்பெரும் சொற்கள் குமரி மாவட்டத்தில் நிறைய உள்ளன. இந்தச் சொற்கள்





அழிந்து விடக் கூடாது. அவற்றைச் சேகரித்துக் காக்கும் பணியில் அரசு ஈடுபட வேண்டும் என்று விரும்புகின்றேன். சிலேடைப் பேச்சில், எழுத்தில் திறன் படைத்தவர் பாவலர். ஆதிதிராவிட மக்களை சுசீந்திரம கோவிலுக்கு அழைத்துச் சென்றவர் ஜீவா'' என்றார்.

தமிழ்நாடு முஸ்லிம் லீக் செயலாளரும் செய்குத்தம்பிப் பாவலரின் பேரனுமான திரு செய்குத்தம்பி அவர்கள் பேசுகையில், 'இங்கு தமிழுக்கு, தமிழ் அன்னைக்கு விழா நடத்தப்படுகிறது. யார் வல்லவர்களாக இருந்தாலும் அவர்களது நினைவாகச் சின்னங்கள் ஏற்படுத்துவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்' என்றார்.

நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு எம். நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் பேசுகையில், ''குமரி மாவட்டத்தில் இன்று எழுச்சி மிக்க நாளாகும்'' என்றார்.

சட்டமன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவர் திரு என்.சங்கரய்யா எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், 'தமிழுக்கு சீரிய வகையில் தொண்டு செய்த குமரி அறிஞர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் வாழ்ந்த காலத்தை எண்ணி மக்கள் செயல்பட வேண்டும்' என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் (இ) தலைவர் திரு எம்.பழனியாண்டி அவர்கள் பேசுகையில், 'சட்டமன்றத்தில் பணியாற்றியபோது எனக்கும் ஜீவாவுக்கும் தொடர்பு உண்டு. இது போன்ற தமிழ் அறிஞர்கட்கு இவ்வளவு நாள் சிறப்புச் செய்யாதது வருந்தத்தக்கது' என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு எம்.கல்யாணசுந்தரம், எம்.பி. அவர்கள் பேசுகையில், ''நானும் ஜீவாவும் 45 ஆண்டுகள் தொடர்பு உள்ளவர்கள். தமிழ் அறிஞர்கட்கு விழா எடுப்பது பாராட்டுக்குரியது'' என்றார்.

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் உரையாற்றுகையில், 'பலருக்கு அதங்கோட்டாசான் பற்றித் தெரியாது. பொதுவுடைமையைச் சார்ந்த ஜீவா அவர்கள் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். பாவலர் செய்குத்தம்பி போன்றவர்கட்கு விழா



நடத்தி மறுமலர்ச்சி ஏற்படுத்தித் தந்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கட்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றார்.

மாண்புமிகு சுற்றுப்புறச் சூழ்நிலை அமைச்சர் திரு எஸ்.என். ராசேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில், ''சாதிமத பேதத்திற்கு அப்பாற்பட்ட வகையில் முதல்வர் அவர்கள் இந்த விழாவை ஏற்படுத்தி உள்ளார்கள். தமிழ் அறிஞர்கட்கு இந்த அரசுதான் சிறப்புச் செய்து வருகின்றது' என்றார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது;


''மலையாள நாட்டில் இருந்த தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் ஆர்வம் காட்டியவர் ஜீவா. அவர் தலைமறைவாக இருந்த காலத்தில் நள்ளிரவில் சாயபு வேடத்தில் என்னைச் சந்தித்தார்.


''திரு.வி.க., கதிர்வேலுப் பிள்ளை ஆகியோருடன் சேர்ந்து ஒரே மேடையில் பேசினார் பாவலர். எல்லைப் போராட்ட வீரர்களுக்கும், இன்னும் பல அறிஞர்கட்கும் இதுபோன்ற விழாக்களை நடத்த வேண்டும்.

சிலைகளைத் திறந்து வைத்தும், நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியும், நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்கூறும் நல்லுலகத்துக்குப் பெருமை சேர்க்கும் முப்பெரும் விழா இது. இந்த முப்பெரும் விழாவில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கிறது. சிலை வைப்பது, மண்டபம் ஏற்படுத்துவது அரசின் கொள்கையானாலும், அதை யார் விமர்சனம் செய்தாலும் தமிழ் அறிஞர்கட்கு இதுபோன்ற விழாக்களைச் செய்ய வேண்டிய கடமையாக அதைக் கருதுகின்றேன். எனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஒரே ஒரு கடவுள்தான். அந்தக் கடவுள்தான் என் தாய். என்னை மனிதனாக வளர்த்தது அண்ணா என்ற கடவுள்.

''தமிழைப் பற்றிச் சந்தேகம் வந்தால், அதற்குத் தெளிவான பதில் தேட தொல்காப்பியத்தைப் பார்க்கிறோம். தமிழுக்கு அடிப்படை ஆதாரங்கள் தந்தது





''நாகர்கோவில் இடலாக்குடியில் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் நினைவு மண்டபம் கட்டும் இடத்தைப் பார்வையிட்டும், சமாதியில் மலர்மாலை வைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மரியாதை செலுத்தினார்கள்.

விழாவில் அமரர் ஜீவா குடும்பத்தினரும், செய்குத்தம்பிப் பாவலர் குடும்பத்தினரும் சிலைகளைச் செய்த சிற்பிகளும் சிறப்பிக்கப்பட்டனர்.

தொல்காப்பியம்தான். தொல்காப்பியம் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

''செய்குத் தம்பிப் பாவலரைப் பற்றி என் மனத்தில் பதிய வைத்தவர் கலைவாணர்தான். கலைவாணர் தமிழுக்குத் தொண்டு புரிந்தார். எல்லோருக்கும் உரிய நேரத்தில் மரியாதை கொடுத்தார்.

''நினைவு ஆற்றல் மிகுந்தவர் செய்குத் தம்பிப் பாவலர். எனவேதான் அவர் சதாவதானியாகத் திகழ முடிந்தது. செய்குத் தம்பிப் பாவலரைப் பற்றி இக்கால இளைஞர்கட்குத் தெரியாது. அவர் செய்த சாதனைகளையெல்லாம் மக்களுக்குத் தெரிவிக்க அரசு விரும்புகிறது. இங்கு கட்டப்படும் மண்டபத்தில் பாவலரின் நூல்கள் தயாரிக்கப்பட்டு, நூலகம் போன்று அமைக்கப்படும்.

''1934ல் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்தான் எனக்கு ஜீவாவை அறிமுகப்படுத்தினார். ஜீவாவை முதன் முதலில் பார்த்தபோது குஸ்தி வீரனைப்போன்று காணப்பட்டார். அப்போது அவருக்கு வயது 21. காங்கிரஸ்காரனாக நான் இருந்தேன். நான் முதன் முதலில் கேட்ட அரசியல் கூட்டம், பெரம்பூரில் நடந்த 'ஜீவா' பொதுக்கூட்டம் தான்.

''தமிழுக்காகச் சேவை செய்த தமிழ் அறிஞர்களை இந்த அரசு மறக்காது. வெளிநாட்டினரும் தமிழுக்குத் தொண்டு செய்தால் அவர்களையும் இந்த அரசு மதிக்கும்''

விழா இறுதியில் பொதுப் பணித்துறைச் செயற் பொறியாளர் திரு எம்.ஞானராஜ் நன்றி கூறினார்.

**அ. மருது**



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# தமிழரசு

